இந்தியாவைப்பற்றி....

கார்ல் மார்க்ஸ்

ஸ்டார்
பிரசுரம்

முதற் பதிப்பு—ஜூன், 1952

விலை ரூ. 1—8—0

STAR PUBLICATIONS
TRIPLICANE MADRAS-5

பொருளடக்கம்

முன்னுரை—பாமிதத் ... 5
இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ... 25
இந்திய மசோதா
    (அ) முன்னுரையாக ... 33
    (ஆ) ஸர் சார்லஸ் வுட்டின் போலிச் சமாதானம் ... 35
    (இ) சீர்திருத்தத்தின் உண்மை ... 40
கிழக்கிந்தியக் கம்பெனி ... 43
இந்தியாவின் அரசாட்சி ... 53
சுதேசி சமஸ்தானங்கள் ... 62
பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியர்வுக்கு ஏற்படவிருக்கும் விளைவுகள் ... 68
இந்தியப் பொதுவுடைமைப் பொருளாதாரம் ... 76
முதலாளித்துவத்தின் பலாத்காரப் பிரவேசம் ... 86
காலனிகளில் ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முதலாளித்துவ முறைகள் ... 92

PRINTED AT
THE SUNDAY TIMES PRESS,
MADRAS-6

முன்னுரை

[ரஜனி பாமிதத்]

"மார்க்ஸிஸத்தின் நிலையான வாசகங்களுடைய வரம்புகளுக்குள் இந்தியாவின் பிரச்னையைப் படித்தறியும் முயற்சி, சமத்காரமானதாக விருக்குமே யல்லாது, சோஷலிஸ முன்னேற்றத்துக்கு அறிவுத் துறையில் உண்மையான ஒத்தாசை அளிப்பதாக இருக்காது" என்று பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னால் கூட ஒரு முக்கியமான சோஷலிஸ்ட் எழுத்தாளர் அபிப்பிராயம் கூற முடிந்தது. (பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவராயிருந்த **ஹாரோல்ட் லாஸ்கி** 1927-ல் பிரசுரித்த "கம்யூனிஸம்" என்ற அவருடைய நூலில் 194-ம் பக்கத்தில் அவ்வாறு எழுதுகிறார்.)

கார்ல் மார்க்ஸ் இடைவிடாமல் இந்தியாவைப் பற்றிச் சிந்தித்து ஆராய்ந்ததைத் தெரிந்து கொள்ளாத அறியாமை, மேற்கு ஐரோப்பிய சோஷலிஸ்ட் சிந்தனையாளர்களுடைய குறைபாடுகளுக்குத் தகுந்த உதாரணமாகும். உண்மையில், 1853-ல் இந்தியாவைப் பற்றி கார்ல்மார்க்ஸ் வரிசையாக எழுதிய கட்டுரைகள், அவருடைய தலை சிறந்த இலக்கியப் படைப்புகளுடன் இடம் பெறத் தக்கவையாகும்; அவர் பரிசீலனை செய்த பிரச்னைகளைக் குறித்து நவீன காலச் சிந்தனையாளர்கள் ஆராயும்பொழுது, அவருடைய கட்டுரைகளை முதற் பாடமாகக் கொள்கின்றனர். ஆசியாவின் பொருளாதார அமைப்பில், குறிப்பாக இந்திய, சீன நாடுகளுடைய பொருளாதார அமைப்பில் உள்ள அலாதியான பிரச்னைகளையும், அந்தப் பொருளாதார அமைப்பின் மீது ஐரோப்பிய முதலாளித்துவம் மோதியதால் நேரிட்ட விளைவுகளையும், இவற்றிலிருந்து எதிர்கால உலகப் போக்கு சம்பந்தமாகவும், இந்திய-சீன மக்களுடைய விமோசனம் சம்பந்தமாகவும் எழும் முடிவுகளையும் பற்றி மார்க்ஸ் முக்கிய கவனம் செலுத்தினார்; மார்க்ஸ் நூல்களை நன்கு கற்றறிந்தவர்கள் இதை அறிவார்கள். "மூலதனம்" என்ற அவருடைய ஆராய்ச்சி நூலில், இந்தியாவைப் பற்றி சுமார் ஐம்பது இடங்களில் அவர் குறிப்பிடுகிறார்; மார்க்ஸ்—ஏங்கல்ஸ் கடிதப் போக்குவரத்தில் இன்னும் அதிகமான இடங்களில் இந்தியாவைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப் படுகிறது; மார்க்ஸ் இந்தியாவைப் பற்றி உன்னிப்பாகச் சிந்தித்து வந்தாரென்பதை அவை எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய, சீன மார்க்கெட்டுகளுடன் தொடர்பு ஏற்பட்டிருப்பதால், முதலாளித்துவ உற்பத்தி முறை மேற்கொண்டு வளர

முடியுமென்று மார்க்ஸும் ஏங்கல்ஸும் "**கம்யூனிஸ்ட் அறிக்கை**"யில் சுட்டிக் காட்டினார்கள். அதைத் தொடர்ந்து, *1848*-ம் வருடப் புரட்சி தோல்வியுற்றபொழுது, அந்த எழுச்சியின் வீழ்ச்சிக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய, மார்க்ஸ் முற்பட்டார். ஐரோப்பாவுக்கு வெளியே, — அதாவது ஆசியாவுக்குள்ளும் ஆஸ்ட்ரேலியாவுக்குள்ளும் காலிபோர்னியாவுக்குள்ளும் (காலிபோர்னியா அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கிய உறுப்பு; பஸிபிக் மகா சமுத்திரக் கரையிலுள்ளது.) முதலாளித்துவம் புதிதாக விஸ்தரித்து வருவதே *1848*-ம் வருஷப் புரட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம் என்பதைக் கண்டார். *1852*-லேயே இந்த சிந்தனையோட்டம், ஏங்கல்ஸ், மார்க்ஸுக்கு எழுதிய கடிதத்தில் (*1852* ஆகஸ்ட் *21*) பிரதிபலிக்கிறது. *1858*-ம் வருஷத்தில் மார்க்ஸ், ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில், இக்கருத்து மேலும் துலாம்பரமாக விளக்கப்பட்டுள்ளது. "முதலாளித்துவ சமூகம் அதன் பதினாறாம் நூற்றாண்டு வாழ்வை இரண்டாவது தடவை அனுபவித்துக்கொண்டிருக்கிறதென்பதை நாம் மறுக்க முடியாது. பதினாறாம் நூற்றாண்டு, முதலாளித்துவ சமூகத்திற்குப் பிறப்பளித்ததைப் போலவே, இன்றுள்ள பதினாறாம் நூற்றாண்டு நிலை அதற்குச் சாவுமணி அடிப்பது நிச்சயமென்று நான் நம்புகிறேன். உலக மார்க்கெட்டை, அல்லது அதன் பிரதான அம்சங்களையாவது சிருஷ்டிப்பதும் அதன் அடிப்படையில் உற்பத்தியை ஸ்தாபிப்பதும் முதலாளித்துவ சமூக முறையின் விசேஷக் கடமை. உலகம் உருண்டையாகவிருப்பதால், காலிபோர்னியாவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் குடியேறியதுடன், சீனாவுடனும் ஜப்பானுடனும் தொடர்பு ஏற்பட்டதுடன், அந்தக் கடமை பூர்த்தியடைந்துவிட்டது போலத் தோன்றுகிறது. இப்பொழுது, நமக்கு முன்னுள்ள முக்கியமான கேள்வி இதுதான் :—ஐரோப்பாவில் புரட்சி சமீபித்துக் கொண்டிருக்கிறது; அது தொடக்கத்திலிருந்தே சோஷலிஸ்ட் புரட்சியாகவிருக்கும். ஆனால் இன்னும் விரிவான பிரதேசத்தில் பூர்ஷுவா சமூகத்தின் இயக்கம் ஓங்கி வளர்வதால், இந்தச் சிறு மூலையில் புரட்சி நசுக்கப் படுவதைத் தவிர்க்க முடியாதல்லவா?" (ஏங்கல்ஸுக்கு மார்க்ஸ் கடிதம்; *1858*, அக்டோபர் *8*)

ஐரோப்பாவுக்கு வெளியே முதலாளித்துவம் விஸ்தரிப்பதால், ஐரோப்பாவில் முதலாளித்துவமும் சோஷலிஸ்ட் புரட்சியும் எப்படிப் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பற்றிய தெளிவு இதில் பொதிந்து கிடக்கிறது. இந்த முக்கியமான கருத்தை *1850—60*-லேயே மார்க்ஸ் கிரஹித்துக் கொண்டு விட்டார்; ஆனால் சமீப காலத்தில்தான் ஐரோப்பிய சோஷலிஸ்ட்களில் பெரும்பாலோர் இதைப் பையப்பைய உணரத் தொடங்கியிருக்கின்றனர்.

1853-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் உரிமைச் சாசனத்தைப் புதுப்பிக்கும் விஷயம் கடைசித் தடவையாக பார்லிமெண்டுக்கு

வந்தபொழுது, நியூயார்க் **டெயிலி ட்ரூப்யூன்** பத்திரிகைக்கு மார்க்ஸ் இந்தியாவைப்பற்றி எட்டுக் கட்டுரைகளை எழுதினார். இவற்றையும், லதனம் என்ற மூல நூலிலும் மார்க்ஸ்—ஏங்கல்ஸ் கடிதப் போக்கு ரத்திலும் இந்தியாவைப்பற்றி வரும் குறிப்புக்களையும் ஒன்றாக வைத்துப் பரிசிலனை செய்தால், இந்தியாவைப்பற்றிய மார்க்ஸ் சிந்தனையின் சாராம்சத்தைப் பெறலாம்.

இந்தியக் கிராமப் பொருளாதாரத்தின் அழிவு

கார்ல் மார்க்ஸ் முதன் முதலில் "ஆசியப் பொருளாதாரத்தின்" அலாதியான குணவிசேடங்களை ஆராய்கிறார். இந்த ஆசியப் பொருளாதாரம் முதலாளித்துவத்தின்மீது மோதிய முதல் தடவையிலேயே முறிந்து தகர்ந்தது. 1853-ஜூனில், ஏங்கல்ஸுக்கு எழுதும்பொழுது, "கீழ் நாடுகளுடைய பிரச்னைக்குத் திறவுகோல் என்னவென்றால், அவற்றில் நிலத்தின்மீது தனிச் சொத்துரிமை இல்லாதிருப்பதுதான்" என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். ஆனால் ஐரோப்பியப் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்திலும் நிலம் பொதுச் சொத்தாகத்தான் இருந்தது; பிற்பாடு வளர்ந்த விதத்தில்தான் ஆசியப் பொருளாதாரத்துக்கும் ஐரோப்பியப் பொருளாதாரத்துக்குமிடையே பேதாபேதம் ஏற்பட்டது :—

"புராதனகாலப் பொதுச் சொத்துரிமை ஸ்லாவ் நாடுகளில் மாத்திரம்தான் நிலவியதென்று அல்லது ருஷ்யாவில் மாத்திரம்தான் நிலவியதென்றுகூட அனுமானிக்கப்படுகிறது; இந்தப் பரிகசிக்கத்தக்க அனுமானத்துக்குச் சமீபகாலத்தில் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பூர்வீக முறை ரோமானியர்கள், டியூடன்கள், கெல்ட்டுகள் ஆகியோரிடமிருந்ததென்பதை நாம் நிரூபிக்க முடியும். ஓரளவு அழிவடைந்து விட்டபோதிலும், இந்தப் பூர்வீகப் பொதுச் சொத்துரிமை முறையின் உதாரணங்கள் பலவற்றை இன்றும் இந்தியாவில் காணமுடியும். ஆசியாவின் சமூகச் சொத்துரிமை முறைகளை, குறிப்பாக இந்தியாவின் சமூகச் சொத்துரிமை முறைகளை உன்னிப்பாகக் கற்றறிந்தால், எப்படிப் பல்வகைப்பட்ட புராதனக் கம்யூனிஸ்ட் முறைகள் பல விதங்களில் அழிந்தனவென்பது விளங்கும். உதாரணமாக, ரோமானியர்களிடமும் டியூட்டன்களிடமும் நிலவிய தனிச் சொத்துரிமையின் பல்வேறு ஆரம்பகால ரூபங்களுக்கும் பல்வேறு இந்தியக் கம்யூனிஸ முறைகளுக்கும் தொடர்பிருப்பதைக் காணலாம்" (மார்க்ஸ்: "அரசியல் பொருளாதார விமர்சனம்," முதல் அத்தியாயம்.)

ஆனால் மேல் நாடுகளைப் போலக் கீழ்நாடுகளிலும் புராதனக் கம்யூனிஸம் ஏன் நிலச் சுவான்தாரி முறையாக, நிலப்பிரபுத்துவ முறையாக வளரவில்லை? கீழ்நாடுகளின் சீதோஷ்ண நிலையும் பூகோள நிலையும் இதற்குக் காரணமாக இருக்கலாமென்று ஏங்கல்ஸ் அனுமானிக்கிறார் :-

"கீழ் நாடுகளின் மக்கள் ஏன் நிலச் சுவான்தாரி முறையை அல்லது நிலப்பிரபுத்துவ முறையை அடையவில்லை ? சீதோஷ்ண ஸ்திதியும் பூமி நிலையுமே பிரதான காரணங்களென்று நான் நினைக்கிறேன். சஹாரா பாலைவனத்திலிருந்து அரேபியா, பாரசீகம், இந்தியா, தார்த்தாரி மூலம் ஆசியாக் கண்டத்து மேட்டுப் பூமி வரையில் பிரம்மாண்டமான பாலைவனப் பிரதேசம் வியாபித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு பயிர் செய்ய வேண்டுமானால், செயற்கைப் பாசனம் முதல் தேவையாகும். இந்தத் தேவையை கம்யூன்கள், மாகாணங்கள் அல்லது மத்திய சர்க்கார் பூர்த்தி செய்யவேண்டும்." (ஏங்கல்ஸ் மார்க்ஸுக்கு எழுதிய கடிதம்; *1853–ஜூன் 6*)

பயிர்ச் சர்குபடியைச் சாத்தியமாக்கும் நிலைமைகளுக்கும் நிலத்தில் தனி உடைமை ஏற்படுவதற்கும் ஒத்துவரவில்லை. ஆகவே, விசேஷ குணாம்சங்களுடன் கூடிய ஆசியப் பொருளாதாரம் உருவாயிற்று ; கீழே, கிராம அமைப்பில் புராதனக் கம்யூனிஸத்தின் மீதமிச்சங்கள் நிலைத்து நின்றன ; மேலே யுத்தம் செய்வதுடனும் கொள்ளையடிப்பதுடனும், நீர்ப்பாசன வேலைகளுக்கும் பொது மராமத்து வேலைகளுக்கும் பொறுப்பாளியாக யதேச்சாதிகார மத்திய சர்க்கார் நின்றது.

ஆக, இந்தியாவைப் புரிந்துகொள்வதற்கு, கிராம அமைப்பைப் புரிந்துகொள்வதுதான் பிரதானமானது. கார்ல் மார்க்ஸ் எழுதிய "மூலதனம்" என்ற நூலில், இந்தியக் கிராம அமைப்பின் இலக்கணம் அருமையாக விளக்கப்பட்டிருக்கிறது.

"இந்த இந்திய சமூகங்கள் மிக மிகப் புராதனமானவை ; அவை சின்னஞ் சிறு சமூகங்களாகும். அவற்றில் சில இந்நாள் வரை நீடித்து வந்திருக்கின்றன. நிலம் சமூகத்தின் பொதுச் சொத்தாக விருப்பதையும், விவசாயமும் கைத்தொழில்களும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பதையும், மாற்ற முடியாத வகையில் வேலைப் பிரிவினை ஏற்பட்டிருப்பதையும் இந்தச் சமூகங்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. பூரணமாக வகுக்கப்பட்டுத் தயாராயுள்ள இதே திட்டம், புதிதாகத் துவங்கும் சமூகங்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. நூறு ஏக்கராக்கள்முதல் பல்லாயிரம் ஏக்கராக்கள்வரை பல்வேறு பரப்பளவுகளில் இந்த சமூகங்கள் வாழ்கின்றன; அவை ஒவ்வொன்றும் தத்தம் சுயதேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துகொள்கின்றன. உற்பத்தியாகும் பொருட்களில் பெரும்பகுதி, சமூகத்தின் நேரடியான உபயோகத்துக்கே பயன்படுகின்றன; அவை விற்பனைச் சரக்குகளாக மாறுவதில்லை. ஆகவே, இந்தக் கிராம சமூகங்களில் நடைபெறும் உற்பத்தி விற்பனைச் சரக்குகளின் பரிவர்த்தனை அடிப்படையில் இந்திய சமூகம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் வேலைப் பிரிவினையைச் சார்ந்திருக்கவில்லை. (கிராம சமூகங்களின் உற்பத்தியில் தேவைகளைப்

பூர்த்தி செய்த பின்னர் மிச்சப்படும்) உபரிப்பொருட்கள் தான் விற்பனைச் சரக்குகளாகின்றன. அவற்றிலும் ஒரு பகுதி பொருள் வரியாக அரசாங்கத்தின் கைக்கு எட்டிய பிறகே விற்பனைச் சந்தைக்கு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் ஒரு பகுதி, தொன்று தொட்டு, பொருள் வரியாக, ராஜாங்கத்துக்குக் கிடைத்து வந்திருக்கிறது.

“இந்தப்புராதன சமூகங்களின் உள்ளமைப்பு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு தினுசாக உள்ளது. சிக்கலே இல்லாததும் சுலபமானதுமான அமைப்பைப் படைத்துள்ள சமூகங்களில் நிலச்சாகுபடி பொதுவில் நடைபெறுகிறது; உற்பத்தியாகும் தானியங்களை சமூக உறுப்பினர்கள் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். அதே சமயத்தில், ஒவ்வொரு குடும்பமும் நூல் நூற்றலையும் துணி நெய்தலையும் உபதொழில்களாகக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக ஒரே வேலையைச் செய்து கொண்டிருக்கும் ஜனங்களுடன் கூடவே, கீழ்க்கண்டவர்களும் சமூகத்தில் இருக்கின்றனர்:—சமூக நாட்டாண்மைக்காரர் வரிவசூலிக்கிறார், போலீஸ் வேலை செய்கிறார், நீதிபதியாக விளங்குகிறார். கணக்கன் உழவு சாகுபடி சம்பந்தமான சகல கணக்குகளையும் பதிவு செய்து நிர்வகிக்கிறார். இன்னொரு அதிகாரி, குற்றவாளிகள் மீது வழக்கு நடத்துவதுடன், அவ்வூர் வழியே பிரயாணம் செய்யும் அயலூர்க்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்; அவர்கள் அடுத்த கிராமம் செல்லும்வரை துணை செல்கிறார். காவற்காரர், அக்கம் பக்கத்துச் சமூகங்கள் ஆக்கிரமித்து விடாமல் கிராம எல்லைகளைக் கண்காணித்து வருகிறார்; தண்ணீர் மேஸ்திரி பொதுக்குளங்களிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் வினியோகம் செய்கிறார். பிராம்மணர் மதச்சடங்குகளை நடத்துகிறார்; பள்ளிக்கூட உபாத்தியாயர் பாலர்களுக்கு மணல்மீது எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கிறார். பஞ்சாங்கப் பிராம்மணர் அல்லது சோதிடர், விதைப்புக்கும் அறுவடைக்கும் இதர விவசாய வேலைகள் ஒவ்வொன்றுக்கும் நல்ல நாட்களைப் பார்த்துச் சொல்கிறார்; கெட்ட நாட்களைச் சொல்லி எச்சரிக்கிறார். விவசாயக் கருவிகளனைத்தையும் செய்வதற்கும் பழுது பார்க்கவும் ஒரு கொல்லரும் ஒரு தச்சரும் உள்ளனர். கிராமத்துக்குத் தேவையான மண்பாண்டங்களைச் செய்து தருவதற்கு ஒரு குயவன் இருக்கிறார். அம்பட்டர், துணிகளை வெளுத்துத் தருவதற்காக ஒரு சலவைத் தொழிலாளி, தட்டார், ஆகியோரும் இருக்கிறார்கள். சிற்சில கிராம சமூகங்களில் கவிராயரும் இருக்கிறார். சில சமூகங்களில் கவிராயரே தட்டாராகவுமிருப்பார்; இதர சமூகங்களில் கவிராயரே பள்ளிக்கூட உபாத்தியாயராகவும் இருப்பார். இந்த டஜன் நபர்களும் சமூகத்தின் கூட்டுச்செலவில் பராமரிக்கப்படுகிறார்கள். ஜனத் தொகை அதிகரித்தால், இதே வடிவத்தில், யாரும் குடியேறியிராத இடத்தில், ஒரு புதிய சமூகம் ஸ்தாபிக்கப்படுகிறது......

“ தன் தேவைகளைத்தானே பூர்த்தி செய்து கொள்ளும் இந்த சமூகங்கள் இதே உருவத்தில் இடைவிடாமல் பெருகிக் கொண்டிருக்கின்றன; தற்செயலாக அழிக்கப்பட்டாலும் அதே இடங்களில் அதே பெயர்களுடன் அவை மீண்டும் முளைக்கின்றன. இந்த உற்பத்தி ஸ்தாபனத்தின் சிக்கலற்ற தன்மையில், சுலபமான தன்மையில்தான் ஆசிய சமூகங்களுடைய சிரஞ்சீவித் தன்மையின் இரகசியம் அடங்கியிருக்கிறது. ஆசிய ராஜ்யங்கள் இடைவிடாமல் அழிந்து போய்க் கொண்டும் ஆர்த்தெழுந்து கொண்டும் இருப்பதற்கும், ஆசிய அரச குலங்கள் இடைவிடாமல் மாறிக் கொண்டிருப்பதற்கும் நேர்மாறாக, ஆசிய சமூகங்கள் அழியாமலும் மாறுதல் அடையாமலும் பிறந்த மேனியாகத் திகழ்கின்றன. அரசியல் வானத்தைச் சூழும் கரும்புயல் மேகங்களால் சமூக அமைப்பின் பொருளாதார அம்சங்கள் கொஞ்சமும் பாதிக்கப்படுவதில்லை.” (மார்க்ஸ், “மூலதனம்,” முதல் பாகம், 16-வது அத்தியாயம்)

வாழையடி வாழையாக வந்த இந்த இந்தியப் பொருளாதாரத்தின் அஸ்தி வாரத்தைத்தான், பிரிட்டிஷ் ஆட்சி பிரதிநிதித்துவப் படுத்திய அன்னிய முதலாளித்துவம் தகர்த்தது. முன்னால் இந்தியாவை வென்றவர்களுக்கும் பிரிட்டனுக்குமிடையே இருந்த வித்தியாசம் இதுதான்; முன்னால் இந்தியாவை வென்றவர்கள் பொருளாதார அடிப்படையைத் தொடவேயில்லை; இறுதியில், அந்தப் பொருளாதார அமைப்பின் உறுப்பினராகவே ஐக்கியப் பட்டு விட்டார்கள். ஆனால் பிரிட்டனோ அந்த இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையைத் தகர்த்தது; இந்தியப் பொருளாதாரத்துடன் பிரிட்டன் ஐக்கியப்படவில்லை; அன்னிய சக்தியாகவே பிரிட்டன் செயலாற்றியது; வெளியிலிருந்து கொண்டே கப்பத்தைக் கறந்தது. ஐரோப்பாவில் முதலாளித்துவம் வெற்றியடைந்ததற்கும் இந்தியாவில் **அன்னிய** முதலாளித்துவம் வெற்றியடைந்ததற்கும் உள்ள வித்தியாசமும் இதில்தான் அடங்கியிருக்கிறது. ஐரோப்பாவைப்போல இங்கு, பழைய சமூகத்தை அழிக்கும் நிகழ்ச்சியுடன், அதற்கேற்றாற்போல, புதிய சக்திகள் வளர்ச்சியடையவில்லை. இதிலிருந்து, பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் உள்ள இந்தியனின் துன்பத்தில் ஒரு “விசேஷமான துக்கம்” ஏற்படுகிறது; அதாவது அவன் பழைய உலகத்தை இழந்து விட்டான்; ஆனால் புதிய உலகத்தைப் பெறவில்லை. மார்க்ஸ் கூறுகிறார்:—

“இதற்கு முன்னால் ஹிந்துஸ்தான் பட்ட துன்பத்திலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டதும், அதைவிட மிகமிக உக்ரமானதுமான துன்பம் பிரிட்டிஷாரால் ஹிந்துஸ்தானுக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதில் எத்தகைய சந்தேகமும் இருக்க முடியாது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஐரோப்பியக் கொடுங்கோன்மை ஆசியக் கொடுங்கோன்மையுடன் சேர்ந்து, சால்செட்டிலுள்ள ஆலயத்தில்

நம்மைத் திடுக்கிடச் செய்யும் அதிகுரூர தேவதையைவிடப் பயங்கரமான சேர்க்கையாக அழுத்துவதை நான் குறிப்பிடவில்லை......

"ஹிந்துஸ்தானில் பல உள்நாட்டு யுத்தங்களும் படையெடுப்புகளும் புரட்சிகளும் ஆக்கிரமிப்பாளரின் வெற்றிகளும், பஞ்சங்களும் நிகழ்ந்திருக்கின்றன; இடைவிடாமல் நிகழ்ந்த அவற்றின் விளைவுகள், விசித்திரமான சிக்கல்கள் நிறைந்தனவாகவும், வேகம் செறிந்தனவாகவும், அழிக்கக் கூடியனவாகவும் தோன்றிய போதிலும், அவை மேற்பரப்புக்குக் கீழே பாதிக்கவில்லை. ஆனால் இங்கிலாந்து இந்திய சமூகத்தின் அமைப்பு முழுவதையும் தகர்த்துத் தூள் தூளாக்கி விட்டது; அதே சமயத்தில், எத்தகைய புனர் நிர்மாண அறிகுறியும் இது வரையில் தோன்றவில்லை. இந்த வகையில், பழைய உலகத்தை இழந்து விட்டு ஒரு புதிய உலகத்தைப் பெறாமல் நிற்பதானது, இன்று துன்பச் சுழலில் தவிக்கும் இந்தியனுக்கு ஒரு விசேஷமான வியாகூலத்தை ஏற்படுத்தியிருக்கிறது; பிரிட்டிஷ் ஆட்சி ஹிந்துஸ்தானத்தை அதன் புராதன பாரம்பரியங்கள் அனைத்திலிருந்தும், அதன் கடந்தகால சரித்திரம் முழுவதிலுமிருந்தும் துண்டித்து விட்டிருக்கிறது.'' (மார்க்ஸ், " இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி." *1853.*)

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட அழிவு

இந்த அழிவு எப்படி நிகழ்ந்ததென்பதை மார்க்ஸ் சர்வ ஜாக்கிரதையாகவும் உன்னிப்பாகவும் பரிசீலனை செய்கிறார். *1813*-க்கு முன்னால் கிழக்கிந்தியக் கம்பெனியார் ஏகபோக உரிமை அனுபவித்த காலத்தையும், *1813*-க்குப் பிறகு இந்த ஏகபோக உரிமையை ஒழித்துவிட்டு பிரிட்டிஷ் யந்திரத் தொழில் முதலாளிகள் இந்தியா முழுவதையும் வசப்படுத்திக் கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியார் செய்த வேலையைப் பூர்த்தி செய்த காலத்தையும் மார்க்ஸ் தனித்தனி கால கட்டமாகப் பிரித்துப் பரிசீலனை செய்கிறார்.

முதல் கட்டத்தில், அழிவுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவைகளாவன : முதலாவதாக, கிழக்கிந்தியக் கம்பெனி நேரடியாகப் பெருங் கொள்ளையடித்ததாகும் ; (*18*-ம் நூற்றாண்டு முழுவதிலும், அப்பொழுதிருந்த சொற்ப வர்த்தகத்தால் கிடைத்த வருமானத்தைவிட மிகமிக அதிகமாக அந்த தேசத்தின் நேரடியான சுரண்டல் மூலம், அங்கிருந்து பிரமாதமாகச் செல்வங்களைத் திரட்டி அனுப்புவதன் மூலம் இங்கிலாந்துக்கு ஐசுவரியங்கள் சென்றன.)

இரண்டாவதாக, பழைய சர்க்கார்கள் கவனித்து வந்த நீர்ப்பாசன வேலைகளையும் மராமத்து வேலைகளையும் பிரிட்டிஷ் ஆட்சி புறக்கணித்தது; அவை கவனிப்பாரில்லாமல் க்ஷீணித்தன.

மூன்றாவதாக, இங்கிலீஷ் நில அமைப்புப் புகுத்தப்பட்டது. நிலத்தில் தனி உடைமை முறை அமுலுக்கு வந்தது; நிலத்தை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிமை வழங்கப்பட்டது; இங்கிலீஷ் கிரிமினல் வழக்கு முறைச் சட்டம் முழுவதும் புகுத்தப்பட்டது.

நான்காவதாக, முதலில் இங்கிலாந்திலும் பிறகு ஐரோப்பா முழுவதிலும், இந்தியாவின் கைத்தொழில் பொருட்களுடைய இறக்குமதிக்கு நேரடியாகத் தடை விதிக்கப்பட்டது அல்லது தாக்குப் பிடிக்க முடியாத இறக்குமதி வரிகள் விதிக்கப்பட்டன.

எனினும் இவையனைத்தும் கூட “இறுதி அடி”யைக் கொடுக்கவில்லை; கடைசிச் சாவு மணியை அடிக்கவில்லை. அது பத்தொன்பதாவது நூற்றாண்டின் முதலாளித்துவ சகாப்தத்தில் தான் வந்தது.

உவிக் புரட்சியின் மூலம் வியாபாரப் பண மூட்டைகளின் சொற்ப ஜனாதிபத்தியம் இறுதியாக அதிகாரத்தை உறுதிப் படுத்திக் கொண்டது. அந்த வியாபாரப் பண மூட்டைப் பேராதிக்கத்துக்கும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோகத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தது :—

“கிழக்கிந்தியக் கம்பெனியின் உண்மைத் துவக்கத்தை 1702-லிருந்துதான் கணக்கிட வேண்டும்; அதற்கு முன்னால் கணக்கிட முடியாது. கிழக்கிந்திய வியாபாரத்தில் ஏகபோக உரிமையைக் கோரிய பல்வேறு கழகங்களும் 1702-ல்தான் ஒரே கம்பெனியில் ஒன்றுபட்டன. அது வரையில் அசல் கிழக்கிந்தியக் கம்பெனியின் உயிருக்கே மீண்டும் மீண்டும் அபாயம் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஒரு தடவை, கிராம்வெல்லின் ஆட்சியில், அது சில வருட காலத்துக்கு முடக்கப் பட்டிருந்தது. மூன்றாவது வில்லியம் ஆட்சியில், பார்லிமெண்டின் தலையீட்டால் அது கலைக்கப்படும் போலிருந்தது.

“அந்த டச்சு இளவரசன் (1688-ல் பதவிக்குவந்த 3–வது வில்லியம்) கை ஓங்கிய பொழுதுதான், உவிக்குகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வருமானத்துக்கு உரிமையாளரானார்கள்; **இங்கிலாந்து பாங்க்** பிறந்தது; காப்புவரி அமைப்பு சட்டபூர்வமாக ஏற்பட்டது; ஐரோப்பாவில் அதிகார சமநிலை உறுதிப்பட்டது; அப்பொழுதே பார்லிமெண்ட் கிழக்கிந்தியக் கம்பெனியை நிர்ணயமாக அங்கீகரித்தது. இந்தச் சகாப்தம் வெளித் தோற்றத்தில் சுதந்திரமான சகாப்தமாகப் புலப்பட்டபோதிலும், உண்மையில் ஏகபோக உரிமையின் சகாப்தமாகவே விளங்கியது. எலிஸபெத் ராணியின் காலத்திலும் முதலாவது சார்லஸ் மன்னன் காலத்திலும் அரண்மனை, ஏகபோக உரிமைகளை வழங்கிற்று; இப்பொழுது பார்லிமெண்ட் ஏகபோக உரிமைகளை வழங்கிற்று.”

[மார்க்ஸ்; “கிழக்கிந்தியக் கம்பெனியின் சரித்திரமும் பல பலனும்” 1853

கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோக உரிமையை இங்கிலீஷ் தொழில் முதலாளிகள் எதிர்த்தார்கள்; இந்தியாவின் செய்பொருட்கள் இறக்குமதியாவதை எதிர்த்து, அதற்குத் தடை விதிக்கும்படி செய்தார்கள். லாபகரமான இந்திய வர்த்தகத்தில் பங்கு பெறாத வியாபாரிகளும் தொழில் முதலாளிகளும் சேர்ந்து கொண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோகத்தை எதிர்த்து இடைவிடாது கிளர்ச்சி செய்தார்கள். கம்பெனியின் டைரக்டர்கள் கோர்ட்டையும் முதலாளிகள் கோர்ட்டையும் நீக்க முயற்சித்த இந்திய மசோதா 1783-ல் வந்தபோது நடந்த கிளர்ச்சிக்கு அடிப்படை இதுவே; அந்தக் கிளர்ச்சியில் பாக்ஸ் (**Fox**) சர்க்கார் வீழ்ந்தது. 1786-லிருந்து 1795-வரை ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் (அவர் இந்திய கவர்னர்-ஜெனரலாக விருந்தவர்) குற்ற விசாரணை சம்பந்தமாக நடந்த நீண்ட போராட்டத்திலும் இது பிரதிபலித்தது. ஆனால் இங்கிலீஷ் ஆலை முதலாளித்துவத்தை முன்னுக்குக் கொண்டுவந்த யந்திரப் புரட்சி பூர்த்தியான பிறகே, 1813-ல் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஏகபோக உரிமை ஒழிந்தது; 1833-ல் இறுதியாக ஒழிந்தது.

1813-க்குப் பிறகுதான், இங்கிலீஷ் தொழில் முதலாளிகளின் படையெடுப்பால், இந்தியப் பொருளாதார அமைப்பின் தீர்மானமான அம்சங்கள் தகர்ந்தன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த அழிவினால் ஏற்பட்ட பலன்களை மார்க்ஸ் மறுக்க முடியாத பேருண்மைகளைக்கொண்டு நிரூபித்தார். 1780-லிருந்து 1850-க்குள்ளாக, இந்தியாவுக்குச் சென்ற பிரிட்டிஷ் ஏற்றுமதி 3 லட்சத்து 86 ஆயிரத்து 152 பவுன்களிலிருந்து 80 லட்சத்து 24 ஆயிரம் பவுன்களாக அதிகரித்தது. 1780-ல் பிரிட்டிஷ் ஏற்றுமதிகளில் 32–ல் ஒரு பாகமே இந்தியாவுக்குப் போயிற்று. 1850-ல் பிரிட்டிஷ் ஏற்றுமதிகளில் எட்டில் ஒருபாகம் இந்தியாவுக்குப் போயிற்று. 1850-ல் பிரிட்டிஷ் ஜவுளி உற்பத்தியில் பிரிட்டிஷ் மக்களில் எட்டில் ஒருபகுதி ஈடுபட்டிருந்தனர்; பிரிட்டனின் மொத்த தேச வருமானத்தில் பன்னிரண்டில் ஒரு பகுதியை ஜவுளித் தொழில் கொடுத்தது; இவ்வாறு உற்பத்தியாகும் பிரிட்டிஷ் ஜவுளிகளின் ஏற்றுமதியில் நாலிலொருபங்கு இந்தியாவுக்குச் சென்றது.

"1818-லிருந்து 1836-க்குள் பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான முறுக்கு நூல் 5200 மடங்கு அதிகமாயிற்று. 1824-ல் இந்தியாவுக்கு ஏற்றுமதியான பிரிட்டிஷ் மஸ்லின்கள் 60 லட்சம் கஜங்கள்கூட இல்லை. ஆனால் 1837-ல் 640 லட்சம் கஜங்களுக்கு மேல் பிரிட்டிஷ் மஸ்லின்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதே சமயத்தில், டாக்காவின் ஜனத்தொகை 150 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரமாகக் குறைந்தது. ஜவுளி ஆடைகளுக்குப் பிரசித்திபெற்ற இந்திய நகரங்கள் க்ஷீணித்ததையும்விட மோசமான விளைவு என்னவென்றால், ஹிந்துஸ்தான் முழுவதும்

விவசாயத்துக்கும் கைத் தொழிலுக்கு மிருந்த ஒற்றுமையை பிரிட்டிஷ் நீராவி சக்தியும் விஞ்ஞானமும் வேரோடு உடைத்தெறிந்தன." (மார்க்ஸ், "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி" 1853)

" இங்கிலீஷ் ஜவுளி யந்திரங்களால் இந்தியாவில் கடுமையான விளைவுகள் ஏற்பட்டன. 'வர்த்தகத்தின் சரித்திரத்திலேயே இந்தத் துன்பத்துக்கு இணை காணமுடியாது. தறிகாரர்களுடைய எலும்புகள் இந்திய சமவெளிகளை வெண்மையாக்கிக் கொண்டிருக்கின்றன!' என்று 1834-35ல் கவர்னர்-ஜனரல் அறிக்கை கூறிற்று." (மார்க்ஸ், "மூலதனம்" முதல் பாகம், 15-வது அத்தியாயம்)

'விவசாயமும் கைத்தொழில்களும் ஒரே குடும்பத்தில் ஐக்கியப் பட்டிருப்பதை' கிராம அமைப்பு அடிப்படையாகக் கொண்டிருந்தது. "கைத்தறியும் ராட்டினமும் பழைய இந்திய சமூக அமைப்புக்குச் சுழியாணிகளாக விளங்கின." ஆனால் " பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளன்தான் இந்தியக் கைத்தறியை உடைத்தெறிந்தான்; இந்திய ராட்டினத்தை நாசமாக்கினான்." இதன் மூலம் பிரிட்டன் "ஆசியாவின் மிகப் பெரிய சமுதாயப் புரட்சியை, உண்மையைக் கூறப்போனால் ஆசியாக் கண்டத்தில் ஏற்பட்ட ஒரே சமுதாயப் புரட்சியைச் சாதித்தது. இந்தப் புரட்சி பழைய கைத்தொழில் நகரங்களை அழித்தது; அவற்றின் ஜனங்களைக் கிராமங்களுக்கு விரட்டியது. அத்துடன் கிராமங்களின் பொருளாதார வாழ்க்கைச் சம நிலையையும் அழித்தது. இதனால் விவசாயத்தின் மீது ஏற்பட்ட அமித ஜனநெருக்கம் இன்றுவரை மேன்மேலும் குவிந்து கொண்டே யிருக்கிறது. அதே சமயத்தில், பிரிட்டிஷ் ஆட்சி சாகுபடிக்காரர்களிடமிருந்து முடிந்த அளவுக்கு அதிகமான வரியைத் தயவு தாட்சண்யமில்லாமல் பறித்தது. இதற்குப் பதிலாக அவசியமான பாசன மராமத்து வேலைகளைச் செய்ததாவென்றால் அதுவும் கிடையாது. (1850—51-ல் நிலவரி வருமானம் ஒரு கோடியே 93 லட்சம் பவுன்கள்; சகல மராமத்து வேலைகளுக்கும் 166 ஆயிரத்து 930 பவுன்களே செலவழிக்கப்பட்டன. அதாவது வசூலிக்கப்பட்ட வரியில் 1000–க்கு 8–தான் மராமத்து இலாகாச் செலவு) இதன் விளைவாக விவசாய அபிவிருத்திக்குத் தடை ஏற்பட்டது.

"உற்பத்திச் சாதனங்களும் உழைப்பு நிலைமைகளும் தொடர்ந்தாற் போல உற்பத்தியாகிக் கொண்டிருப்பதற்கே பேராபத்து விளைவிக்கக் கூடிய அளவுக்கு வரி அதிகமாகலாம். உற்பத்தி விஸ்தரிப்பதை வரிக் கொடுமை ஏறக்குறைய முடியாத காரியமாக்கிவிடும். நேரடியான உற்பத்தியாளர்களை ஜீவனத்துக்கு அத்தியாவசியமான குறைந்த பட்ச நிலைமைக்குத் தாழ்த்திவிடும். இந்தியாவை இங்கிலீஷ்காரர்கள் வென்றதைப் போல, ஒரு யந்திரத் தொழில் நாடு ஒரு அன்னிய நாட்டு விவசாய அமைப்

பைப் பாதிக்கும்பொழுது, சுரண்டும்பொழுது இந்நிலைமை குறிப்பாக ஏற்படுகிறது.”

[மார்க்ஸ், “மூலதனம்”, மூன்றாவது பாகம்.]

இந்தியாவிலிருந்து பிரிட்டன் வாரிக்கொண்டு போன கப்பத்தைக் கீழ்க் கண்டவாறு மார்க்ஸ் மதிப்பிடுகிறார்:—“நல்லாட்சிக்காகவும் பிரிட்டிஷ் மூலதனத்தின் வட்டிக்காகவும் முதல் போட்டுள்ள பிரிட்டிஷ் பங்குதாரர்களின் ‘டிவிடெண்டு’க்காகவும் மாத்திரம் இந்தியா 50 லட்சம் பவுன்களை பிரிட்டனுக்கு அனுப்புகிறது. தங்களது சம்பளத்திலிருந்து மிச்சம் பிடித்து பிரிட்டிஷ் அதிகாரிகள் வருஷா வருஷம் அனுப்பிய பணமும் இங்கிலாந்தில் மூலதனமாவதற்காக இந்தியாவில் சம்பாதித்த லாபத்தின் ஒரு பகுதியை இங்கிலீஷ் வியாபாரிகள் அனுப்பினார்களே அதுவும் இந்த ஐம்பது லட்சம் பவுன்களில் சேரவில்லை.”

[மார்க்ஸ், “மூலதனம்” மூன்றாம் பாகம்.]

கிராம அமைப்பு வீழ்ச்சியடைந்து விட்டதேயென்று, இந்திய சமூகத்தின் பழைய அடிப்படை அழிந்து விட்டதேயென்று மார்க்ஸ் கண்ணீர் வடிக்கிறாரா? முதலாளித்துவ சமுதாயப் புரட்சியால் ஏற்பட்ட அளவு கடந்த கஷ்டத்தை மார்க்ஸ் கண்டார். ஒவ்வொரு தேசமும் இந்தக் கஷ்டத்தை அனுபவித்தது என்றாலும், இந்தியாவில் அன்னிய முதலாளித்துவத்தின் படையெடுப்பு மூலமாக, குறிப்பிட்ட வகையில் அந்தப் புரட்சி சம்பவித்ததால், இந்தத் துன்பம் மேலும் அதிகமாக இருந்தது. ஆனால் அந்தக் கிராம அமைப்பின் ஆழ்ந்த பிற்போக்குத் தன்மையையும், மனித குலம் முன்னேறுவதற்கு அந்தக் கிராம அமைப்பு அத்தியாவசியமாக அழிய வேண்டியிருப்பதையும் அவர் கண்டார். அந்த “சாத்விகக் கிராமச் சமூகங்களில்” மனிதத்துவம் அடைந்த இழிவையும் சிறுமையையும் அவர் அனல் விசும் சொற்களில் சித்தரிக்கிறார். ஐரோப்பாவிலுள்ள சிலரைப் போல இந்தியாவிலும் முன்னோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாகப் பின்னோக்கிப் பார்ப்பவர்களுக்கு, பிரிட்டன் வருவதற்கு முன்னிருந்து மறைந்துபோய்விட்ட பழைய இந்தியாவை, கைராட்டினமும் கைத்தறியும் இயங்கும் இந்தியாவை மீண்டும் சிருஷ்டிக்க வேண்டுமென்ற கோஷத்துடன் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராட முயலும் இந்தியர்களுக்கு—மார்க்ஸின் அனல் விசும் சித்திரம் இன்றும் ஒரு அபூர்வமான படிப்பினையாகும்:—

“அந்த லட்சோப லட்சக்கணக்கான தந்தைவழிச் சமூகங்கள், சுறுசுறுப்பு மிகுந்த சாது நிரபராதிச் சமூகங்கள் தமது ஸ்தாபன அமைப்பை இழந்து, பின்னம்பின்னமாகச் சிதறிக்கலைந்து, துன்பக் கடலில் தத்தளிப்பதையும், இந்தச் சமூகங்களின் அங்கத்தினர்கள் ஒரே சமயத்தில் தமது புராதன நாகரீகத்தையும்

பரம்பரை ஜீவனோபாயத்தையும் இழந்து நிற்பதையும் பார்க்கப் பார்க்க மனித உணர்ச்சிக்கு வேதனை ஏற்படுகிறது. எனினும், இந்த அமைதியான கிராம சமூகங்கள், சாதுக்களாகத் தோன்றிய போதிலும், கீழ் நாட்டுக் கொடுங் கோன்மைக்குத் திடமான அடிப்படையாகவிருந்தன என்பதை நாம் மறக்கமுடியாது; அந்தச் சமூகங்கள் மனித மூளையைச் சின்னஞ் சிறு கூட்டுக்குள் அடைத்து, அதை மூட நம்பிக்கையின் சுலபமான கருவியாகவும், பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும், சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் சரித்திர பூர்வமான சக்திகளையும் அது (மனித மூளை) பெற முடியாமல் செய்ததையும் நாம் மறக்க முடியாது. சின்னஞ் சிறு நிலத்தில் குவிந்து கொண்டு, சாம்ராஜ்யங்கள் வீழ்ச்சி அடைவதையும், வர்ணிக்க முடியாத கொடுமைகள் நிகழ்வதையும் பெரிய நகரங்களின் மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் சலனமில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த அந்தச் சமூகங்களின் காட்டுமிராண்டித்தனமான தன்னகங்காரத்தை நாம் மறக்கமுடியாது. இயற்கையில் நிகழும் சம்பவங்கள் சம்பந்தமாக எவ்வளவு அக்கரை காட்டினார்களோ, அதே அளவு அக்கரையைத்தான் மேற்சொன்ன சம்பவங்கள் பற்றியும் காட்டினார்கள். தவிர, எந்த ஆக்கிரமிப்பாளன் கவனமாவது விழுந்துவிட்டால், இந்தச் சமூகங்கள் எதிர்க்க வகையில்லாமல் ஆக்கிரமிப்புக்கு இரையாகின.

“இந்தத் தேக்கம் நிறைந்த, அசைவில்லாத வாழ்க்கை, அகௌரவ வாழ்க்கை, சிருஷ்டிக்கும் திறனில்லாத செயலற்ற வாழ்க்கை, நேர்மாறான விளைவுகளையும் சிருஷ்டித்தது. கட்டுக்கடங்காத நாசகார சக்திகள், நோக்கமில்லாத முறையில் அழிக்கும் சக்திகள், குமுறி எழுந்தன; ஹிந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று. இதை நாம் மறக்கக் கூடாது.

“இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமை முறையாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானனாக்குவதற்குப் பதிலாக, அவனைச் சுற்றுச் சார்புக்கு அடிமைப்படுத்தின. தானாக வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இந்த விதத்தில், இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் மிருகத்தனமான நிலைமையைச் சிருஷ்டித்தது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன், குரங்காகிய ஹனுமான் முன்னாலும் பசுவாகிய காமதேனு முன்னாலும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றையும் நாம் மறக்கக் கூடாது.”

(மார்க்ஸ்: **இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி**)

ஆகவே, இந்தியாவில் பிரிட்டன் சிருஷ்டித்த பொருளாதாரத்தை “பன்றிக்குரிய” செயலென்று (துப்புக்கெட்ட செயல்,

மிருகத்தனமான செயல் எனக்கொள்ளலாம்—மொ-ர்) ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் (ஜூன் *14 ,1853*) மார்க்ஸ் கண்டித்த போதிலும், அதே சமயத்தில் பிரிட்டிஷ் வெற்றியில் 'சரித்திரத்தின் கருவி'யை அவர் காண்கிறார். ஆனால் பிரிட்டன் இதை உணர்ந்து செய்யவில்லை என்பதையும் மார்க்ஸ் குறிப்பிடுகிறார் :—

"இந்தியாவில் ஒரு சமுதாயப் புரட்சி ஏற்படுவற்குப் பிரிட்டன் காரணமாக இருந்தபோது அது துன்மார்க்கமான நலன்களால் தான் உந்தப்பட்டதென்பதும், அந்தப் புரட்சியை சாதிப்பதில் அது திறமையற்ற முறையில் நடந்து கொண்டது என்பதும் உண்மையே. ஆனால் பிரச்னை அதுவல்ல. ஆசியாவின் சமூக நிலையில் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனிதகுலம் தன் லட்சியத்தை எய்த முடியுமா என்பதே பிரச்னை. முடியாதென்றால் இங்கிலாந்து எவ்வளவு குற்றங்கள் இழைத்திருந்தபோதிலும், அது தனக்கே தெரியாமல் சரித்திரத்தின் கருவியாக விளங்கி அந்தப் புரட்சியைச் சாதித்திருக்கிறது."

(மார்க்ஸ்; "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி")

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட புனருத்தாரணம்

மார்க்ஸ் அபிப்பிராயப்படி, இங்கிலாந்துக்கு "இந்தியாவில் இரு பணிகள் இருந்தன. (*1*) அழிப்பது (*2*) புனருத்தாரணம் செய்வது-பழைய ஆசிய சமூகத்தை அழித்துவிட்டு ஆசியாவில் மேலைய சமூகத்தின் பௌதிக அஸ்திவாரத்தை ஸ்தாபிப்பது." இதுவரை, அதன் அழிவுப் பாத்திரமே பிரதானமாகக் கண்கூடாக விருந்திருக்கிறது; எனினும், புனருத்தாரண வேலையும் துவங்கி விட்டது.

"இந்திய நாகரீகத்தைவிட உயர்ந்த நாகரிகத்தைப்பெற்ற முதல் ஆக்கிரமிப்பாளர் பிரிட்டிஷார். ஆகவே அவர்களை (பழைய ஆக்கிரமிப்பாளர்களைச் செய்தது மாதிரி—மொ-ர்) இந்திய நாகரிகத்தால் ஆகர்ஷித்துத் தன்னகத்தே ஜீரணிக்க முடியவில்லை. பிரிட்டிஷார் சுதேசி சமூகங்களை உடைத்தெறிந்தார்கள்; சுதேசித் தொழிலை வேரோடு வெட்டி விழ்த்தினார்கள்; சுதேசி சமூகத்தின் உன்னதமானதாகவும் மேன்மையானதாகவும் கருதப்பட்டவற்றைத் தரை மட்டமாக்கினார்கள்; இவ்வாறாக, இந்திய நாகரிகத்தை அழித்தார்கள். இந்தியாவில் அவர்கள் நடத்திய ஆட்சியின் சரித்திரம் முழுவதும் இந்த அழிவுப் படலத்தைத் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. நாசத்தின் குவியலிலே புனருத்தாரண வேலையைப்பற்றி ஒன்றுமே பார்க்க முடிவதில்லை. எனினும் புனருத்தாரணம் துவங்கி விட்டது."

(மார்க்ஸ், "இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால பலன்கள்" *1853*)

இந்தப் புனருத்தாரணத்தின் துவக்க வேலைகளை அவர் எங்கே கண்டார்? மார்க்ஸ் புனருத்தாரண அறிகுறிகளைத் தொகுத்துத் தருகிறார்:-

(1) "முகலாய மன்னர்களுடைய காலத்திலிருந்ததைவிட விரிவான, உறுதி வாய்ந்த அரசியல் ஒற்றுமை;" "மின்சாரத் தந்தி இந்த அரசியல் ஒற்றுமையைப் பலப்படுத்தி நீடிக்கச் செய்யும்."

(2) "சுதேசி ராணுவம்" (1857-ல் சிப்பாய் கலகம் நடந்த பிறகு இது கலைக்கப்பட்டது. மொத்த ராணுவத்தில் பிரிட்டிஷ் படைகள் மூன்றில் ஒருபகுதியாயிற்று; பிரிட்டிஷ் ராணுவ ஆதிக்கம் பலப்பட்டது. இந்தச் சம்பவங்களுக்கு முன்னால் மார்க்ஸ் இதை எழுதினார்.)

(3) "ஆசிய சமூகத்தில் முதன் முதலாக சுயேச்சைப் பத்திரிகைகள் உருவாகியிருக்கின்றன." (1835-ல் இந்தியாவில் பத்திரிகைச் சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மார்க்ஸ் இவ்வாறு எழுதினார். அதற்குப்பின், 1873-லிருந்து பத்திரிகை உரிமையைப் பறிக்கும் சட்டங்கள் தொடர்ச்சியாக வந்தன. அவை ஏகாதிபத்திய ஆட்சியின் க்ஷீணகாலமாக நவீன காலத்தில் பலமடைந்துள்ளன.)

(4) "நிலத்தில் தனிச் சொத்துரிமை" ஸ்தாபிக்கப்பட்டது; "ஆசிய சமூகத்தின் மாபெரும் தேவை இது."

(5) எவ்வளவு அதிருப்தியுடன் அபூர்வமாகச் செய்தபோதிலும், "நிர்வாகத்தின் தேவைகளைக் கற்றறிந்தவர்களும் ஐரோப்பிய விஞ்ஞானத்தில் பரிச்சயமுள்ளவர்களுமான" ஒரு இந்திய அறிவாளி வர்க்கத்தை சிருஷ்டித்திருக்கிறது.

(6) நீராவிக் கப்பல்கள் மூலம் "ஐரோப்பாவுடன் முறையாக வேகமான போக்குவரத்து" ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவை யந்திரத் தொழில் முதலாளித்துவம் சுரண்டுவதின் தவிர்க்க முடியாத விளைவுகள் தான், இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது. இந்திய மார்க்கெட்டை வளர்ப்பதற்காக, "இந்தியாவைத் திரும்பத் திரும்ப உற்பத்தி செய்யும் தேசமாக" மாற்றுவது அவசியம். அதாவது, இறக்குமதியாகும் தொழிலுற்பத்திப் பண்டங்களுக்குப் பதிலாக மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் தளமாக இந்தியா விளங்கவேண்டும். அதனால் ரயில்வேக்களையும் ரஸ்தாக்களையும் நீர்ப்பாசனங்களையும் அமைப்பது அவசியமாயிற்று. இந்தப் புதிய கட்டம், மார்க்ஸ் எழுதிய காலத்தில், துவங்கிக்கொண்டிருந்தது. இந்தப் புதிய வளர்ச்சியின் விளைவுகளை மதிப்பிட்டு, கார்ல் மார்க்ஸ் தீர்க்க தரிசனத்துடன் கணித்த கணிப்பு, இந்தியாவைப்பற்றிய அவரது பிரகடனங்கள் அனைத்திலும் அதிகப் பிரசித்தி பெற்றது.

“தங்களுடைய தொழில்களுக்குக் குறைந்த செலவில் பருத்தியையும் இதர மூலப் பொருட்களையும் பெறவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன், இங்கிலீஷ் மில் முதலாளிகள் இந்தியாவில் ரயில் பாதைகளை அமைக்கவிரும்புகிறார்களென்பதை நான் அறிவேன். ஆனால் இரும்புக் கனிகளும் நிலக்கரியும் உள்ள ஒரு தேசத்தின் போக்குவரத்தில் யந்திரமுறையைப் புகுத்தினால், அந்த தேசத்தில் யந்திரத்தொழில் விஸ்தரிப்பதை உன்னால் தடுக்கமுடியாது. ஒரு பரந்த தேசம் முழுவதும் வலைப் பின்னல்போல அமைந்துள்ள ரயில்வேப் போக்குவரத்து சரிவர நடந்துவரவேண்டுமானால், ரயில்வேப் போக்குவரத்தின் உடனடியான அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான தொழில்களைத் தொடங்காமல் தீராது. இதிலிருந்து ரயில்வேக்களுடன் உடனடியான தொடர்பில்லாத தொழில்களும் யந்திர மயமாகித் தீரும். ஆகவே, இந்தியாவின் ரயில்வே அமைப்பு நவீன யந்திரத் தொழிலின் முன்னோடியாக விளங்கும்……இந்திய முன்னேற்றத்துக்கும் இந்தியத் திறன் அபிவிருத்திக்கும் தீர்மானமான தடை மதில்களாக விளங்குகிறதும், இந்திய ஜாதிகளின் அடிப்படையில் எழுந்துள்ளதுமான பரம்பரை வேலைப் பிரிவினைகளை, ரயில்வே அமைப்பின் விளைவாக உருவாகப்போகும் நவீன யந்திரத்தொழில் ஒழித்துவிடும்.” (மார்க்ஸ், “இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால விளைவுகள்”)

அப்படியானால், இந்திய மக்களுக்கு விமோசனம் அளித்து, அவர்களை சமுதாயமுன்னேற்றப் பாதையில் முன்னழைத்துச் செல்லக்கூடிய முற்போக்கு சக்தியின் பாத்திரத்தை இந்தியாவில் ஏகாதிபத்தியம் வகிக்குமென்று மார்க்ஸ் எண்ணினாரென்று நாம் பொருள் கொள்ளலாமா? இல்லை. அதற்கு நேர்மாறாக மார்க்ஸ் எண்ணினார். இந்தியாவில் பிரிட்டிஷ் முதலாளித்துவ ஆட்சியால் ஏற்பட்ட “புனருத்தாரணத்தை”ப்பற்றி மார்க்ஸ் பேசும்பொழுது, புதிய முன்னேற்றத்துக்குத் தேவையான பௌதிகச் சூழ்நிலையை அது சிருஷ்டிக்கிறதென்ற பொருளிலேயே அவ்வாறு குறிப்பிடுவதாக அவர் தெளிவுபடுத்தினார். ஆனால் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலையைப் பெறுவதில் வெற்றியடைந்த பின்னரே, இந்திய மக்களேதான் இந்தப் புதிய முன்னேற்றத்தைச் சாதிக்க முடியும். இந்திய மக்களின் வெற்றிகரமான புரட்சிக் கலகத்தின் மூலமோ அல்லது இந்தியமக்களுக்கு விடுதலை அளிக்கக்கூடிய பிரிட்டிஷ் ஆலைத்தொழிலாளி வர்க்கத்தின் வெற்றியின் மூலமோ இந்திய விடுதலையைப் பெற முடியும். அதுவரையில் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தால் விளைந்துள்ள பௌதீக சாதனைகள் அனைத்தும் இந்திய மக்களுடைய நிலைமையில் எத்தகைய மாறுதலையோ நன்மையையோ ஏற்படுத்தாது. மார்க்ஸ் கூறுகிறார் :—

"இங்கிலீஷ் முதலாளி வர்க்கம் கட்டாயப்படுத்தப்பட்டுச் செய்யக்கூடியதெல்லாம் பொது மக்களின் சமுதாய விடுதலையை அளிக்காது; அவர்களுடைய சமூக நிலைமைகளில் உருப்படியான அபிவிருத்தியும் செய்யாது. இந்த சமூக நிலைமை உற்பத்தித் திறனின் வளர்ச்சியை மாத்திரம் பொறுத்ததல்ல; வளர்ந்திருக்கும் உற்பத்தித்திறனால் பெறப்படும் பொருள்களைப் பொது மக்கள் அனுபவிப்பதையும் பொறுத்திருக்கிறது. ஆனால் இந்த இரண்டுக்கும் தேவையான பௌதீக அடிப்படையை முதலாளி வர்க்கம் உண்டாக்கத்தவறாது. இதைவிட அதிகமாக, முதலாளி வர்க்கம் எங்காவது செய்திருக்கிறதா? தனி நபர்களையும் ஜனங்களையும் ரத்தக்களரியிலும் சகதியிலும் துன்பத்திலும் இழிவிலும் அல்லல்படச் செய்யாமல் எங்காவது முதலாளிவர்க்கம் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா?

"பிரிட்டனில் இன்றுள்ள ஆளும் வர்க்கங்கள் ஒழிந்து ஆலைத் தொழிலாளி வர்க்க அரசாட்சி ஏற்படும் வரையில் அல்லது இங்கிலீஷ்நுகத்தடியைப் பூரணமாகத் தூக்கி எறியுமளவுக்கு இந்தியர்களுக்குச் சக்தி ஏற்படும் வரையில், பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் சிந்திச் சிதறிய முறையில் தூவியுள்ள புதிய சமூக அம்சங்களின் பலன்களை இந்தியர்கள் அனுபவிக்க முடியாது!" (மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் எதிர்கால விளைவுகள்)

இத்துடன் நெருங்கிவரும் இந்தியப் புரட்சியைப் பற்றியும் அடிமைப்பட்டுள்ள காலனி மக்கள் விடுதலையடைய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் 1882-ல் ஏங்கல்ஸ் எழுதியதை ஒத்து நோக்கலாம் :—

"என் அபிப்பிராயத்தில், குடியேற்ற நாடுகளான, அதாவது ஐரோப்பியர்கள் குடியேறியுள்ள நாடுகளான, கானடா, முனை (அதாவது நன்னம்பிக்கை முனை, இங்கு தென்னாப்பிரிக்காவைக் குறிப்பிடுகிறார்.), ஆஸ்ட்ரேலியா ஆகியவை விடுதலை யடைந்து விடும்; மறுபுறத்தில், சுதேசி ஜனத்தொகையை உடைய நாடுகள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளன; அவை இந்தியா, அல்ஜியர்ஸ், டச்சு, போர்ச்சுகீஸ், ஸ்பானிஷ் காலனிகள் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பை தற்காலிகமாக தொழிலாளிவர்க்கம் மேற்கொண்டு, அவற்றை முடிந்த அளவுக்கு வேகமாக விடுதலைக்கு இட்டுச் செல்லவேண்டும்.

"ஒரு வேளை அனேகமாக இந்தியா ஒரு புரட்சியைச் செய்யலாம். தன் விடுதலைக்காகப் போராடும் தொழிலாளிவர்க்கம் அடிமை நாடுகளின் விடுதலைக்கு எதிராக யுத்தம் நடத்தமுடியாது. ஆகவே, அந்தப் புரட்சி பரிபூரணமாக வளர்வதற்கு இடமளிக்க வேண்டும். இந்தியப் புரட்சியால் சகலவிதங்களிலும் நாசங்களும் ஏற்படலாம். ஆனால் அழிவுகள் ஏற்படுவதென்பது சகல புரட்சிகளிலுமுள்ள அம்சம், பிரிக்க முடியாத அம்சம். இதே

புரட்சி இதர இடங்களிலும் நடக்கலாம். உதாரணமாக, அல்ஜீயர்ஸிலும் எகிப்திலும் நிகழலாம். அவை நிச்சயமாக, நமக்குச் சாதகம் செய்யும்."

(ஏங்கல்ஸ் காட்ஸ்கிக்கு எழுதிய கடிதம், 1882 செப்டம்பர் 12)

ஆக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திவரை, இந்திய நிலைமையைப் பகுத்தாராய்ந்து மார்க்ஸ் மூன்று பிரதான அம்சங்களை வற்புறுத்துவதைக் காணலாம் :—

1. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட அழிவு ; பழைய சமூகம் வேரோடு பிடுங்கி எறியப்பட்டது.

2. வர்த்தக சுதந்திர முதலாளித்துவ காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியால் விளைந்த புனருத்தாரணம் - எதிர்காலப் புதிய சமூகத்தின் பௌதிகத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

3. இதிலிருந்து எழும் காரிய சாத்தியமான முடிவு-அரசியல் மாறுதல் ஏற்படுவது அவசியம்; அதாவது இந்திய மக்கள் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுபட வேண்டும்; அந்த விடுதலையின் மூலமே அவர்கள் புதிய சமூகத்தை உருவாக்குவதற்கு முன்னேற முடியும்.

வர்த்தக-சுதந்திர முதலாளித்துவக் காலத்தில் முதலாளித்துவம் அதன் யதார்த்த விளைவுகளின் முற்போக்காயிருந்தது. ஆனால் இன்று, உலகம் முழுவதும் இருப்பதைப்போல, இந்தியாவிலும் ஏகாதிபத்திய ஆட்சி வல்லமை பொருந்திய பிற்போக்குச் சக்தியாக விருக்கிறது; இந்தியாவிலுள்ள இதர பிற்போக்கு சக்திகளுக்கும் அரணாகத் திகழ்கிறது. ஆகவே மார்க்ஸ் சுட்டிக் காட்டிய அரசியல் மாறுதலைச் சாதிக்கும் கடமை உடனடிக் கடமையாகி விட்டது.

இந்தியாவில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தால் ஏற்பட்ட பலன்

பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் "ஒரு சமூகப் புரட்சிக்குக் காரணமாயிருந்ததென்று" மார்க்ஸ் கூறியபொழுது, "அந்தப் புரட்சியைக் கொண்டுவரும் சரித்திரக் கருவியாக, தன்னறிவு இல்லாமலே" பிரிட்டன் விளங்கியதென்று மார்க்ஸ் விவரித்த பொழுது, அவர் விளக்கிக் கூறியபடி அவர் இரு நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டிருந்தார். அவைகளாவன :

முதலாவது, பழைய சமூக அமைப்பின் அழிவு.

இரண்டாவது, ஒரு புதிய சமூக அமைப்பின் பௌதிக அடிப்படையை ஸ்தாபித்தல்.

இந்த இரு அம்சங்களும் இன்றும் தொடர்ந்து வேலை செய்கின்றன. ஆனால் முந்தைய நிகழ்ச்சியிலிருந்து வளர்ந்தெழுந்த நவீன ஏகாதிபத்தியத்தின் புதிய கட்டத்துக் குணவிசேஷங்கள்,

மேற்சொன்ன இரு அம்சங்களின் முக்கியத்துவத்தை மறைத்துவிட்டன.

பழைய கைத்தொழிலின் அழிவு தொழிலாளர் தொகை குறைவதில் இன்னும் பிரதிபலிக்கிறது. ஏனென்றால், கைத்தொழில் அழியும் வேகத்தில் யந்திரத் தொழில் முன்னேறவில்லை. பழைய கிராம அமைப்பின் அழிவினால் விளைந்துள்ள முரண்பாடுகள் ஒரு பொதுவான விவசாய நெருக்கடியைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றன.

அதே சமயத்தில், மார்க்ஸ் தீர்க்க திருஷ்டியுடன் கூறியபடியே, பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபித்த பௌதீக அடிப்படையில் நவீன யந்திரத் தொழில், பையப் பையவாகிலும், முளைத்துள்ளது. இதன் மூலம், இந்திய சமூகத்தில் ஒரு புதிய வர்க்கம் தோன்றச் செய்து விட்டது. இதுவே நவீன யந்திரத் தொழில்களில் கூலிக்குப் பாடுபடும் ஆலைத் தொழிலாளி வர்க்கமாகும்; எதிர் கால இந்தியாவின் நவீன சமூக அமைப்பை சிருஷ்டிக்கவிருக்கும் சக்தியாகும்.

ஆனால் இந் நிகழ்ச்சி மேற்கொண்டு வளர்ந்த காரணத்தால் ஒரு புதிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலைமையில், மார்க்ஸ் எழுதிய காலத்தில் இருந்திராத சக்திகள் உண்டாகியிருக்கின்றன. இன்றைய தினம், உற்பத்திச் சக்திகள் பிரமாதமான தாவுத்தாவி நவீன கட்டத்தை அடைவதற்கு இந்தியாவின் சூழ்நிலை பூரண பக்குவமடைந்து விட்டது; இதன் தேவை ஒவ்வொரு வருஷமும் மேன்மேலும் அதிகமாக அவசரத் தன்மை பெறுகிறது; தவிர்க்க முடியாததாகிறது. ஆரம்ப காலத்தில், பிரிட்டிஷ் முதலாளித்துவ ஆதிக்கம் தன் அழித்தல் வினையின் மூலம் புதிய முன்னேற்றத்துக்குப் பாதையைச் செப்பனிட்டது; அத்துடன் அந்தப் புதிய முன்னேற்றத்துக்குத் தேவையான பௌதீக அடிப்படையையும் ஸ்தாபித்தது. இவ்வாறாக அது யதார்த்தத்தில் புரட்சிகரமான விளைவுகளுக்குக் காரணமாக விளங்கியது. ஆனால் அதற்கு மாறாக, இந்தியாவில் நவீன ஏகாதிபத்தியம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குப் பிரதான தடையாக இ கிறது; தனது சொந்த முதலாதிக்கத்தையும் அரசியலாதிக்கத்தையும் சகல வகைகளிலும் பயன்படுத்தி, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை அது தடுக்கிறது. பிரிட்டிஷ் முதலாளித்துவ ஆட் நடை முறையில் புரட்சிகரமான பணியாற்றிய காலம் மறை தொழிந்து விட்டது. இந்தியாவில் நவீன ஏகாதிபத்தியம் முழுக் முழுக்கப் பிற்போக்காகவிருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பாதியில், வளர்ந் கொண்டிருந்த முதலாளித்துவம் இந்தியாவின் பழைய சமூ அமைப்பை இடித்து அழித்தது. சில பிற்போக்கான மத கொடுமைகளையும் சமூகக் கொடுமைகளையும் புத்தி பூர்வமாக தாக்கியது. தன்னுடைய ஏகச் சக்கிராதிபத்தியத்தில் தேச

முழுவதையும் கொண்டு வரும் பொருட்டு, இந்திய அரசர்களை ஒருவர்பின் ஒருவராகப் பணிய வைத்தது. மேற்கு ஐரோப்பியக் கல்வி கருத்துக்களைப் பரப்ப ஆரம்ப முயற்சிகள் எடுத்தது; ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பத்திரிகை சுதந்திரக் கொள்கையைக் கூட ஸ்தாபித்தது. இந்தக் காலத்தில், இந்திய சமூகத்தின் முற்போக்காளர்கள், அதாவது வளர்ந்து வந்த மத்தியதர வர்க்கத்தினர், பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்து, அதன் முயற்சிகளுக்கு உதவினார்கள். அவர்களுக்குத் தலை சிறந்த உதாரணமாக ராஜா ராம் மோஹன்ராய் திகழ்கிறார். நசித்துக் கொண்டிருந்த பிற்போக்காளர்களும் அதிருப்தியடைந்த மன்னர்களும் இதர நிலப் பிரபுத்துவ சக்திகளுமே எதிர்ப்புக்குத் தலைமை தாங்கின. அவர்களுடைய தலைமை 1857 கலகத்துடன் முடிந்தது; அந்தக் கலகத்திலேயே மூழ்கி விட்டது. அச்சமயம், சுரண்டப்பட்டு ஒடுக்கப்பட்டு நிற்கும் விவசாயி மக்களின் குரலாக விளங்கவும் அவர்களுக்குத் தலைமை தாங்கவும் தகுதி படைத்த சக்தி எதுவும் இல்லை. அதனால் கலகம் தோற்றுப் போக நேர்ந்தது.

1857 கலகத்துக்குப் பிறகு, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கொள்கை மாறத்தொடங்கியது. இந்தியாவில் நவீன ஏகாதிபத்தியம் சமஸ்தானாதிபதிகளைத் தன் பதுமைகளாகப் பாதுகாக்கிறது; சமீபத்தில் வெளி வந்த புதிய அரசியல் சட்டத்தில் செய்திருப்பதைப் போல (1935-ம் வருடச் சட்டத்தையே இங்கு குறிப்பிடுகிறார்-மொ-ர்) அவர்களுடைய அரசியல் முக்கியத்துவத்தை அதிகரிக்க முயல்கிறது. முற்போக்கான இந்திய அபிப்பிராயம் சீர்திருத்தம் கோருவதற்கு எதிராக, நவீன ஏகாதிபத்தியம் பிற்போக்கான மத, சமூக மடமைகளைப் பாதுகாக்கிறது. (உதாரணங்கள் கல்யாண வயது வரையறுக்கும் பிரச்னை; தீண்டாமை முதலியன) உயர்ந்த வேலைப்பாடுடன் கூடிய வலைப் பின்னல் போன்ற அடக்குமுறை அமைப்பின் மூலம் பேச்சுரிமையையும் சிந்தனை உரிமையையும் நசுக்குகிறது. சமூகத்துறையிலும் கல்வித்துறையிலும் தொழில் துறையிலும் முன்னேற வேண்டுமென்ற பெருவாரியான இந்திய அபிப்பிராயத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது. இவற்றின் மூலம், ஏகாதிபத்தியம் பொருளாதாரத் துறையிலிருப்பதைப் போலவே சமூக, அரசியல் துறைகளிலும் பிற்போக்கின் பெட்டகமாக விளங்குகிறது.

ஆகவே, நவீன கட்டத்தில், இந்திய சமூகத்திலுள்ள வளரும் சக்திகள் அனைத்தும், பிற்போக்குச் சக்திகளின் அரணாகவும் பிரதான சத்துருவாகவுமுள்ள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளரும் தேசிய இயக்கத்தில் ஒன்றுபடுகின்றன. நசித்துக் கொண்டிருக்கும் பிற்போக்குச் சக்திகள் தான் இன்று ஏகாதிபத்திய ஆட்சிக்கு மிகுந்த விசுவாசமுள்ள ஆதரவாளர்களாகத் திகழ்கின்றன.

ஏகாதிபத்திய விலங்குகளையும், ஏகாதிபத்தியம் பாதுகாத்துப் பராமரிக்கும் காலாவதியான பொருளாதார அமைப்பையும்

இந்தியாவில் வளர்ந்து கொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் மோதிக் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தின் சூன்யத்துக்கு அடையாளமாகவும், ஜீவாதாரமான மாறுதலைக் கொண்டு வரும் முக்கிய சக்தியாகவும் விளங்கும் விவசாய நெருக்கடியில் இந்த மோதல் பிரதிபலிக்கிறது. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்ஸில் காண முடிந்ததைப் போல, ஜாரிஸ்ட் ருஷ்யாவின் அந்திக் காலத்தில் அங்கு காண முடிந்ததைப் போல, இந்தியாவிலும் விவசாயப் புரட்சி நெருங்கிக் கொண்டிருப்பதின் அறிகுறிகளைக் காண முடியும். இந்தியாவில் வளர்ந்து கொண்டிருக்கும் விவசாயப் புரட்சி, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வளர்ந்து கொண்டிருக்கும் தேசிய ஜனநாயக இயக்கத்துடன் பின்னிக் கிடக்கிறது. இவை இரண்டின் ஒற்றுமைதான் இந்தியச் சரித்திரத்தில் இப்பொழுது தொடங்கியிருக்கும் புதிய சகாப்தத்தின் திறவுகோல்.

லண்டன்
1940

ரஜனி பாமி தத்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி[1]

லண்டன், வெள்ளிக்கிழமை, ஜூன் 10, 1853.

துருக்கி, (மத்தியதரைக் கடல் தீவான) சார்டீனியா, சுவிட்சர்லாந்து ஆகியவற்றின் பிரச்னைகள் சமாதான முறையில் பைசலாவது நிச்சயமென்று வியன்னாவிலிருந்து வரும் தந்திச் செய்திகள் கூறுகின்றன.

நேற்று இரவு, காமன்ஸ் சபை இந்தியாவைப் பற்றி மாமூலான மந்தத்துடன் விவாதம் நடத்தியது. **சர் சார்லஸ் வுட், சர். ஜே. ஹாக்** ஆகியோரின் அறிக்கைகள் நம்பிக்கையுடன் பொய்யுரைப்பதாக **பிளாக்கெட்** குற்றஞ் சாட்டினார். மந்திரிகள் சார்பில் பலர் இக்குற்றச்சாட்டைத் தம்மால் இயன்ற அளவுக்கு மறுத்தார்கள். இறுதியாக, தவிர்க்கப்பட முடியாத நபரான **ஹ்யூம்** பேச எழுந்தார். மந்திரிகள் மசோதாவை வாபஸ் வாங்க வேண்டுமென்று கோரி அவர் பேசினார். விவாதம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

ஹிந்துஸ்தானம், ஆசியாவின் அளவுக்கேற்ற **இத்தாலி**யாகும். இத்தாலிக்கு **ஆல்ப்ஸ்** மலைகளிருப்பதைப் போல அங்கு **ஹிமாலயம்**; இத்தாலிக்கு **லெம்பார்டி** சமவெளிகளிருப்பதைப் போல, அங்கு **வங்காள** சமவெளிகள்; இத்தாலிக்கு **அப்பினைன்கள்** இருப்பதைப் போல, அங்கு **தக்காணம்**; இத்தாலிக்கு அருகில் **சிஸிலித்** தீவு இருப்பதைப் போல, அங்கு **இலங்கைத்** தீவு. இத்தாலியைப் போல, இந்தியாவின் பூமியும் பலவகைப்பட்ட பொருட்களை அளிக்கிறது. இத்தாலியைப் பேர்ல இந்தியாவும் அரசியல் ரீதியில் துண்டாடப் பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பாளன் ஈட்டி இத்தாலியை வெவ்வேறு தேசியச் சமூகங்களாக மீண்டும் மீண்டும் அமைத்ததைப் போலவே, ஹிந்துஸ்தானம், முகம்மதியர் அல்லது முகலாயர், அல்லது பிரிட்டிஷார் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிராத பொழுது, பலப்பல சுயேச்சையான ராஜ்யங்களாகச் சிதறிக் கிடந்தது; எத்தனை நகரங்கள் உள்ளனவோ அத்தனை ராஜ்யங்களாக உடைந்தது; அல்லது எத்தனை கிராமங்கள் உள்ளனவோ அத்தனை ராஜ்யங்களாகக் கூடக் கரைந்தது. அவை சுயேச்சையாக விருந்தன; ஒன்றோடொன்று மோதிக் கொண்டும் நின்றன. எனினும் சமுதாயக் கோணத்திலிருந்து பார்த்தால், ஹிந்துஸ்தான் கீழ்த் திசையின் இத்தாலியல்ல. கீழ்த்திசையின் அயர்லாந்து ஆகும். பெரு வாழ்வுக்குரிய போக லோகமும் வாழ்வைப் பாழாக்கும் துக்க லோகமும் விசித்திரமான முறையில்

---

(1) இந்தக் கட்டுரை, **நியூயார்க் டெய்லி டிரிப்யூன்** பத்திரிகையில் 1853 ஜூன் 25-ல் வெளி வந்தது.

சேர்ந்திருப்பதை, ஹிந்துஸ்தான மதத்தின் புராதன பாரம்பரியம் முன்பே பிரதிபலித்திருக்கிறது. அந்த மதம் உலக இன்பங்களை சம்பூரணமாக நுகர்ந்து வாழ வேண்டுமென்று கூறும் மதமாகவும், புலன்களை அடக்கி தன்னைத்தானே வதைத்துக் கொள்ள வேண்டுமென்று கூறும் துறவற மதமாகவும் உள்ளது. லிங்கம் தரித்த சிவபக்தர்களின் மதமும் அதுவே; ஜகன்னாதனைத் தெய்வமாகக் கொண்ட மதமும் அதுவே. சன்னியாசியின் மதமும் அதுவே; சுகபோகியின் மதமும் அதுவே.

ஹிந்துஸ்தானத்தின் வரலாற்றில் ஒரு பொற்காலம் இருந்தது என்ற அபிப்பிராயத்தை நான் ஏற்கவில்லை. இதற்காக, சர் **சார்லஸ் வுட்** மாதிரி **கூலிகான்** ஆதரவை நான் நாடப்போவதில்லை. ஆனால் உதாரணத்துக்கு, **அவுரங்கசீப்** காலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது வடக்கே முகலாயரும், தெற்கே போர்ச்சுகீசியரும் தோன்றிய சகாப்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது மகம்மதியர் படையெடுப்பு நடத்திய காலத்தையும் தென்னிந்தியா பல ராஜ்யங்களாகச் சிதறுண்டிருந்த காலத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். அல்லது, நீங்கள் விரும்பினால் பண்டைக் காலத்தில் பிரவேசித்துப் பாருங்கள்; உலக சிருஷ்டி காலத்தைப் பற்றி கிறிஸ்துவ மதம் நிர்ணயித்துக் கூறுகிறதே, அதற்கும் முன்பாகவே இந்தியாவில் துயர சகாப்தம் தொடங்கிவிட்டதாகக் கூறும் பிராம்மண புராண இதிஹாசங்களின் காலகணித நிர்ணயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள்.

இதற்கு முன்னால் ஹிந்துஸ்தான் பட்ட துன்பத்திலிருந்து சாராம்சத்தில் மாறுபட்டதும், அதைவிட மிகமிக உக்கிரமானதுமான துன்பம் பிரிட்டிஷாரால் ஹிந்துஸ்தானுக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதில் எத்தகைய சந்தேகமும் இருக்க முடியாது. சால்ஸெட்டிலுள்ள ஆலயத்தில் நம்மைத் திடுக்கிடச் செய்யும் அதிகுரூர தேவதையை விடப் பயங்கரமான சேர்க்கையாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஐரோப்பியக் கொடுங்கோன்மை ஆசியக் கொடுங்கோன்மையுடன் சேர்ந்து அழுத்துவதை நான் குறிப்பிடவில்லை.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி டச்சு ஏகாதிபத்திய ஆட்சியின் நகலேதான்; அதற்கு அலாதியான அம்சம் ஒன்றுமில்லை. ஆகவே, பழைய டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியைக் குறித்து, ஜாவாவின் இங்கிலீஷ் கவர்னரான **ஸர் ஸ்டான்போர்ட் ராப்பிள்ஸ்** கூறியதை அப்படியே திரும்பக் கூறினால், பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் வேலையை விளக்குவதற்கு அதுவே போதுமானது. அவர் கூறியதாவது:

“டச்சுக் கம்பெனி லாபவேட்டை வேட்கையால் மாத்திரமே உந்தப்பட்டது. மேற்கு இந்தியத்தீவின் தோட்ட முதலாளி தன் தோட்டத்தில் வேலை செய்யும் அடிமைகளிடம் கொண்டிருந்த மதிப்பு அல்லது அனுதாபம்கூட டச்சுக் கம்பெனிக்குத் தன்

பிரஜைகளிடம் கிடையாது; ஏனென்றால், தோட்ட முதலாளி தன் அடிமைகளைக் கிரயம் கொடுத்து வாங்கியிருந்தான்; டச்சுக் கம்பெனி அவ்வாறு தன் பிரஜைகளுக்கு விலைகொடுத்து வாங்கவில்லை. டச்சுக் கம்பெனி தன்னிடமிருந்த சகல வகைப்பட்ட கொடுங்கோன்மைச் சாதனங்களையும் பயன்படுத்தி, மக்களிடமிருந்து அதிகப்பட்சமான அளவுக்குப் பறித்தது; அவர்களுடைய உழைப்பின் வண்டலையும் சக்கையையும் கூடத் துளியும் விடாமல் பிழிந்தெடுத்தது. இவ்வாறாக, அரசியல் வாதிகள் அனுபவத்தில் பெற்ற சாமர்த்திய சாகஸத்துடனும் ஏகபோகமாக அனுபவிக்க வேண்டுமென்று பேராசைப்படும் வியாபாரிகளின் சுயநல வெறியுடனும் செயலாற்றி, மனம்போன போக்கில் நடந்துவந்த கொடிய ஆட்சியின் தீமைகளைப் பெருக்கினார்கள்."

ஹிந்துஸ்தானில் பல உள் நாட்டு யுத்தங்களும் படையெடுப்புகளும் ஆக்கிரமிப்பாளரின் வெற்றிகளும் புரட்சிகளும் பஞ்சங்களும் நிகழ்ந்திருக்கின்றன. இடைவிடாமல் நிகழ்ந்த அவற்றின் விளைவுகள் விசித்திரமான சிக்கல்கள் நிறைந்ததாகவும், வேகம் செறிந்தனவாகவும் அழிக்கக் கூடியனவாகவும் தோன்றிய போதிலும் அவை மேலோட்டத்துக்குக் கீழே பாதிக்கவில்லை. ஆனால் இங்கிலாந்து இந்திய சமூகம் முழுவதையும் தகர்த்துத் தூள் தூளாக்கி விட்டது. அதே சமயத்தில் எத்தகைய புனர் நிர்மாண அறிகுறியும் இதுவரையில் தோன்றவில்லை. இந்த வகையில், பழைய உலகத்தை இழந்துவிட்டு, ஒரு புதிய உலகத்தைப் பெறாமல் நிற்பதானது இன்று துன்பச் சூழலில் தவிக்கும் இந்தியனுக்கு ஒரு விசேஷமான வியாகூலத்தை ஏற்படுத்தியிருக்கிறது; அது பிரிட்டனால் ஆளப்படும் ஹிந்துஸ்தானத்தை அதன் புராதன பாரம்பரியங்கள் அனைத்திலிருந்தும் அதன் கடந்தகால சரித்திரம் முழுவதிலுமிருந்தும் துண்டித்துவிட்டிருக்கிறது.

பொதுவாக, ஆசியாவில், அனாதிகாலந் தொட்டு, மூன்று அரசாங்க இலாகாக்கள் இருந்து வந்திருக்கின்றன: (1) நிதி இலாகா அதாவது உள் நாட்டைக் கொள்ளையடிக்கும் இலர்கா; (2) யுத்த இலாகா அல்லது வெளி நாட்டைக் கொள்ளையடிக்கும் இலாகா. (3) பொது மராமத்து இலாகா; நிலநிலையும் சீதோஷ்ண நிலையும், குறிப்பாக, சஹாரராவிலிருந்து அரேபியா, பாரசீகம், இந்தியா, தார்த்தாரி வழியாக ஆசியாவின் மிக உயர்ந்த மேட்டுப் பூமிவரை பரந்த பாலைவனப் பிரதேசங்கள் படர்ந்திருப்பதும், கீழ்த்திசை நாடுகளின் வேளாண்மைக்குக் கால்வாய்கள், நீர்ப்பாசனங்கள் மூலம் செயற்கைப் பாசனம் அமைவதை அடிப்படையாக்கின. எகிப்தையும் இந்தியர்வையும் போலவே, மெஸப்பட்டோமியா, பாரசீகம் முதலான நாடுகளிலும் நிலத்தை வளப்படுத்துவதற்கு நீர்ப்பெருக்கைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நீர்மட்டம் உயர்ந்திருப்பதைப் பாசன கால்வாய்களை நிரப்புவதற்கு அனுகூலப்

படுத்திக்கொள்கிறார்கள். இவ்வாறு, தண்ணீரைச் சிக்கனமாகவும் பொதுவாகவும் உபயோகிப்பது அத்தியாவசியமாகிறது; பிலாண்டர்ஸ் (பெல்ஜிய நாட்டுப் பகுதி) இத்தாலி போன்ற மேல் நாடுகளில், தனி நபர்கள் வலியச் சேர்ந்து கூட்டு முயற்சி எடுக்கச் செய்த இந்தத் தண்ணீர்ப் பிரச்னை கீழ் நாடுகளில் நாகரிகம் மிகக் குறைந்த தரத்திலிருந்ததாலும், தனிப்பட்டவர் கூட்டுறவை அசாத்தியமாக்கும் அளவுக்கு நிலப்பரப்பு பெரிதாயிருந்ததாலும், மத்திய சர்க்காருடைய அதிகாரத்தின் தலையீட்டை அவசியமாக்கிற்று. ஆகவே, பொதுப் பாசனங்களை அளிப்பதென்ற பொருளாதாரக் கடமையும் சகல ஆசிய சர்க்கார்களுக்கும் ஏற்பட்டது. இவ்வாறு நிலம் செயற்கை வழிகளில் வளப்படுத்தப்படுவதாலும், அதுவும் மத்திய சர்க்காரைப் பொறுத்திருப்பதாலும், பாசனமும் வடிகாலும் உதாசினத்தால் க்ஷீணித்தால், நிலமும் வளமிழந்து உலர்வதாலும் தான், ஒரு காலத்தில் சீரிய முறையில் சாகுபடியான பிரதேசங்கள் இப்பொழுது வறண்ட பாலைவனமாகக் காட்சியளிக்கின்றன; பல்மைரா (சிரியாவில் முன்பு துலங்கி இப்பொழுது அழிந்து விட்ட நகரம்), பெட்ரா (அரேபியாவில் முன்பு பிரகாசித்து இப்பொழுது இருண்டுவிட்ட நகரம்), யெமன் நாட்டு அழிந்த பகுதிகள், எகிப்து, பாரசீகம், ஹிந்துஸ்தானம் ஆகிய நாடுகளின் பெரிய மாகாணங்கள் ஆகியவை இதற்கு உதாரணங்கள். மேற்சொன்ன அதே காரணங்களால்தான், ஒரு நாசகார யுத்தம் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு தேசத்தைப் பாழாக்கி ஜனவாசமில்லாமல் செய்து விடுகிறது; தன் நாகரிகமனைத்தையும் அந்த தேசம் இழக்கச் செய்து விடுகிறது.

இப்பொழுது கிழக்கிந்தியாவிலுள்ள பிரிட்டிஷார், தமது பூர்வாதிகாரிகளிடமிருந்து நிதி இலாகாவையும் யுத்த இலாகாவையும் சுவீகரித்துக் கொண்டார்கள்; ஆனால் அவர்கள் பொதுப் பாசன மராமத்துகளை அறவே புறக்கணித்து விட்டார்கள். ஆகவே, தங்குதடையோ சர்க்கார் தலையீடோ இல்லாமல் சுதந்திரமாகத் தொழில் நடத்தும் பிரிட்டிஷ் கொள்கையை, போட்டி சுதந்திரக் கொள்கையை அடிப்படையாகக் கொள்ளமுடியாத விவசாயம் க்ஷீணிக்கிறது. ஆனால் ஆசிய சாம்ராஜ்யங்களில், ஒரு சர்க்காரின்கீழ் விவசாயம் க்ஷீணிப்பதும், இன்னொரு சர்க்காரின்கீழ் விவசாயம் புத்துயிர் பெறுவதும் சர்வ சகஜமாகும். அங்கு. அறுவடைகள் நல்ல அல்லது கெட்ட சர்க்காரைப் பொறுத்தவை; ஐரோப்பாவில் நல்ல அல்லது கெட்ட பருவங்களைப் பொறுத்திருப்பதைப்போல. ஆக, விவசாயம் நசுக்கப்பட்டதாலும் புறக்கணிக்கப்பட்டதாலும், கேடு விளைந்தபோதிலும், ஆசிய உலகம் முழுமையின் சரித்திரத்திலேயே புதுமையானதும், வேறு வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஒரு விஷயத்துடன்கூட அதற்கு சம்பந்தம் இருந்திராவிட்டால், அதை (விவசாயத்தின் வீழ்ச்சி--மொ-ர்) இந்திய சமூகத்தின்மீது பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளன் தொடுத்த கடைசித் தாக்குதலாகக் கருதமுடியாது. இந்திய

சரித்திரத்தின் அரசியல் அம்சம் மாறிக்கொண்டே வருவதாகத் தோன்றியபோதிலும், அதன் சமூக நிலைமை மிகமிகத் தொலைதூரத்திலுள்ள பூர்வீகக் காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு வரையில் மாறுதலே அடையவில்லை. நூல் நூற்பவர்களையும் துணி நெய்பவர்களையும் லட்சோபலட்சக்கணக்கில் உற்பத்தி செய்த கைத்தறியும் கைராட்டினமும் அந்தச் சமூகத்தின் அமைப்புக்குச் சுழியாணிகளாக விளங்கின. அனாதிகாலந்தொட்டு, ஐரோப்பா இந்திய உழைப்பாளிகளின் போற்றத்தக்க நெசவாடைகளைப் பெற்று வந்தது; அவற்றுக்குப் பதிலாக, தனது அபூர்வ உலோகங்களை அனுப்பியது. இவ்வாறாக இந்திய சமூகத்தின் அத்தியாவசிய உறுப்பினரான தட்டாருக்குத் தேவையான பொருளை ஐரோப்பா அனுப்பியது. இந்தியர்களுக்கு மேன்மையான ஆபரணங்களிடம் அதிக ஆசை உண்டு; ஆகவே மிகவும் தாழ்ந்த தட்டிலுள்ளவர்கள்கூட, கிட்டத்தட்ட அம்மணமாக நடமாடிக் கொண்டிருப்பவர்கள்கூட, தங்கத்தில் செய்யப்பட்ட காதணிகளையும் கழுத்தில் அணிந்து கொள்ளக்கூடிய ஏதாவது ஒரு பொன்னாபரணத்தையும் அணிந்து கொள்வார்கள். கைவிரல்களிலும் கால்விரல்களிலும் மோதிரங்கள் அணிவதும் சகஜம். அநேகம் பெண்களும் குழந்தைகளும் தங்கம் அல்லது வெள்ளியில் செய்ததாகவுள்ள எடைமிகுந்த காற் சதங்கைகளையும் வளையல்களையும் அணிந்து கொள்வார்கள். பொன் அல்லது வெள்ளியில் செய்த தெய்வ விக்கிரகங்களை அநேக வீடுகளில் பார்க்க முடியும்.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளன் இந்தியக் கைத்தறியை உடைத்தெறிந்தான்; கைராட்டினத்தைச் சுக்கு நூறாக்கினான். முதலில், இந்தியப் பஞ்சாடைகளை ஐரோப்பிய மார்க்கெட்டுகளிலிருந்து பிரிட்டன் வெளியேற்றியது. பிறகு, ஹிந்துஸ்தானத்துக்குள் முறுக்கு நூலைக் கொண்டு வந்தது. இறுதியாகப் பஞ்சாடையின் தாயகத்திலேயே பஞ்சாடைகளை இறக்குமதி செய்து குவித்தார்கள். 1813-லிருந்து 1836-க்குள்ளாக, பிரிட்டனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியான முறுக்கு நூல் 5200 மடங்கு அதிகமாயிற்று. 1824-ல் இந்தியாவுக்குச் சென்ற பிரிட்டிஷ் பஞ்சாடைகள் 10 லட்சம் கஜங்கள் கூடவில்லை; 1837-லோ, அவை 640 லட்சம் கஜங்களை விட அதிகம். அதே சமயத்தில், டாக்கா நகரத்தின் ஜனத்தொகை 150 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரமாகக் குறைந்தது. இவ்வாறு பஞ்சாடைகளுக்குப் பிரசித்தி பெற்ற இந்திய நகரங்கள் க்ஷீணித்ததையும் விட மோசமான விளைவு என்னவென்றால், ஹிந்துஸ்தான் முழுவதும் விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்குமிருந்த ஒற்றுமையை பிரிட்டிஷ் நீராவி சக்தியும் விஞ்ஞானமும் வேரோடு உடைத்தெறிந்தன.

ஆக, ஒரு புறத்தில் இதர கீழ்த் திசைப் பிராந்திய மக்களைப் போலவே இந்தியனும் தன்னுடைய விவசாயத்துக்கும் வர்த்தகத்

துக்கும் முதன்மையாக அவசியப்படுகிற பொதுப்பர்சன, மராமத்து வேலைகளை மத்திய சர்க்கார் வசம் ஒப்படைத்திருந்தான்; மறுபுறத்தில், தேசத்தின் நிலப்பரப்பு முழுவதும் சிதறிக் கிடந்த இந்தியன், விவசாயமும் கைத் தொழில்களும் ஒரு குடும்பமாக ஐக்கியப் பட்டிருப்பதால் சிறு சிறு இடங்களில் கூட்டு வாழ்க்கை நடத்தினான். இந்த இரண்டு நிலைமைகளும், குறிப்பிட்ட அம்சங்களை உடைய ஒரு சமூக அமைப்பைத் தொன்று தொட்டு உண்டாக்கியுள்ளன. இந்த சமூக அமைப்பு கிராம அமைப்பு என்று அழைக்கப் படுகிறது. அந்தச் சிறு யூனியன்கள் ஒவ்வொன்றுக்கும் அந்தச் சமூக அமைப்பு சுயேச்சையான ஸ்தாபனத்தையும் தனித்த வாழ்வையும் அளித்தன. இந்திய விவகாரங்களைப் பற்றி பிரிட்டிஷ் காமன்ஸ் சபை வெளியிட்ட ஒரு பழைய அதிகார பூர்வமான ரிப்போர்ட்டிலுள்ள கீழ்க்காணும் வர்ணனையிலிருந்து அந்தச் சமூக அமைப்பின் அலாதியான தன்மையை அறிய முடியும் :—

“பூகோள ரீதியாகப் பார்த்தால், ஒரு கிராமம் என்பது சில நூறு அல்லது ஆயிரம் ஏக்கராக்கள் விளை நிலமும் தரிசு நிலமும் கொண்ட பிரதேசமாகும். அரசியல் ரீதியில் பார்த்தால் அது ஒரு நகர சபையை ஒத்திருக்கிறது. அதன் அதிகாரிகளும் சேவகர்களும் கீழ்க்கண்ட வர்ணனைக்கு உட்பட்டவர்கள்: **படேல்** அல்லது கிராம நாட்டாண்மைக்காரர்:–இவர் கிராம விவகாரங்களைப் பொதுவாக நிர்வகிக்கிறார்; கிராம ஜனங்களிடையே எழும் தகராறுகளைத் தீர்த்து வைக்கிறார்; போலீஸ் விவகாரங்களைக் கவனிக்கிறார்; கிராமத்தில் வரி வசூல் செய்கிறார். அவருக்குச் சொந்தச் செல்வாக்கு இருப்பதாலும், நிலைமையைப் பற்றியும் ஜனங்களின் பிரச்னைகளைப் பற்றியும் அவருக்கு விவரஞானம் இருப்பதாலும், வரிவசூலுக்குத் தலைசிறந்த தகுதிபடைத்தவராக அவர் விளங்குகிறார். சாகுபடி சம்பந்தமான சகல கணக்குகளையும் பதிவுசெய்து காபந்து செய்கிறார் **கர்ணம்- தலையாரி** :—குற்றங்கள் சம்பந்தமாக தகவல்கள் சேகரிப்பார்; மேலும் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமம் செல்லும் பிரயாணிகளுக்குப் பாதுகாப்பு அளித்துத் துணை செல்வார். **தோட்டி** கிராமத்துக்குள் பல கடமைகளைச் செய்வார்; பயிர்களைக் காபந்து செய்வதும், அறுவடையாகும் தான்யத்தை அளப்பதில் உதவுவதும் அவருடைய கடமைகளாகும். **காவற்காரர்**:—கிராம எல்லைகளைப் பாதுகாப்பார்; எல்லைத் தகராறுகளில் சாட்சியம் அளிப்பார். **தண்ணீர் மேஸ்திரி**, விவசாயத்துக்காக குளங்களிலிருந்தும் நீரோட்டங்களிலிருந்தும் தண்ணீரை வினியோகிப்பார். **பிராம்மணர்**:—கிராமத் தொழுகையை நடத்துவார். **பள்ளியாசிரியர்**:—கிராமப் பாலர்களுக்கு மணல்மீது எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதைப் பார்க்கலாம். **பஞ்சாங்க-பிராம்மணர்** அல்லது **சோதிடர்** முதலியோரும் உண்டு. இந்த அதிகாரிகளும் சேவகர்களும்தான் பொதுவாக கிராம நிர்வாகத்தின் உறுப்பினர்கள். ஆனால் சில பிரதேசங்களில்,

நிர்வாகத்தினர் குறைவாக விருப்பார்கள்; மேற்சொன்ன கடமைகளில் சிலவற்றை ஒருவரே செய்வார். வேறு சில பிரதேசங்களில், மேற்சொன்னதைவிட அதிகமான நபர்கள் கிராம நிர்வாகத்தில் வேலை செய்கிறார்கள். இந்த எளிய முனிசிபல் நிர்வாக முறைப்படி அந்த தேச மக்கள் அநாதிகாலந்தொட்டு வாழ்ந்து வருகிறார்கள். கிராம எல்லைகள் அபூர்வமாகவே மாறுதலடைந்துள்ளன; யுத்தம், பஞ்சம் அல்லது நோய் கிராமங்களைச் சில சமயங்களில் சேதப்படுத்தியபோதிலும், பாழ்படுத்தியபோதிலும்கூட, அதே பெயர், அதே எல்லைகள், அதே நலன்கள், அதே குடும்பங்கள்கூட தொன்றுதொட்டுத் தொடர்ந்து வாழ்கின்றன. ராஜ்யங்கள் உடைந்து சிதறுண்டு போவதைப்பற்றி அந்தப் பிரஜைகள் கவலைப்படவேயில்லை; கிராமம் முழுசாக இருக்கும்பொழுது, அது எந்த அரசுக்கு மாற்றப்பட்டிருக்கிறதென்பதைப் பற்றியோ, எந்த மகாராஜாவுக்குப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பற்றியோ, அவர்கள் கவலைப்படவில்லை. கிராமத்தின் பொருளாதார உள்ளமைப்பு மாறவேயில்லை. இன்றும், படேல் நாட்டாண்மைக்காரன்; இன்றும் அவர் கிராமத்தின் குட்டி நீதிபதி அல்லது மாஜிஸ்ட்ரேட்டாகவும் கலெக்டர் அல்லது வரிவசூலிப்பவராகவும் செயலாற்றுகிறார்."

ஒரே அச்சாக அமைந்த இந்தச் சிறு சமூக வடிவங்கள் பெரும் அளவுக்குக் கரைந்துவிட்டன; அவை மறைந்து கொண்டிருக்கின்றன. வரி வசூலிக்கும் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தனும் பிரிட்டிஷ் சோல்ஜரும் மிருகத்தனமாக ஆக்கிரமித்தது இதற்கு பிரதான காரணமல்ல; இங்கிலீஷ் நீராவிச் சக்தியும் இங்கிலீஷ் வர்த்தக சுதந்திரமும் ஆற்றிய வினையே பிரதான காரணம். இந்தக் குடும்ப சமூகங்கள் வீட்டுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தன. கைநூற்றல், கைநெசவு, கைப்பட உழுது பயிரிடுதல் ஆகியவற்றின் அலாதியான சேர்க்கையை அந்தக் குடும்ப சமூகங்கள் அடிப்படையாகக் கொண்டிருந்தன. அந்தச் சேர்க்கை தன்னைத்தானே சார்ந்து நிற்கும் சக்தியை ஒவ்வொரு குடும்ப சமூகத்துக்கும் அளித்தது. இங்கிலீஷ் தலையீட்டின் விளைவாக, லங்காஷயர் நூல் வங்காள நெசவாளிக்கு வருகிறது; அல்லது நூல் நூற்கும் இந்தியன், துணி நெய்யும் இந்தியன் இருவருமே தொழிலை இழந்து விடுகின்றனர். இவ்வாறு ஓரளவு அநாகரீகமும் ஓரளவு நாகரீகமாகவும் இருந்த இந்தச் சிறு சமூகங்களின் பொருளாதார அடிப்படை தகர்ந்து விட்டதால், அவை கரைந்து விட்டன. இவ்வாறாக, பிரிட்டிஷ் தலையீடு, ஆசியாவின் வரலாறு அறிந்த **ஒரே ஒரு சமூகப் புரட்சியை**, மிகப் பெரிய புரட்சியை, செய்து விட்டது. இப்பொழுது, அந்த லட்சோபலட்சக்கணக்கான தந்தை வழிச் சமூகங்கள், சுறுசுறுப்பு மிகுந்த சாது நிரபராதிச் சமூகங்கள், தமது ஸ்தாபன அமைப்பை இழந்து பின்னம் பின்னமாகச் சிதறிக் கலைந்து, துன்பக்கடலில் தத்தளிப்பதையும், இந்தச் சமூகங்களின் அங்கத்தினர்கள் ஒரே

சமூகத்தில் தமது புராதன நாகரிகத்தையும் பரம்பரை ஜீவனோபாயத்தையும் இழந்து நிற்பதையும் பார்க்கப் பார்க்க மனித உணர்ச்சிக்கு வேதனை ஏற்படுகிறது. எனினும் இந்த அமைதியான கிராம சமூகங்கள் சாதுக்களாகத் தோன்றிய போதிலும், கீழ்நாட்டுக் கொடுங் கோன்மைக்குத் திடமான அடிப்படையாக விருந்தன என்பதை நாம் மறக்க முடியாது. அந்தச் சமூகங்கள் மனித மூளையைச் சின்னஞ் சிறு கூட்டுக்குள் அடைத்து, அதை மூட நம்பிக்கையின் சுலபமான கருவியாகவும், பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும், சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் சரித்திர பூர்வமான சக்திகளையும் அது (மனித மூளை) பெற முடியாமல் செய்ததையும் நாம் மறக்க முடியாது. சின்னஞ் சிறு நிலத்தில் குவிந்துகொண்டு, சாம்ராஜ்யங்கள் வீழ்ச்சி அடைவதையும், வர்ணிக்க முடியாத கொடுமைகள் நிகழ்வதையும் பெரிய நகரங்களின் மக்கள் படுகொலை செய்யப் படுவதையும் சலனமில்லாமல் பார்த்துக்கொண்டிருந்த அச் சமூகங்களின் காட்டுமிராண்டித்தனமான தன்னகங்காரத்தை நாம் மறக்கமுடியாது. இயற்கையில் நிகழும் சம்பவங்கள் பால் எவ்வளவு அக்கறை காட்டினார்களோ, அதே அளவு அக்கறையைத்தான் மேற்சொன்ன சம்பவங்கள்பற்றியும் காட்டினார்கள். தவிர, எந்த ஆக்கிரமிப்பாளன் கவனமாவது விழுந்து விட்டால், இந்தச் சமூகங்கள் எதிர்க்க வகையில்லாமல் ஆக்கிரமிப்புக்கு அடிபணிந்தன. இந்தத் தேக்கம் நிறைந்த, அசைவில்லாத, அகௌரவ வாழ்க்கை, சிருஷ்டிக்கும் திறனில்லாத செயலற்ற வாழ்க்கை நேர் மாறான விளைவுகளையும் சிருஷ்டித்தது. கட்டுக்கடங்காத நாசகார சக்திகள் நோக்கமில்லாத முறையில் குமுறி எழுந்தன; ஹிந்துஸ்தானத்தில் கொலையே ஒரு தெய்வச் சடங்காயிற்று; இதை நாம் மறக்கக்கூடாது. இந்தச் சிறு சமூகங்கள் சாதி வேறுபாடுகளாலும் அடிமைத் தனத்தாலும் களங்கமடைந்திருந்தன. மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானனாக்குவதற்குப் பதிலாக, அவனைச் சுற்றுச் சார்புக்கு அடிமைப் படுத்தின. தானாக வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை ஒருபொழுதும் மாறாத இயற்கை விதியாகச் செய்தன. இந்த விதத்தில் இயற்கையையே மனிதன் கும்பிட்டு வணங்கும் நிலைமையைச் சிருஷ்டித்தது. இயற்கையின் எஜமானனாகிய மனிதன், குரங்காகிய ஹனுமான் முன்னாலும், பசுவாகிய காமதேனு முன்னாலும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது. இவற்றையும் நாம் மறக்கக் கூடாது.

இந்தியாவில் ஒரு சமுதாயப் புரட்சி ஏற்படுவதற்கு பிரிட்டன் காரணமாக இருந்தபொழுது, அது துன்மார்க்க நலன்களால்தான் உந்தப்பட்டதென்பதும், அந்தப் புரட்சியைச் சாதிப்பதில் அது திறமையற்ற முறையில் நடந்து கொண்டது என்பதும் உண்மையே. ஆனால் பிரச்னை அதுவல்ல. ஆசியாவின் சமூக நிலையில் அடிப்படையான புரட்சி ஏற்படாமல் மனித குலம் தன் லட்சியத்தை எய்த முடியுமா என்பதே பிரச்னை. முடியாதென்றால்,

இங்கிலாந்து எவ்வளவு குற்றங்கள் இழைத்திருந்த போதிலும், அது தனக்கே தெரியாமல், சரித்திரத்தின் கருவியாக விளங்கி அந்தப் புரட்சியைச் சாதித்திருக்கிறது.

ஆகவே, ஒரு புராதன உலகம் உடைந்து நொறுங்கும் காட்சி நமது சொந்த உணர்ச்சிகளுக்கு எவ்வளவு கசப்பாக விருந்த போதும், சரித்திரத்தின் கோணத்தில் பார்த்தால், நாம் **கத்தே**யுடன் சேர்ந்து "அதிக இன்பத்தைக் கொண்டு வரும் இந்தச் சித்திரவதை நம்மைத் துன்புறுத்த வேண்டுமா?" என்று உரிமையுடன் கேட்க முடியும்.

இந்திய மசோதா*

(அ) முன்னுரையாக

லண்டன், செவ்வாய், *1853* மே *25.*

கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் **1854-ல்** காலாவதியாகிறது. இந்தியாவின் எதிர்கால ஆட்சியைப் பற்றி சர்க்கார் தமது அபிப்பிராயங்களை ஜூன் மாதம் 3-ந் தேதி ஸர் **சார்லஸ் வுட்** மூலம் தெரிவிப்பார்களென்று **ஜான் ரஸ்ஸல் பிரபு** காமன்ஸ் சபையில் முன்னறிவிப்புச் செய்திருக்கிறார். இந்தப் பிரம்மாண்டமான இந்தியப் பிரச்னையைக்கூட வாமனன் அளவுக்குச் சுருக்குவதற்கான முறையைக் கூட்டு சர்க்கார் கண்டுபிடித்திருக்கிறதென்று முன்பே அங்கீகரிக்கப்பட்ட பொது வதந்திகள் கூறின; அவ்வாறே மந்திரி சபையைச் சார்ந்து நிற்கும் பத்திரிகைகள் ஜாடை காட்டிக் குறிப்பறிவிக்கின்றன. இங்கிலீஷ்மக்கள் ஒரு புதிய ஆசாபங்கத்தை அனுபவிப்பதற்கு, அப்ஸர்வர் பத்திரிகை அவர்களைத் தயார் செய்கிறது. (ஸ்காட்லந்திலுள்ள துறைமுகப் பட்டினமான) அபிர்டீன் நகரிலிருந்து வெளிவரும் இந்தப் பத்திரிகை மந்திரிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது. "நமது கிழக்கிந்திய சாம்ராஜ்யத்தின் சர்க்காருக்கான புதிய ஸ்தாபன விஷயத்தில், பொதுவாக எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே செய்ய வேண்டியிருக்கும்." எதிர்பார்க்கப்படுவதைக் காட்டிலும் மிகக்குறைவாகவே ரஸ்ஸல் பிரபுவும் அபிர்டீன் பிரபுவும் செய்ய வேண்டியதாகவிருக்கும்.

மாறுதல் சம்பந்தமான யோசனையின் இரண்டு பிரதான அம்சங்கள் இரண்டு செய்தித் துணுக்குகளாக வெளிவந்திருக்கின்றன. முதலாவதாக, டைரக்டர்களின் போர்டுக்குச் சில கூடுதலான அங்கத்தினர்களை மன்னர் நேரடியாக நியமிப்பார்;

---

* **இக் கட்டுரை "நியூயார்க் டெயிலி டிரிப்யூன்" பத்திரிகையில்** 1853 **ஜூன் 9-ல் வெளி வந்தது.**

இதன் மூலம் அந்தப் போர்டுக்கு பலமளிக்கப்படும். ஆனால், "முதலில் சிறுகச்சிறுக ஜாக்கிரதையாக" இந்தப் புதிய ரத்தத்தைப் புகுத்த வேண்டும். இவ்வாறு "மிகுந்த முன்னெச்சரிக்கையுடன்" உட்செலுத்தப்படும் ரத்தம் அசைவற்ற நிலைக்கு வருவதற்குப் போதுமான அவகாசம் பிடிக்க வேண்டும்; அதன் பின் மீண்டும் புதிய ரத்தம் உட்செலுத்தப்படும். இவ்வாறு பழைய டைரக்டர் போர்டு முறையை சொஸ்தப்படுத்துவதும் மந்திரி சபையின் உத்தேசம். இரண்டாவதாக, ஒரே நபர் நீதிபதியாகவும் வரிவசூலிப்பவராகவும் உள்ள முறைக்கு முடிவு ஏற்படும்; நீதிபதிகள் படித்தவர்களாக விருப்பார்கள். மத்திய காலத் துவக்கத்தில், நிலப்பிரபுக்களுக்குப் பதிலாக, எழுதப் படிக்க வாகிலுமறிந்த வக்கீல்கள் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டார்களல்லவா? மேற்சொன்ன யோசனைகளைக் கேட்டவுடன், அந்த மத்திய காலத் தொடக்கத்துக்கு நாம் கொண்டு செல்லப்பட்டு விட்டதாக நமக்குத் தோன்றுகிறது.

'கண்ட்ரோல் போர்டின்' தலைவர் என்ற முறையில், ஸர் சார்லஸ்வுட் இந்த விவேகமான சிர்திருத்தத்தைப் பிரேரேபிப்பார். முன்பு விக் கட்சியார் அரசு புரிந்தபொழுது, இந்தக் கனவானின் மேதா விலாசம் பல வகைகளில் பிரகாசித்தது. ஆகவே கூட்டு மந்திரி சபைக்கு அவரை எப்படிப் பயன்படுத்துவதென்று புரியவேயில்லை. இறுதியில் அவரை இந்தியாவுக்கு அர்ப்பணித்து விட்டார்கள். மூன்றாவது **ரிச்சர்ட்** மன்னன் ஒரு குதிரைக்குப் பதிலாக ஒரு ராஜ்யத்தையே கொடுக்க முன் வந்தார்; கூட்டு மந்திரி சபை ஒரு ராஜ்யத்துக்குப் பதிலாக ஒரு கழுதையைக் கொடுக்க முன் வருகிறது! உண்மையில், இன்று அரசு புரியும் சொற்ப ஜனாதிபத்தியத்தின் பேதமை, இன்று இங்கிலாந்து **செய்யக் கூடியதின்** ஒரு பிரதிபலிப்பென்றால், இங்கிலாந்து உலகத்தை ஆளும் காலம் ஒழிந்து போயிருக்க வேண்டும்.

முந்தைய சந்தர்ப்பங்களில், எந்த நடவடிக்கையையும் ஒத்திவைப்பதற்கு—மிகச் சிறிய நடவடிக்கையையும்கூட ஒத்திவைப்பதற்கு—கூட்டு சர்க்கார் தகுதியான காரணங்களை எப்பொழுதுமே கொடுத்ததென்பதை நாம் பார்த்திருக்கிறோம். இப்பொழுது, இந்தியாவைப் பொறுத்தவரையில், அவர்களுடைய ஒத்திவைக்கும் மனவிருப்பத்துக்கு இரு உலகங்களின் பொது அபிப்ராயம் ஆதரவு **அளிக்கிறது**. சுதேசி மக்களின் அபிப்பிராயத்தை அறியும் வரையில், அவசியமான தகவல்களைச் சேகரிக்கும் வரையில், நடக்க வேண்டிய விசாரணைகள் முடியும் வரையில் இந்திய விவகாரங்கள் சம்பந்தமான சகல மசோதாக்களையும் ஒத்திவைக்க வேண்டுமென்று இந்திய மக்களும் இங்கிலீஷ் மக்களும் ஒரே சமயத்தில் கோருகிறார்கள். அவசரப்பட்டுச் சட்டமியற்றுவதை ஆட்சேபித்து மூன்று ராஜதானிகளிலுமிருந்து டௌனிங் தெருவுக்கு மகஜர்கள் வந்துள்ளன. மான்சஸ்டர் கழகம்

ஒரு இந்திய ஸ்தாபனத்தை அமைத்திருக்கிறது. அந்த ஸ்தாபனத்தைத் [illegible]யாக இயங்கச் செய்து லண்டனிலும் தேசம் முழுவதிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தி, இந்தக் காமன்ஸ் கூட்டத்தில் இந்தியா பற்றி எத்தகைய மசோதா வருவதையும் எதிர்க்கப் போகிறார்கள். மேலும், இந்திய சர்க்கார் விவகாரங்களைப் பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, பார்லிமெண்டின் இரண்டு கமிட்டிகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தத் தடவை, கூட்டு மந்திரி சபை விட்டுக் கொடுக்கப் போவதில்லை. எந்தக் கமிட்டியின் யோசனைக்காகவும் அது காத்திருக்கப் போவதில்லை. உடனடியாகவும், நேரடியாகவும் 15 கோடி மக்களைப் பற்றிச் சட்டம் செய்ய அது விரும்புகிறது; உடனுக்குடன், 20 வருஷ காலத்துக்குச் செல்லக்கூடிய சட்டமியற்ற விரும்புகிறது. நவீன கால மனுவென்று அழைக்கப்படும் உரிமைக்குத் தனக்குள்ள தகுதியை ஸ்தாபிக்க, ஸர் சார்லஸ் வுட் ஆவலாயிருக்கிறார். அதனால்தான், நமது "முன்னெச்சரிக்கையுள்ள" ராஜீயத் தீர்க்க **ரோகிகள்** திடுதிப்பென்று அவசரப்பட்டுச் சட்டமியற்றப் பாய்கின்றனர்.

பழைய இந்திய சாசனத்தை இருபது வருட காலத்துக்குப் புதுப்பிக்க அவர்கள் விரும்புகிறார்கள். சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்ற வியாஜம் எப்பொழுதுமே இருக்கிறதல்லவா? அதை அவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஏன்? இங்கிலாந்தில் சொற்ப ஜனாதிபத்திய ஆட்சி நடத்துகிறவர்கள், மகிமை மிகுந்த தமது காலத்துக்கு முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறதென்று அனுமானிக்கிறார்கள். ஆகவே, தமது பலமிழந்த பேராசைக் கரங்களிலிருந்து இங்கிலாந்து பறிபோய் விட்டாலும், இருபது வருட காலத்துக்கு இந்தியாவைக் கொள்ளையடிக்கும் சலுகையைத் தாமும் தமதுசகாக்களும் தொடர்ந்து அனுபவிக்கக் கூடிய முறையில், அவர்கள் இங்கிலீஷ் சட்டத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வர விரும்புவது நியாயம்தானே.

(ஆ) ஸர் சார்லஸ் வுட்டின் போலிச் சமாதானம்

லண்டன், சனிக்கிழமை, 1853, ஜூன் 4.

சென்ற தடவை, 1833-ல் வந்த இந்திய மசோதா பாக்ஸ், நார்த் பிரபு ஆகியோரின் கூட்டு மந்திரி சபைக்குக் கல்லறை கட்டியது. புதிதாக வந்திருக்கும் 1853-ம் வருஷத்திய இந்திய மசோதா கிளாட்ஸ்டன், ஜான் ரஸ்ஸல் பிரபு ஆகியோரின் கூட்டாட்சிக்குக் குழிபறித்து விடக்கூடும். டைரக்டர்கள், முதலாளிகள் ஆகியோரின் கோர்ட்டுகளை அகற்ற முயற்சித்ததற்காக, பாக்ஸ்-நார்த் கூட்டுமந்திரி சபை வீழ்த்தப்பட்டது. அதற்கு நேர்விரோதமான காரணத்துக்காக, கிளாட்ஸ்டன்-ரஸ்ஸல் கூட்டுமந்திரி சபையை,

---

இக்கட்டுரை, நியூயார்க் டெயிலி டிரிப்யூன் பத்திரிகையில் 1853 ஜூன் 19-ல் வெளி வந்தது.

பதவியைப் பறி கொடுக்கவேண்டிய பேரபாயம் அச்சுறுத்துகிறது. ஜூன் மாதம் 3-ம் தேதி, இந்திய சர்க்கார் சம்பந்தமான மசோதாவை ஸர் சார்லஸ் வுட் கொண்டுவந்தார். "விஷயத்தின் முக்கியத்துவத்தை" முன்னிட்டும், "15 கோடி மக்களைப் பற்றித் தான் பேச இருப்பதை" முன்னிட்டும், தான் விதிவிலக்கான முறையில் நீண்ட பிரசங்கம் செய்வதால், அதைப் பொறுத்தருளும்படி ஸர் சார்லஸ் வுட் தொடக்கத்தில் குறிப்பிட்டார். மூன்றுகோடி சகோதர பிரஜைகளுக்கு ஒருமணிநேர விதத்துக்குக் குறைவாக அவர் செலவிட முடியாது. "சர்வ சாமான்யமான சில்லரை விஷயங்களுக்குக்கூட" மசோதாக்களை ஒத்திவைக்கும் பொழுது, இந்த "மகத்துவம் மிகுந்த விஷயம்பற்றி" அவசரப்பட்டுச் சட்டம் செய்வதற்குக் காரணம் என்ன? ஏனென்றால், கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் 1854 ஏப்ரல் மாதம் 30-ந் தேதியோடு காலாவதியாகி விடுகிறது. ஆனால் நிரந்தர சட்டத்தை எதிர்காலத்தில் விவாதித்து இயற்றலாமென்று முடிவுசெய்து, பழைய சாசனத்தைத் தற்காலிகமாக உயிர்ப்பிக்கும் சட்டம் ஒன்றை இயற்றக்கூடாதா? கூடாது; ஏனென்றால், "இந்தப் பரந்த பிரச்னையை, முக்கியமான பிரச்னையை அமைதியாக விவாதித்து முடிவு செய்வதற்கு இத்தகைய சந்தர்ப்பம்" மீண்டும் எப்பொழுதாவது கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது என்கிறார். அதாவது, இந்த முக்கியமான பெரிய பிரச்னையை பார்லிமெண்டுக்குரிய வழியில் மூச்சுவிட முடியாமல் நசுக்கிக்கொல்ல இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காது. மேலும், இந்த விஷயத்தைப்பற்றி நாம் பரிபூரணமாகத் தகவல்களை அறிந்திருக்கிறோம்; இந்தக் கூட்டத்திலேயே சட்டம் செய்வது அவசியமென்று கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்; உடனடியாக நமது சட்டத்தை எப்படியாவது இயற்ற வேண்டுமென்று இந்தியாவின் கவர்னர்-ஜெனரலான டெல்ஹவுஸிப் பிரபு அவசரக் கடிதத்தின் மூலம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியிருக்கிறார். எண்ணற்ற பிரச்னையைப்பற்றிப் பேசுவதற்குத் தயாராக விருப்பதாக அவர் தோற்றமளித்த போதிலும் மசோதாவைப் பொறுத்த வரையில் அது மிகச் சிறிய விஷயமாகும் என்று கூறித் தான் உடனடியாக மசோதாவைக் கொண்டுவருவதற்கு நியாயம் காட்டினார்; இந்தக் கடைசிவாதம்தான் அவருடைய முக்கியமான வாதம். இந்த முன்னுரைக்குப் பிறகு, கடந்த இருபது வருஷங்களாக இந்தியாவில் நடந்துவரும் நிர்வாகத்துக்கு ஸர் சார்லஸ் போலிச் சமாதானம் கூறினார். "ஓரளவுக்கு இந்தியனின் பார்வையுடன் நாம் இந்தியாவைப் பார்க்கவேண்டும்" என்றார் ஸர் சார்லஸ். இங்கிலாந்து சம்பந்தப்பட்டதையெல்லாம் பிரகாசமாகவும், இந்தியா சம்பந்தப்பட்டதையெல்லாம் கன்னங் கரியதாகவும் காணக்கூடிய விசேஷத்திறன் இந்தக் கனவானின் 'இந்தியப் பார்வைக்கு' இருக்கிறது போலிருக்கிறது. "இந்தியாவில் வசிக்கும் இனத்தார் மெள்ள மெள்ளவே மாறக் கூடிய மந்தமான மக்கள். மத சம்பந்தமான துர்அபிமானங்களாலும் புராதனப் பழக்கங்களாலும்

விலங்கிடப்பட்டிருக்கிறார்கள். உண்மையில் துரிதமான முன்னேற்றத்துக்குச் சகல தடைகளும் இருக்கின்றன" என்று ஸர் சார்லஸ் அறிவுறுத்தினார். (ஒருவேளை இந்தியாவில் ஒரு **விக்** கூட்டுக்கட்சி இருக்கிறது போலிருக்கிறது.) "நீதி வழங்குவதைப் பற்றியும் பொதுப் பாசன மராமத்து வேலைகள் நடைபெறாமலிருப்பதைக் குறித்தும், நில உரிமையைக் குறித்தும் மிகவும் அதிகமாக வற்புறுத்தப்படுகிறது; கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர்களில் உள்ள புகார்களும் இவைகளைப்பற்றியே உள்ளன" என்று ஸர் சார்லஸ் வுட் குறிப்பிட்டார். பொதுப் பாசன வேலைகளைப் பொறுத்தமட்டில், "மிகப் பெரிய பரிமாணமும் முக்கியத்துவமும் கொண்ட" சில வேலைத் திட்டங்களை மேற்கொள்வதென்று சர்க்கார் **உத்தேசித்திருக்கிறது.** நில உரிமை முறைகளைப் பொறுத்தமட்டில், ஜமீன்தாரி முறை, ரயத்துவாரிமுறை, கிராம அமைப்பு முறை ஆகிய மூன்றும் அரசிறை வரும்படியைச் **சுரண்டுவதற்குக்** கம்பெனி கையாளும் முறைகளென்றும், அவற்றில் எம்முறையையும் பொதுவானதாகச் செய்ய முடியாதென்றும், அவை ஒன்றுக்கும் அத்தகைய தகுதியில்லையென்றும் நிரூபிப்பதில் ஸர் சார்லஸ் மிகுந்த வெற்றியடைந்தார். இந்த முறைகளுக்குமுற்றிலும் மாறான தன்மையை உடைய ஒரு முறையை ஸ்தாபிக்கும் கருத்து ஸர் சார்லஸ் வுட்டின் சிந்தனையைச் சிறிதும் பாதிக்கவில்லை. நியாயம் வழங்குவதைப் பொறுத்தமட்டில், இங்கிலீஷ் சட்டத்தின் பரிபாஷையால் அசௌகரியம் ஏற்படுவதாகவும், இங்கிலீஷ் நீதிபதிகள் திறமையற்றவர்களாக இருப்பதாகவும், சுதேசி அதிகாரிகளும் நீதிபதிகளும் அயோக்கியர்களாக இருப்பதாகவும் முக்கியமாகப் புகார்கள் வந்துள்ளன. இந்தியாவில் நீதிபரிபாலனத்தை நிறுவுவதற்காகத் தாம் கஷ்டப்பட்டு உழைப்பதை நிரூபிக்கும் பொருட்டு ஸர் சார்லஸ், 1833-லேயே இந்தியாவுக்குச் சட்டக் கமிஷன் நியமிக்கப்பட்டதை நினைவூட்டினார். ஆனால் இந்தக் கமிஷன் எப்படிச் செயலாற்றியதென்று ஸர் சார்லஸே கூறுகிறார்! அந்தக் கமிஷன் பாடுபட்டதின் முதற்பலனும் கடைசிப்பலனும் மெக்காலே தலைமையில் தயாரிக்கப்பட்ட **தண்டனைச் சட்டம்** ஒன்றுதான். இது இந்தியாவிலுள்ள பல ஸ்தல அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் அதைத் திரும்பவும் கல்கத்தாவுக்கு அனுப்பினார்கள். அங்கிருந்து அது, இந்தியாவுக்குத்திருப்பி அனுப்பப்படுவதற்கர்க, இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டது. இந்தியாவில், லெஜிஸ்லேடிவ் கவுன்ஸிலில் (சட்டமியற்றும் சபை) மெக்காலேக்குப் பதிலாக, பெத்தூன் என்பவர் நியமிக்கப்பட்டு விட்டபடியால், தண்டனைச் சட்ட நகல் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. "தாமதம் பலவீனத்துக்கும் அபாயத்துக்கும் தாய்" என்று அப்பொழுது கவர்னர்-ஜனரல் அபிப்பிராயப்படாத காரணத்தால், அவர் அதை இங்கிலாந்துக்குத் திரும்பவும் அனுப்பினார். அங்கிருந்து அது மீண்டும் கவர்னர் ஜனரலுக்கு அனுப்பப்பட்டது; அவர் அந்தச் சட்டத்தை அவருக்கு உசிதமான உருவத்தில் நிறைவேற்றலாமென்று

கவர்னர்-ஜனரலுக்கு அதிகாரமும் அளிக்கப்பட்டது. ஆனால் இதற்குள் பெத்தூன் காலமாகி விட்டார். ஆகவே தண்டனைச் சட்ட நகலை மூன்றாவது இங்கிலீஷ் வக்கீலின் அபிப்பிராயத்துக்கு சமர்ப்பிப்பதே சாலவும் சிறந்ததென்று அபிப்பிராயப்பட்ட கவர்னர்-ஜனரல், அதை இந்தியர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றி ஒன்றுமே அறிந்திராத ஒரு வக்கீலிடம் கொடுத்தார். ஆனால் முற்றிலும் திறமையற்றவர்கள் வகுக்கும் சட்ட நகலைப் பிற்பாடு நிராகரிக்கும் உரிமை அவரிடமிருந்தது. இன்றுவரை ஜனிக்காத அந்தச் சட்டத்தின் லீலா விநோதங்கள் இத்தகையன. இந்தியாவில் அமுலிலுள்ள சட்டத்தின் அபத்தமான பரிபாஷையைப் பொறுத்தவரையில் ஸர் சார்லஸ், இங்கிலீஷ் சட்டத்தின் வழக்கு முறையின் அபத்தமான பரிபாஷைகளைக் காட்டி நியாயப்படுத்துகிறார். ஆனால் இந்தியாவிலுள்ள இங்கிலீஷ் நீதிபதிகள் அப்பழுக்கில்லாத யோக்கிய சிகாமணிகள் என்று ஊர்ஜிதமாய்க் கூறும்பொழுதே, அவர்களை நியமிக்கும் முறையை மாற்றுவதன்மூலம் அவர்களைப் பலிகொடுப்பதற்கு ஆயத்தமாயிருப்பதை அவர் அறிவிக்கிறார். கூலிகான் படையெடுப்புக் காலத்தில் டெல்லி மாநகர் இருந்த நிலையுடன் டெல்லியின் இன்றைய நிலையை ஒத்து நோக்கி, அவர் இந்தியாவின் பொதுப்படையான முன்னேற்றத்தை ஸ்தாபிக்கிறார். ஏதாவதொரு அத்தியாவசியச் சரக்கின்மீது வரி விதிக்கும்படி யோசனை கூறிய பிரபல பொருளாதார நிபுணர்களின் வாதங்களை எடுத்தாண்டு அவர் உப்பு வரியை நியாயப் படுத்துகிறார். ஆனால் *1849-52* வருஷங்களுக்குள் உபயோகிக்கப்படும் உப்பின் அளவு *60* ஆயிரம் டன்கள் குறைந்துவிட்டதென்பதையும், உப்பு வரியின் மொத்த வருமானமான *20* லட்சம் பவுன்களில் *1849–52*–ல் *4* லட்சத்து *15* ஆயிரம் பவுன்கள் குறைந்துவிட்டதென்பதையும் கண்ட பிறகு, அதே பொருளாதார நிபுணர்கள் என்ன கூறியிருப்பார்களென்பதை ஸர் சார்லஸ் வுட் சொல்ல மறுக்கிறார்.

ரத்தினச் சுருக்கமாக, ஸர் சார்லஸ் பிரேரேபிக்கும் நடவடிக்கைகளாவன :—

(*1*) டைரக்டர்களுடைய கோர்ட்டில் *24* அங்கத்தினர்கள் இருப்பதற்குப் பதிலாக, *18* அங்கத்தினர்களே இருக்க வேண்டும் அவர்களில் *12* நபர்களை முதலாளிகள் தேர்ந்தெடுப்பார்கள்; நபர்களை மன்னர் நியமிப்பார்.

(*2*) டைரக்டர்களுடைய வருமானம் வருஷத்துக்கு 30 பவுன்களிலிருந்து *500* பவுன்களாக உயர்த்தப்பட வேண்டு தலைவரின் வருமானம் *1000* பவுன்களாக விருக்கும்.

(*3*) இந்தியாவின் நிர்வாகத்தின் சாமான்ய நியமனங்க அனைத்தும், ராணுவ இலாகாவின் விஞ்ஞானப் பகுதி நி மனங்கள் அனைத்தும் பொதுப் போட்டியில் செய்யப்ப வேண்டும். குதிரைப்படை மாணவர்களைப் பொறுக்கும் உரிமை டைரக்டர்களைச் சேர்ந்தது.

(4) வங்க மாகாண கவர்னர் பதவியை கவர்னர்—ஜனரல் பதவியிலிருந்து பிரித்து விடவேண்டும். ஸிந்து நதியின் ஜில்லாக்களை ஒரு புதிய ராஜதானியாக உருவாக்குவதற்குப் பேரரசுக்கு அதிகாரம் அளிக்கவேண்டும்.

(5) கடைசியாக, பார்லிமெண்ட் வேறுவிதமாக முடிவு எடுக்கும் வரையில்தான், இந்தச் சட்டம் முழுவதும் செல்லுபடியாகும்.

ஸர் சார்லஸின் மசோதாவையும் பிரசங்கத்தையும் **பிரைட்** என்பவர் மிகக் கடுமையாகத் தாக்கியும் பரிகசித்தும் குத்திக் காட்டியும் விமர்சனம் செய்தார். கம்பெனியின் அரசிறைச் சுரண்டலால் அழிந்துள்ள இந்தியாவின் சித்திரத்தை வரைந்த பிரைட், மான்சஸ்டராலும் வர்த்தக-சுதந்திரத்தர்லும் இந்தியாவுக்கு ஏற்பட்ட நாசத்தைக் குறித்து மௌனம் சாதித்தாரென்பது உண்மை. நேற்று இரவு பிரசங்கம் செய்த ஸர் ஜே. ஹாப் கிழக்கிந்தியாவின் ஜாம்பவான்; அவர் கம்பெனியில் டைரக்டரோ, மாஜி டைரக்டரோ எனக்கு நினைவில்லை. 1701, 1730, 1743, 1768, 1772, 1781, 1783, 1784, 1793, 1813 முதலிய வருஷங்களில் இதே பிரசங்கம் செய்யப்பட்டதாக நான் உண்மையில் சந்தேகிக்கிறேன். டைரக்டர்களுடைய ஆட்சியின் கல்யாண குணங்களைப்பற்றி சொன்மாரி பொழிந்த ஹாப் என்பவருக்குப் பதிலளிக்கும் முறையில், வருஷாந்திர இந்தியக் கணக்குகளிலிருந்து ஒரு சில உண்மைகளை மாத்திரம் நான் மேற்கோள் காட்டுகிறேன். ஹாப் மேற்பார்வையில்தான், இந்தக் கணக்குகள் தயாராகிப் பிரசுரமாகியுள்ளன என்று நான் நம்புகிறேன்.

இந்தியாவின் மொத்த நிகர் வருமானம் :—

1849—50 — 20,275,831 பவுன்கள்
1850—51 — 20,249,932 பவுன்கள்
1851—52 — 19,927,039 பவுன்கள்

மூன்று வருஷங்களில், வருமானத்தில் ஏற்பட்ட நஷ்டம் } 349,729 பவுன்கள்.

மொத்தச் செலவுகள் :

1849—50 : 16,687,382 பவுன்கள்
1850—51 : 17,170,707 பவுன்கள்
1851—52 : 17,901,666 பவுன்கள்

மூன்று வருஷங்களில் ஏற்பட்ட செலவுப் பெருக்கம் } 1,218,284 பவுன்கள்.

நிலவரி :

கடந்த நாலு வருஷங்களில்

வங்காளம் : 35 லட்சம் பவுன்களுக்கும் 35 லட்சத்து 60 ஆயிரம் பவுன்களுக்குமிடையே ஊசலாடிற்று.

சென்னை: 36 லட்சத்து 40 ஆயிரம் பவுன்களுக்கும் 34 லட்சத்து 70 ஆயிரம் பவுன்களுக்குமிடையே ஊசலாடிற்று.
பம்பாய்: 22 லட்சத்து 40 ஆயிரம் பவுன்களுக்கும் 23 லட்சம் பவுன்களுக்குமிடையே ஊசலாடிற்று.

1851—52-ல் மொத்த வருமானம்:

வங்காளம்.........ஒரு கோடி பவுன்கள்.
சென்னை............50 லட்சம் பவுன்கள்.
பம்பாய்..............43 லட்சம் பவுன்கள்.

1851—52-ல் பொதுப்பாசன மராமத்து இலாகாச் செலவு.

வங்காளம்.........87,800 பவுன்கள்.
சென்னை...........20,000 பவுன்கள்.
பம்பாய்............58,590 பவுன்கள்.

மூன்று ராஜதானிகளின் மொத்த வருமானம் 193 லட்சம் பவுன்கள்! அவற்றில், ரஸ்தாக்களுக்கும் கால்வாய்களுக்கும் பாலங்களுக்கும், பொதுத் தேவையாகவுள்ள இதர வேலைகளுக்கும் 166 ஆயிரத்து 390 பவுன்கள் செலவு!

(இ) சீர்திருத்தத்தின் உண்மை*

லண்டன், வெள்ளி, ஜூன் 17, 1853.

இந்திய மசோதா இரண்டாம் முறை வாசிக்கப் பட்டவுடன் (23-ம் தேதி), பின்வரும் தீர்மானத்தைத் தான் பிரேரேபிக்க விருப்பதாக, ஸ்டான்லி பிரபு 13-ம் தேதி காமன்ஸ் சபையில் அறிவித்தார்:—

“இந்தியாவின் சாசுவத சர்க்கார் சம்பந்தமாக” பிரயோஜனகரமாகச் சட்டமியற்றுவதைச் சாத்தியமாக்குவதற்கு, பார்லிமெண்டுக்கு மேற்கொண்டு தகவல் அவசியமென்றும், இக்கூட்டத்தின் இந்தக் காலந் தாழ்ந்த கட்டத்தில், இன்றுள்ள ஏற்பாடுகளை நிலை குலையச் செய்யக் கூடியதும், அதே சமயத்தில் ஒரு இறுதியான ஏற்பாடாகக் கருத முடியாததுமான ஒரு மசோதாவை விவாதிப்பது யுக்தமானதாக இல்லை என்று இந்தச் சபை அபிப்பிராயப் படுகிறது.”

ஆனால் 1854 ஏப்ரலில் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனம் காலாவதியாகி விடுகிறது; ஆகவே ஏதாவதொரு விதத்தில் ஏதாவது செய்தாக வேண்டும். சர்க்கார் நிரந்தரச் சட்டமியற்ற விரும்பியது; அதாவது சாசனத்தை இன்னொரு இருபது வருஷ காலத்துக்குப் புதுப்பிக்க விரும்பியது. மான்சஸ்டர் கோஷ்டி, அதிகப் பட்சமாக ஒரு வருஷத்துக்கு சாசனத்தை நீடிப்பதன்

---

* இந்தக் கட்டுரை 1853 ஜூலை முதல் தேதியில் நியூயார்க் டெயிலி டிரிப்யூன் பத்திரிகையில் பிரசுரமாயிற்று.

மூலம்; சகல சட்டங்களையும் ஒத்தி வைக்க விரும்பியது. இந்தியாவின் மேன்மையான நன்மைக்காக நிரந்தரச் சட்டம் அவசியமென்று சர்க்கார் கூறிற்று. தகவல்களில்லாத காரணத்தால், அது அசாத்தியமென்று மான்சஸ்டர் கோஷ்டி பதிலளித்தது. "இந்தியாவின் மேன்மையான நன்மை" என்பதும், "தகவல்கள் இல்லை" என்பதும் பொய்யான சாக்குப்போக்குகளாகும். சீர்திருந்திய சபை கூடுவதற்கு முன்னால், இந்தியாவின் நலன்களைத் தியாகம் செய்து தமது மேன்மையான நன்மையை இருபது வருஷ காலத்துக்கு உத்திரவாதம் செய்ய, ஆட்சி புரியும் ஆதிக்கக் கோஷ்டி விரும்பியது. சீர்திருந்தாத (கடை முதல்) பார்லிமெண்டில், மான்சஸ்டர் கோஷ்டியின் அபிப்பிராயங்கள் வெற்றி பெறுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை; ஆகவே அது ஒரு சட்டமும் நிறைவேறக் கூடாதென்று எண்ணியது. இப்பொழுது கூட்டு மந்திரி சபை, தனது முந்தைய அறிக்கைகளுக்கு முரண்பட்ட முறையில் இருந்தாலும், கஷ்டங்களை மற்றவர் மீது சுமத்தும் தனது பழக்கத்துக்கு ஒத்த வகையில், ஸர் சார்லஸ் வுட் மூலம் சட்டம் போலத் தோன்றும் இதைக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் மறுபுறத்தில் குறிப்பிட்ட காலத்துக்குக் கம்பெனியின் சாசனத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று கூற அதற்குத் துணிவு இல்லை அது ஒரு "ஏற்பாட்டை" மட்டிலும் முன் வைத்தது; பார்லிமெண்ட் எப்பொழுது வேண்டுமானாலும் அந்த ஏற்பாட்டை மாற்றிவிடத் தீர்மானிக்கலாம். மந்திரி சபையின் யோசனைகள் நிறைவேறினால், கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் புது வாழ்க்கை கிடைக்காது; அதன் முடிவு தாமதப்படுவதுதான் நிகர் பலன். மற்றபடி, மந்திரி சபையின் திட்டம் இந்திய சர்க்காரின் அமைப்பில் மேற்பூச்சான மாறுதலையே செய்கிறது; சில புதிய கவர்னர்கள் நியமனமாவதொன்று தான் முக்கியமான புது அம்சம். ஆனால் கவர்னர்கள், கவுன்ஸில்கள் ஆகிய பெருஞ் செலவு ஆடம்பரங்களையுடைய திருவருட்பேற்றைப் பெற்ற இந்தியப் பிரதேசங்களை விடக் கமிஷனர்கள் மாத்திரம் அரசு புரியும் இந்தியப் பிரதேசங்கள் மிக உயர்ந்த முறையிலிருப்பதை நீண்ட கால அனுபவம் நிரூபித்துவிட்டது. வற்றிச் சோர்ந்துவிட்ட தேசங்களின் நிலைமையை இலகு வாக்குவதற்காக, அவற்றில் வேலையில்லாது வருமானம் பெறும் உத்தியோகங்களை புதிது புதிதாகச் சிருஷ்டித்து, அவை மூலம், செல்வந்தர் குடும்பங்களில் பிறந்து ஐவேஜிகளையெல்லாம் இழந்து நிற்பவர்களை, அந்த தேசங்கள் மீது திணிக்கும் இந்த விக் கட்சி யுக்தி பழைய ரஸ்ஸல் நிர்வாகத்தை நினைவூட்டுகிறது.

கீழ்நாட்டில், இந்தியர்களும் மகம்மதியர்களும் ஆத்மீக வறுமையில் உழல்வதைப் பற்றி விக்குகளுக்குத் திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டது. அவர்களைத் கடைத்தேற்ற வேண்டுமென்பதற்காக, புதிய பிஷப்புகளை (bishops—அத்தியட்ச குருக்கள்) அனுப்புவதென்று முடிவு செய்தார்கள். டோரிகள் பூரண அதிகா

ரத்தைச் செலுத்தியபொழுது ஒரு பிஷப்புக்கு மேல் அவசியமென்று ஒருபொழுதும் நினைக்கவில்லை. சில புதிய பிஷப்புகளை நியமிப்பதென்று முடிவு செய்தவுடன், கண்ட்ரோல் போர்டின் தலைவராக விருந்த விக் பிரமுகர் **சர் ஜான் ஹாப்ஹவுஸ்,** தன் உறவினர் ஒருவர் பிஷப்பு உத்தியோகத்துக்கு முற்றிலும் தகுதியுள்ளவராகவிருப்பதை உடனடியாகக் கண்டு பிடித்தார்; அவர் உடனடியாகப் புதிய பிஷப்பாதீனங்களில் ஒன்றுக்கு நியமிக்கப்பட்டார். "இவ்வளவு திட்டமாகப் பொருந்தும் இத்தகைய விஷயங்களில், பாதத்துக்காகச் செருப்புச் செய்யப்பட்டதா, செருப்புக்காகப் பாதம் செய்யப்பட்டதா, என்பதை நிர்ணயிப்பது உண்மையிலேயே அசாத்தியமாகும்" என்று ஒரு இங்கிலீஷ் எழுத்தாளர் கூறுகிறார். அதைப்போலவே, சார்லஸ் வுட் யுக்தியைப் பொறுத்த மட்டில், இந்திய மாகாணங்களுக்காகப் புதிய கவர்னர்கள் பொறுக்கப்பட்டார்களா அல்லது புதிய கவர்னர்களுக்காக இந்திய மாகாணங்கள் அமைக்கப்பட்டனவா என்பதைத் தீர்மானித்துக்கூறுவது மிகவும் கடினமாகும்.

இது நிற்க, தான் பிரேரேபித்துள்ள மசோதா சட்டமானால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் பார்லிமெண்ட் மாற்றலாம் என்று கூறுவதன் மூலம், சகல எதிர்ப்புகளையும் சமாளித்து விட்டோமென்று கூட்டு மந்திரி சபை எண்ணியது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, டோரிக் கட்சிப் பிரமுகரான ஸ்டான்லி பிரபு தன் தீர்மானத்துடன் முன்வந்து விட்டார். அவருடைய தீர்மானம் அறிவிக்கப்பட்டவுடன், அதை "தீவிரவாத எதிர்ப்பாளர்கள்" உரக்கக் கரகோஷம் செய்து வரவேற்றார்கள். எனினும், ஸ்டான்லி பிரபுவின் தீர்மானம் முன்னுக்குப் பின் முரணாகவிருக்கிறது. ஒரு புறத்தில் அவர், சபைக்கு அதிகத் தகவல் கிடைத்தால்தான், சாசுவதச் சட்டம் இயற்ற முடியுமெனக் கூறி, மந்திரி சபைத் தீர்மானத்தை நிராகரிக்கிறார். மறுபுறத்தில், அது நிரந்தரச் சட்டமாயில்லை யென்றும், இறுதியான ஏற்பாடு என்று உரிமை கொண்டாடாமல், இன்றைய ஏற்பாடுகளைக் குலைக்கிறதென்றும் கூறி, அவர் மந்திரி சபைத் திட்டத்தை நிராகரிக்கிறார். மசோதாவால் ஏதோ ஒரு வகையில் மாறுதல் ஏற்படுமென்ற காரணத்தால், அதை வைதிக அபிப்பிராயம் (டோரிக் கட்சியின் அபிப்பிராயம்) எதிர்க்கிறது. மசோதாவால் ஒரு மாறுதலுமில்லையென்றகாரணத்தால், அதைத் தீவிர அபிப்பிராயம் எதிர்க்கிறது. கூட்டணிக்காலம் இது! ஸ்டான்லி பிரபுவும் மந்திரி சபை அபிப்பிராயத்துக்கு விரோதமாக உள்ள இந்த இரு எதிர்ப்பு அபிப்பிராயங்களையும் சேர்க்கக் கூடிய ஒரு சூத்திரத்தைக் கண்டு விட்டார். இத்தகைய தந்திரங்களுக்கு எதிராகக் கோபாவேசம் கொண்ட தர்ம தேவதையாகக் கூட்டு மந்திரிசபை நடிக்கிறது. அதன் பத்திரிகையான **கிரானிகல்** கூறுகிறது :—

"ஒரு கட்சி நடவடிக்கை என்ற முறையில் பார்த்தால், தாமதிக்க வேண்டுமெனக்கூறும் பிரேரேபணை பெரிய அளவுக்கு தகராறு செய்யும் காரியமாகும்; அபகீர்த்தி விளைவிப்பதாகும்.

“மந்திரி சபையின் ஆதரவாளர்களில் சிலர், இந்தக் குறிப்பிட்ட பிரச்னை சம்பந்தமாகத் தமது சகஜமான சகாக்களிடமிருந்து பிரிவதாக வாக்களித்திருப்பதால்தான், இந்தப் பிரேரபணை வந்திருக்கிறது.”

மந்திரிகள் பெரிதும் கவலைப்படுவதாகப் புலப்படுகிறது. இன்றைய **கிரானிகல்** மீண்டும் இந்தப் பிரச்னையைப்பற்றி விமர்சனம் செய்து எழுதுவதாவது :—

“ஸ்டான்லி பிரபுவின் தீர்மானம் சம்பந்தமான வோட்டெடுப்பு இந்திய மசோதாவின் விதியைத் தீர்மானமான முறையில் பாதிக்கக்கூடும். ஆகவே, சீக்கிரத்தில் சட்டமியற்றுவதின் **முக்கியத்துவத்தை** உணர்கிறவர்கள் சர்க்காரைப் பலப்படுத்துவதற்கு ஒவ்வொரு முயற்சியும் எடுப்பது **அதிகப்பட்ச முக்கியத்துவம்** வாய்ந்ததாகும்.”

மறுபுறத்தில், இன்றைய **டைம்ஸ்** பத்திரிகையில் நாம் வாசிப்பதாவது :—

“இந்திய அரசாங்க மசோதாவின் தலைவிதி மேலும் முறையாக விவரித்துரைக்கப்பட்டிருக்கிறது............ஸ்டான்லி பிரபுவின் ஆட்சேபணைகள் பொதுஜன அபிப்பிராயத்தின் முடிவுகளுக்கு முற்றிலும் ஒத்திருப்பதில்தான் சர்க்காருக்கு அபாயமாகப்படுகிறது. இந்தத் திருத்தத்தின் ஒவ்வொரு அட்சரமும் பிராணபயமான சக்தியுடன் மந்திரி சபைக்கு எதிராக ஒலிக்கிறது.”

பிரிட்டனிலுள்ள பல் வேறு கட்சிகளையும் இந்தியப் பிரச்னை எப்படிப் பாதிக்கிறது என்பதையும், ஏழை இந்தியனின் நிலையை மேம்படுத்துவதற்காக, பிரபுத்துவச் சீமான்களும், பணமூட்டைகளும், மில்முதலாளிகளும் சண்டை போட்டுக் கொள்வதால் ஏழை இந்தியனுக்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன என்பதையும் நான் பின் வரும் ஒரு கடிதத்தில் விவரிப்பேன்.

கிழக்கிந்தியக் கம்பெனி*

லண்டன், சனிக்கிழமை ஜூன் 21, 1853.

இந்தியா சம்பந்தமான மசோதாவை ஒத்தி வைக்க வேண்டுமென்று ஸ்டான்லி பிரபு கொண்டு வந்த பிரேரபணை மீது நடைபெற்ற விவாதம் இன்று மாலை வரை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 1783-க்குப் பிறகு, முதன் முதலாக, இந்தியப் பிரச்னை இங்கிலாந்தின் மந்திரி சபையின் தலை விதியைத் தீர்மானிக்கும் பிரச்னையாகி விட்டது. இதற்குக் காரணம் என்ன ?

1853 ஜூலை 11-ல் **நியூயார்க் டெயிலி டிரிப்யூன்** இந்தக் கட்டுரையைப் பிரசுரித்தது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் உண்மைத் துவக்கத்தை 1702-லிருந்துதான் கணக்கிட வேண்டும்; அதற்கு முன்னால் கணக்கிட முடியாது. கிழக்கிந்திய வியாபாரத்தில் ஏகபோக உரிமையைக் கோரிய பல்வேறு கழகங்களும் 1702-ல்தான் ஒன்று பட்டன. அதுவரையில், அசல் கிழக்கிந்தியக் கம்பெனியின் உயிருக்கே மீண்டும் மீண்டும் அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. ஒரு தடவை கிராம்வெல்லின் 'ஆட்சியில், அது சில வருட காலத்துக்கு முடக்கப் பட்டிருந்தது. மூன்றாவது வில்லியம் ஆட்சியில் பார்லிமெண்டின் தலையிட்டால் அது கலைக்கப்படும் போலிருந்தது. அந்த டச்சு இளவரசன் (1688-ல் பதவிக்கு வந்த 3-வது வில்லியம்) கை ஓங்கிய பொழுதுதான், விக்குகள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வருமானத்துக்கு உரிமையாளரானார்கள்; **இங்கிலாந்து பாங்கி** பிறந்தது; காப்புவரி அமைப்பு சட்ட பூர்வமாக ஏற்பட்டது; ஐரோப்பாவில் அதிகார சமநிலை உறுதிப்பட்டது. அப்பொழுதே பார்லிமெண்ட், கிழக்கிந்தியக் கம்பெனியை நிர்ணயமாக அங்கீகரித்தது. இந்த சகாப்தம் சுதந்திரமான சகாப்தமாக வெளித்தோற்றத்தில் புலப்பட்ட போதிலும், உண்மையில் ஏகபோக உரிமையின் சகாப்தமாகவே விளங்கியது. எலிஸபெத் ராணியின் காலத்திலும் முதலாவது சார்லஸ் மன்னன் காலத்திலும் அரண்மனை, ஏகபோக உரிமைகளை வழங்கியது. இப்பொழுது பார்லிமெண்ட் ஏகபோக உரிமைகளை வழங்குகிறது. உண்மையில், இங்கிலாந்துச் சரித்திரத்தின் இந்த சகாப்தம் பிரான்சின் சரித்திரத்தில் லூயி பிலிப் சகாப்தத்துக்குப் பெரிய அளவுக்கு ஒத்திருக்கிறது; இதன் குணாம்சம் என்னவெனில், பழைய நிலப் பிரபுத்துவம் முறியடிக்கப்பட்டுவிட்ட போதிலும் பண மூட்டைகளின், மதம் பிடித்த பணச் செல்வத்தின் கொடியின் கீழ்தான் முதலாளி வர்க்கம் தன் ஸ்தானத்தைப் பெற முடிந்தது. முதலாளிகள் பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் பெற முடியாமல் கிழக்கிந்தியக் கம்பெனி செயலாற்றியது. இந்த சம்பவத்திலும் இதர சம்பவங்களிலும் நாம் பார்ப்பது என்னவெனில், நிலப் பிரபுத்துவக் கூட்டத்தின் மீது முதலாளி வர்க்கம் முதல் முக்கிய வெற்றி அடைந்த பொழுதே, மக்களுக்கு எதிராக மிகக் கொடிய பிற்போக்குத் தனம் தலை விரித்தாடியது. இதன் விளைவாக, **காபட்**டைப்போன்ற பிரபல எழுத்தாளர்கள், பொதுஜன சுதந்திரத்தை எதிர் காலத்தில் எய்த முடியுமென்ற நம்பிக்கையை இழந்தார்கள்; கடந்த காலத்தில் ஜன உரிமை துலங்கியதைக் கண்டு பிடிக்க முயன்றார்கள்.

எல்லாக் காலங்களிலும் எல்லா நாடுகளிலும், மிதவாத நலவுரிமைகளைப் படைத்தவர்களும் மிதவாத அரசகுலமும் கூடிச் சேர்வதற்குக் காரணமாயிருந்த அதே சக்தி, லஞ்சத்தின் சக்தி, சட்டப்பற்றுவாத முடியாட்சியும் ஏகபோக ஆதிக்கத்தை நாடி நின்ற பணமூட்டையும் கூடுவதற்கு, கிழக்கிந்தியக் கம்பெனியும் 1688-ம் வருஷத்திய மகிமை பொருந்திய புரட்சியும் கூடுவதற்குக் காரணமாயிருந்தது. மூன்றாவது வில்லியம் மன்னனின் ரட்சக

தவளைதயாகவும் லூயி பிலிப் மன்னனின் அழிவுப் பேயாகவும் விளங்கிய சட்டப் பற்றுவாத முடியாட்சியின் ஒரே ஆதாரமாக லஞ்சம் விளங்கியது. 1688-ம் வருஷப் புரட்சிக்கு முன்னால், கிழக்கிந்தியக் கம்பெனி, அதிகாரத்திலுள்ளவர்களுக்கு இனும் கொடுப்பதென்ற முறையில், 1200-பவுன்களுக்குமேல் ஒரு வருஷமும் செலவு செய்ததில்லை. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியின் கணக்குகளைப் பார்லிமெண்ட் பார்வையிட்டபொழுது, அதே இனத்தில், 1693-ல் கிழக்கிந்தியக் கம்பெனி 90-ஆயிரம் பவுன்கள் செலவு செய்திருப்பது வெளிப்பட்டது. லீட்ஸ் கோமான் 5000 பவுன்கள் லஞ்சம் வாங்கியதாகக் குற்ற விசாரணை நடந்தது. நல்லொழுக்க சீலரான மன்னரே 10 ஆயிரம் பவுன்கள் லஞ்சம் வாங்கிய குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டார். நேரடியாக லஞ்சம் கொடுக்கும் இந்த முறைகளைத் தவிர, மிகக் குறைந்த வட்டிக்கு மிகப் பெரிய தொகைகளைக் கடன் கொடுக்க முன்வந்து, சர்க்காரைக் கவர்ச்சிப்பதன்மூலமும், போட்டிக் கம்பெனிகளின் டைரக்டர்களை விலைக்கு வாங்குவதன்மூலமும், போட்டிக் கம்பெனிகள் கவிழ்க்கப்பட்டன.

'இங்கிலாந்து பாங்கி'யைப் போலவே கிழக்கிந்தியக் கம்பெனி, சர்க்காருக்கு லஞ்சம் கொடுத்து அதிகாரம் பெற்றது. இங்கிலாந்து பாங்கியைப் போலவே, மீண்டும் லஞ்சம் கொடுத்து அது தன் அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு கால கட்டத்திலும், அதனுடைய குத்தகை காலாவதியாகும் பொழுது, சர்க்காருக்குப் புதிய சன்மானங்களை அளித்தும், புதிய கடன்களைக் கொடுக்க முன்வந்துமே, அது தன் குத்தகைச் சாசனத்தைப் புதுப்பித்துக் கொள்ள முடியும்.

ஏழு வருஷகாலயுத்தத்தின் சம்பவங்கள் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற வர்த்தக சக்தியை ராணுவ பலமும் பிரதேசமும் பெற்ற சக்தியாக மாற்றியது. அப்பொழுதுதான், கிழக்கேயுள்ள இக்காலபிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு அஸ்திவாரம் இடப்பட்டது. அப்பொழுது கிழக்கிந்தியக் கம்பெனியின் பங்கு விலை 263 பவுன்களாக அதிகரித்தது; கம்பெனி, பன்னிரண்டரை சதமானவீதத்தில் பங்கு லாபம் விநியோகம் செய்தது. ஆனால் கம்பெனிக்கு ஒரு புதிய பகைதோன்றியது. போட்டிச் சங்கங்களின் வாயிலாக இந்தப் பகை தோன்றவில்லை. போட்டிக்குவரும் மந்திரிகள் வாயிலாகவும் ஜனங்கள் வாயிலாகவும் இந்தப் பகை தலையெடுத்தது. பிரிட்டிஷ் ராணுவங்களும் பிரிட்டிஷ் கப்பற்படைகளும் கம்பெனியின் பிரதேசத்தைப் பிடித்துக் கொடுத்தனவென்றும், பிரிட்டிஷ் மன்னனுடன் சம்பந்தமில்லாமல் எந்த பிரிட்டிஷ் பிரஜையும் பிரதேச அரசுரிமை அனுபவிக்க முடியாதென்றும் கூறப்பட்டது. கடைசி வெற்றிகளில் "அதிசயப் பொக்கிஷங்கள்" கிடைத்திருப்பதாக அக்கால மக்களும் மந்திரிகளும் கருதினார்கள்; அவர்கள் அவற்றில் பங்கு கேட்டார்கள். வருஷத்துக்கு 4 லட்சம் பவுன்கள் பிரிட்டிஷ் கஜானாவில் கட்டுவோமென்று 1769-ல் கம்பெனி ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்

அடிப்படையிலேயே கம்பெனி தன்னைத் தற்காத்துக்கொள்ள முடிந்தது.

ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனி அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை; அது, பிரிட்டிஷ் மக்களுக்கு அரசிறை செலுத்துவதற்குப் பதிலாக, பண உதவி அளிக்க வேண்டுமென்று பார்லிமெண்டைக் கோரியது. இதன் விளைவாக, குத்தகைச் சாசனத்தில் முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தப் புதிய நிலைமையிலும், கம்பெனியின் விவகாரங்கள் சீரடையவில்லை. அதே சமயத்தில் பிரிட்டன், வட அமெரிக்காவிலிருந்த தன் காலனிகளை இழந்துவிட்டது. ஆகவே, ஏதாவது ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை வேறு எங்காவது சம்பாதிக்க வேண்டுமென்ற ஆர்வம் எங்கும் பரவியிருந்தது. தன்னுடைய பிரசித்திபெற்ற இந்திய மசோதாவைக் கொண்டுவருவதற்குத் தகுதியான தருணம் வந்துவிட்டதென்று 1783-ல், நற்புகழ்பெற்ற பாக்ஸ் எண்ணினார். டைரக்டர்கள் முதலாளிகள் ஆகியோரின் கோர்ட்டுகளை அகற்ற வேண்டுமென்றும், இந்திய ஆட்சிப் பொறுப்பு முழுமையையும், பார்லிமெண்டால் நியமிக்கப்படும் ஏழு கமிஷனர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் அந்த மசோதா கூறியது. அசக்தனாகவிருந்த அரசனுக்குத் தனிப்பட்ட முறையில் பிரபுக்கள் சபையில் செல்வாக்கு இருந்ததால், பாக்ஸ் மசோதா தோல்வியடைந்தது. அத்துடன் பாக்ஸும் நார்த் பிரபுவும் அமைத்திருந்த கூட்டு மந்திரிசபை கவிழ்ந்தது; பிரபலமடைந்த பிட் அரசாங்கத் தலைவரானார். 1784-ல் பிட் ஒரு மசோதாவை இரு சபைகளிலும் பிரேரேபித்து நிறைவேற்றினார். பிரிவி கவுன்சில் அங்கத்தினர்களாயுள்ளவர் ஆறு நபர்கள் அடங்கிய ஒரு "கண்ட்ரோல்போர்டு" ஏற்பட வேண்டுமென்றும், அவர்கள் "கிழக்கிந்தியக் கம்பெனியின் பிரதேசங்கள், உடைமைகள் ஆகியவற்றின் வரிகள் சம்பந்தமாகவோ அல்லது ஸிவில் சர்க்கார் அல்லது ராணுவ சர்க்கார் சம்பந்தமாகவோ உள்ள சகல விதமான நடவடிக்கைகளையும் கண்காணித்து மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும்" அந்த மசோதா கூறிற்று. இதைப்பற்றிச் சரித்திராசிரியரான மில் கூறுகிறார். 'இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில், இரு நோக்கங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன. பாக்ஸ் மசோதாவின் தீய நோக்கமென்று வர்ணிக்கப்பட்ட நிந்தையைத் தவிர்ப்பதற்காக, டைரக்டர்களிடமே அதிகாரத்தின் பிரதானபகுதி இருப்பதாகத் தோன்றுவது அவசியம். மந்திரிகளுக்கு அனுகூலமாக, அதிகாரம் முழுவதையும் உண்மையில் பறித்துவிட வேண்டும். இந்த விஷயத்தில்தான், பாக்ஸ் மசோதாவிலிருந்து தன்னுடைய மசோதா வேறுபட்டிருப்பதாக பிட் உரிமை கொண்டாடினார். பாக்ஸ் மசோதா டைரக்டர்களின் அதிகாரத்தை அழித்ததென்றும், தன் மசோதா அதைக் கிட்டத்தட்ட முழுமையாக விட்டிருக்கிறதென்றும் பிட் கூறினார். பாக்ஸ் மசோதா சட்டமாயிருந்தால், மந்திரிகள் அதிகாரத்தை சுவீகரித்துக் கொண்டிருக்கிறோமென்று பகிரங்கமாக ஒப்புக் கொள்வார்கள்.

பிட் மசோதா சட்டமானதால், மந்திரிகள் ரகசியமாகவும் மோசடி செய்யும் அதிகாரத்தை அனுபவித்தார்கள். பாக்ஸ் மசோதா கம்பெனியின் அதிகாரத்தை, பார்லிமெண்ட்டால் நியமிக்கப்படும் கமிஷனர்களுக்கு மாற்றியது. பிட் மசோதா அதை அரசனால் நியமிக்கப்படும் கமிஷனர்களுக்கு மாற்றியது."

ஆக 1783, 1784 வருஷங்களில் மாத்திரமே, இந்தியப் பிரச்னை மந்திரி சபைப் பிரச்னையாக வளர்ந்தது. பிட் மசோதா நிறைவேறிய பின், கிழக்கிந்தியக் கம்பெனியின் குத்தகைச் சாசனம் புதுப்பிக்கப்பட்டது; இந்தியப் பிரச்னை இருபது வருஷ காலத்துக்குத் தள்ளி வைக்கப்பட்டது. ஆனால் 1813-ல் ஜாக்கோபின்களுக்கு எதிரான யுத்தமும் 1833-ல் புதிதாகப் பிரேரேபிக்கப்பட்ட சீர்திருத்த மசோதாவும் இதர அரசியல் பிரச்னைகள் அனைத்தையும் பின்னணியில் தள்ளிவிட்டன.

ஆகவே, 1784-க்கு முன்னும் பின்னும் இந்தியப் பிரச்னை ஒரு பெரிய அரசியல் பிரச்னையாக வளரத் தவறியதற்கு இதுவே முதற் காரணம்; அதாவது, 1784-க்கு முன்னால் கிழக்கு இந்தியக் கம்பெனி தன்னுடைய ஜீவிதத்துக்காகவும் முக்கியத்துவத்துக்காகவும் முதலில் போராட வேண்டியிருந்தது. அதற்குப் பிறகு, பிரிட்டனை ஆண்ட கூட்டம், பொறுப்பேற்காமல் எத்துணை அதிகாரத்தை மேற்கொள்ள முடியுமோ அவ்வளவு அதிகாரத்தை சுவீகரித்துக்கொண்டது. அதன் பிறகு, குத்தகைச் சாசனம் புதுப்பிக்கப் பட்ட வருஷங்களான 1813-லும் 1833-லும் இங்கிலீஷ் மக்கள் பொதுவாக, இதர முக்கியப் பிரச்னைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

இப்பொழுது நாம் வேறு ஒரு கோணத்திலிருந்து பார்ப்போம். தமது ஏஜண்டுகளுக்கு பாக்டரிகளை அமைக்கவும், தமது சரக்குகளுக்கு இருப்பிடங்களை அமைக்கவும் கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்பத்தில் முயற்சி எடுத்தது. அவற்றைப் பாதுகாப்பதற்காக, கம்பெனி பல கோட்டைகளைக் கட்டியது. இந்தியாவில் ஒரு சாம்ராஜ்யத்தைத் தோற்றுவிக்கவேண்டுமென்றும், அதன் வரிவசூல் தமது வருமானத்துக்கு ஒரு வகை வழியாக விருக்கவேண்டுமென்றும் 1689-லேயே கிழக்கிந்தியக் கம்பெனியார் எண்ணினார்களென்பது உண்மை. எனினும் 1744 வரை, பம்பாய், சென்னை, கல்கத்தா நகரங்களைச்சுற்றி சில முக்கியமில்லாத ஜில்லாக்களையே வசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு, கர்நாடகயுத்தம் மூண்டது; அதன் விளைவாக, பல போராட்டங்களுக்குப் பிறகு, கம்பெனியார் இந்தியாவின் இப்பகுதிக்கு, (கர்நாடகப் பகுதி) நடைமுறையில் ஆட்சியாளரானார்கள். வங்காள யுத்தத்தின் விளைவாகவும் சில* வெற்றிகளின் விளைவாகவும் மேலும் கணிசமான பலன்கள் கிடைத்தன. வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா ஆகிய பிரதேசங்களைக்

---

* ஒரு வேளை மார்க்ஸ் இங்கு பிளாஸி வெற்றியைக் குறிப்பிடுகிறார் போலும். (மொ-ர்)

கம்பெனியர் உண்மையில் தம் வசப்படுத்திக் கொண்டார்கள், பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசிவருஷங்களிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் வருஷங்களிலும் திப்பு சுல்தானுடன் யுத்தங்கள் நடந்தன. அவற்றின் விளைவாகக் கம்பெனியின் அதிகாரம் மாபெரும் வளர்ச்சி அடைந்தது; கம்பெனியின் பேராதிக்கத்துக்கு உட்பட்டு, கப்பம் செலுத்துவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. *1810—20* வருஷங்களில், இந்தியப் பாலை நிலத்தில், முதல் வசதியான எல்லையைக் கம்பெனியார் வசப்படுத்திக் கொண்டார்கள். இந்தியாவில் எக்காலத்திலும் எந்த மத்திய அரசுக்கும் தலைமை ஸ்தானமாக இருந்த இந்தப் பகுதியில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அதுவரையில் விரிவடைய வில்லை. ஆனால் இந்திய சாம்ராஜ்யத்துக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய மேற்கு எல்லைவாசலை பிரிட்டிஷார் அப்பொழுதும் பிடிக்க வில்லை. இந்திய சாம்ராஜ்யத்தை ஒருவர் பின் இன்னொருவராக ஆக்கிரமிப்பாளர்கள் இந்த மேற்கு எல்லை வாசல் மூலமாகப் பிரவேசித்துத்தான், படையெடுத்துப் பிடித்துக் கொண்டார்கள். *1839—49* வருஷங்களில், சீக்கிய, ஆப்கானிய யுத்தங்களில் பாஞ்சாலத்தையும் சிந்து மாகாணத்தையும் நிர்ப்பந்தமாகத் தன் சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்ட பிரிட்டிஷ் ஆட்சி இந்திய உபகண்டத்தின் தேசிய அரசியல் ராணுவ எல்லைகளைக் கைப் பற்றிக் கொண்டது. மத்திய ஆசியாவிலிருந்து ஏதாவது படை யெடுப்பு நேரிட்டால் அதை எதிர்த்து முறியடிப்பதற்கு இந்தப் பிரதேசங்கள் அத்தியாவசியமாகும்; பாரசிக எல்லைகளை நோக்கிய ருஷ்யா முன்னேறுவதற்கு எதிராகவும் இந்தப் பிரதேசங்கள் அவசியமாகும். *1840—50* வருஷங்களில், பிரிட்டிஷ் இந்தியப் பிரதேசத்தின் பரப்பளவு *167* ஆயிரம் சதுர மைல்கள் அதிகமாயிற்று; ஜனத்தொகை *85* லட்சத்து *72* ஆயிரத்து *630* அதிகமாயிற்று. உள் நாட்டைப் பொறுத்த மட்டில், சகல சுதேசி சமஸ்தானங்களும் பிரிட்டிஷார் வசமுள்ள பிரதேசங்களால் சூழப்பட்டிருந்தன; பிரிட்டிஷ் மேலாதிபத்தியத்துக்குப் பல வகைகளில் உட்பட்டிருந்தன. குஜராத்தையும் சிந்துவையும் தவிர, இதர சுதேசி சமஸ்தானங்களுக்குக் கடற்கரையுடன் தொடர்பில்லாமல் போய் விட்டது. இந்தியாவின் வெளித் தோற்றத்தைப் பொறுத்த மட்டில், அதை இந்தியா இப்பொழுது இழந்து விட்டது. *1849*-லிருந்துதான், ஒரு பெரிய பிரிட்டிஷ்—இந்திய சாம்ராஜ்யம் அமைந்துள்ளது.

ஆக, இந்தியாவின் இயற்கை எல்லைகளை அடையும் வரையில், இரண்டு நூற்றாண்டுகளாக, பிரிட்டிஷ் சர்க்கார், கம்பெனியின் பெயரால் போராடிக்கொண்டிருந்தது. இங்கிலாந்திலுள்ள சகல கட்சிகளும், இந்திய சாம்ராஜ்யம் முழுவதையும் தன் நிர்வாகத்தில் கொண்டு வந்தபிறகு, சமாதானத்தைப்பற்றி உரக்கப்பேசும் மோசக்காரர்கள் உள்பட சகல கட்சிகளும், இவ்வளவு காலமாக மௌனமாக இவற்றுக்கெல்லாம் உடந்தையாயிருந்து வந்ததின் காரணத்தை நாம் இப்பொழுது அறிய முடியும். அவர்கள்

முதலில் இந்திய சாம்ராஜ்யத்தைப் பிடித்துக் கொண்டால்தானே லோகோபகாரிகளென்பதைக் காட்டிக் கொள்ள முடியும். இந்தக் கோணத்தில் சாசனம் புதுப்பிக்கப்பட்ட முற் காலக்கட்டங்களுடன் ஒத்து நோக்கினால், 1858-ம் வருஷத்தில் இந்தியப் பிரச்னையின் நிலைமை மாறியிருப்பதைப் புரிந்து கொள்ளலாம்.

மீண்டும், இன்னொரு கோணத்தில் நாம் இந்தப் பிரச்னையைப் பகுத்தாராய்வோம். இந்தியாவுடன் பிரிட்டிஷ் வர்த்தகத்துக்குள்ள உறவின் பல கட்டங்களைப் பரிசீலனை செய்தால், இந்தியா சம்பந்தமான சட்டம் நிறைவேறுவதின் அலாதியான நெருக்கடியை நாம் மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

எலிஸபெத் மகாராணியின் ஆட்சிக் காலத்தில், கிழக்கிந்தியக் கம்பெனி செயலாற்றத் தொடங்கிய பொழுது, இந்தியாவுடன் லாபகரமான வியாபாரம் செய்வதற்காக, 30 ஆயிரம் பவுன்கள் பெறுமானமுள்ள வெள்ளியும் பொன்னும் அன்னிய தேச நாணயமும் வருடாவருடம் ஏற்றுமதி செய்வதற்கு, கம்பெனி அனுமதி பெற்றது. அந்த சகாப்தத்தின் துரபிமானங்கள் அனைத்தையும் அது மீறுவதாகும். அபூர்வ உலோகங்கள் மாத்திரமே ஒரு தேசத்தின் உண்மையான செல்வமாயிருந்த போதிலும், அவற்றை ஏற்றுமதி செய்யும் நாட்டுக்குச் சாதகமாக வியாபாரக் கணக்கில் மிச்சம் கிடைக்குமென்றால், அபூர்வ உலோகங்களின் ஏற்றுமதியை நிச்சயமாக அனுமதிக்கலாமென்று "கிழக்கிந்தியாவுடன் இங்கிலாந்து செய்யும் வியாபாரத்தைப் பற்றிய விரிவுரை"யில் **ஸர் தாமஸ் மான்** "வர்த்தக முறைக்கு" அஸ்திவாரமிட வேண்டியிருந்தது. இந்த விதமாகப் பார்த்தால், கிழக்கு இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகள் பெரும்பாலும் பிறநாடுகளுக்கு மறுமுறை ஏற்றுமதியாவதால், இந்தியாவுக்கு அனுப்பும் பொன் வெள்ளி உலோகக்கட்டிகளைவிட அதிகமான உலோகக்கட்டிகளை இங்கிலாந்து பெற்றுவிடுகிறதென்று அவர் வாதித்தார். இதே கருத்தோட்டத்தில், **ஸர் ஜோஷுவா சைல்ட்** ஒரு விரிவுரை எழுதினார். "கிழக்கிந்திய வர்த்தகம் சகல வியாபாரங்களிலும் சிறந்த தேசிய வர்த்தகமென்பதை நிரூபிக்கும் வியாசம்" அது. படிப்படியாக, கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆதரவாளர்கள் அதிகத் துணிவு பெற்றனர்; இந்த விசித்திரமான இந்திய வரலாற்றில், இந்தியாவுடன் வியாபாரம் செய்வதில் ஏகபோக உரிமையாளர்களாக விளங்கியவர்கள் தான் இங்கிலாந்தில் வர்த்தக சுதந்திரத்துக்காக முதன் முதலில் பிரச்சாரம் செய்தார்களென்ற ருசிகரமான விஷயமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கிழக்கிந்தியக் கம்பெனி சம்பந்தமாக பார்லிமெண்ட் தலையிட வேண்டுமென்று, மீண்டும் கோரியது வர்த்தக வர்க்கமல்ல; ஆலை முதலாளி வர்க்கம். பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவில், கிழக்கு இந்தியாவின் பஞ்சாடைகளும் பட்டாடைகளும் இறக்குமதியாவதால், ஏழை பிரிட்டிஷ் முதலாளிகள் அழிந்து வருவதாகக் கூறப்

பட்டது. ஜான் பால்லக்ஸ் பென் என்பவர் "தொழிலுற்பத்தியில் முரண்பட்டு நிற்கும் இங்கிலாந்தும் இந்தியாவும், லண்டன் 1797" என்ற தலைப்பில் எழுதிய புத்தகத்தில் இந்த அபிப்பிராயத்தைக் கூறினார். அந்தப் புத்தகத் தலைப்பின் உண்மை, நூறு வருஷங்களுக்குப் பிறகு, விசித்திரமான முறையில், வேறு பொருளில், ருசுவாயிற்று. அப்பொழுது பார்லிமெண்ட் தலையிட்டது. மூன்றாவது வில்லியம், காலத்தில் செய்த *11, 12* சட்டம் என்பதின் பிரகாரம், இந்தியா, சீனா, பாரசிகம் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பட்டாடைகளையும் சாயம் தோய்த்து அச்சிடப்பட்ட சிட்டித் துணிகளையும், உடுத்திக் கொள்வதற்குத் தடைவிதிக்கப் பட்டதுடன், அவற்றை வைத்திருப்பவர் அல்லது விற்பனை செய்பவருக்கு 200 பவுன் அபராதமும் நிச்சயிக்கப்பட்டது. பின்னால் "பேரறிவு பெற்ற" பிரிட்டிஷ் முதலாளிகள் மீண்டும் மீண்டும் முகாரி பாடியதால், முதலாவது இரண்டாவது மூன்றாவது ஜார்ஜ் மன்னர்களும் இதைப் போன்ற சட்டங்களை இயற்றினார்கள். இவ்வாறாக, பதினெட்டாம் நூற்றாண்டின் பெரும் பகுதியில், இந்தியாவில் செய்யப்படும் சரக்குகள் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டு, ஐரோப்பியச் சந்தையில் விற்கப்பட்டதேயல்லாது, இங்கிலீஷ் சந்தையில் இடம் பெறவில்லை.

இவ்வாறு, பேராசை பிடித்த முதலாளி இங்கிலாந்தில் பார்லிமெண்ட் தலையிடச் செய்தான். மேலும், சாசனம் புதுப்பிக்கப்படும் பொழுதெல்லாம், லண்டன், லிவர்பூல், பிரிஸ்டல் ஆகிய நகரங்களின் வியாபாரிகள் கம்பெனியின் ஏகபோக வர்த்தகத்துக்கு முடிவு கட்ட முயன்றனர்; அதன் மூலம், உண்மையிலேயே பொன் சுரங்கமாக மதிப்பிடப்பட்ட இந்த வர்த்தகத்தில் பங்கெடுக்க அவர்கள் வாய்ப்புத் தேடினார்கள். இந்த முயற்சிகளின் விளைவாக, கம்பெனியின் சாசனம் *1814* மார்ச் வரை செல்லுமென்று *1773*-ம் வருடச் சட்டத்தை இயற்றும்பொழுது, அதில் ஒரு ஷரத்தை பார்லிமெண்ட் சேர்த்தது. அதன் பிரகாரம் பிரிட்டனிலிருந்து எந்தத் தனி நபரும் சரக்குகளை இந்தியாவுக்கு அனுப்ப முடியும்; இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சிப்பந்திகளும் சரக்குகளை பிரிட்டனுக்கு அனுப்ப முடியும். ஆனால் இந்தச் சலுகைக்குப் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டன; தனிப்பட்ட வியாபாரிகள் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதை அந்த நிபந்தனைகள் அசாத்தியமாக்கின. *1813*-ல், வர்த்தகர்களின் நிர்ப்பந்தத்தைக் கம்பெனியால் சமாளிக்க முடியவில்லை. ஆகவே, சின வர்த்தகத்தின் ஏகபோகத்தை மாத்திரமே அதைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தது; இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதில், தனிப்பட்டவர்கள் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, போட்டியிட முடிந்தது. *1833*-ல் சாசனம் புதுப்பிக்கப் பட்டபொழுது இந்தக் கடைசி நிபந்தனைகளும் கடைசியாக ரத்து செய்யப்பட்டன. வர்த்தகம் செய்யக் கூடாதென்ற உத்திரவைக் கம்பெனி பெற்றது. கம்பெனி தன் வர்த்தகத் தன்மையை இழந்தது

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் பிரஜைகள் செல்வதைத் தடுக்கும் சலுகைகளைக் கம்பெனி அதுவரை அனுபவித்தது. அந்தச் சலுகைகளும் 1833-ல் வாபஸ் செய்யப்பட்டன.

இதற்குள், கிழக்கு இந்திய வர்த்தகமே பல முக்கிய மாறுதல்களை அடைந்தது. அதனால், அது சம்பந்தமாக, வெவ்வேறு பிரிட்டிஷ் நலன்களுடைய நிலையும் முற்றிலும் மாறிற்று. பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதிலும், இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற ஐசுவரியங்களில் மிகக் குறைவாகவிருந்த வர்த்தகத்தின் மூலம் சொற்பத் தொகையே சேகரிக்கப்பட்டது. இந்தியாவை நேரடியாகச் சுரண்டியும், பெருஞ் செல்வங்களைப் பறித்துமே, பெரும்பாலான செல்வ ஏற்றுமதி செய்யப்பட்டது. 1813-ல் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதில் கம்பெனிக்கிருந்த ஏகபோகம் ரத்தானவுடன், இந்தியாவுடன் நடைபெற்ற வர்த்தகம் குறுகிய காலத்தில், மும்மடங்கு அதிகமாயிற்று. அது மட்டுமல்ல. வர்த்தகத்தின் தன்மை முழுவதும் மாறிவிட்டது. 1813 வரையில், இந்தியா, பிரதானமாக, ஏற்றுமதி செய்யும் நாடாக விளங்கியது; இப்பொழுது அது இறக்குமதி செய்யும் நாடாகிவிட்டது. இந்த மாறுதல் மிகத் துரிதமாக நிகழ்ந்தது; ஆகவே, பொதுவாக, ரூபாய்க்கு 2 ஷில்லிங் 6 பென்ஸாகவிருந்த நாணய மாற்று விதம் 1823-லேயே ரூபாய்க்கு 2 ஷில்லிங்காகி விட்டது. அனாதி காலந்தொட்டு, உலகத்தில் மாபெரும் பஞ்சாடை உற்பத்தி சாலையாகவிருந்த இந்திய தேசத்தில் இப்பொழுது இங்கிலீஷ் முறுக்கு நூல்களும் பஞ்சாடைகளும் பெரு வெள்ளமாகக் குவிந்தன. இந்தியாவின் ஆடைகளுக்கு இங்கிலாந்தில் தடை விதிக்கப்பட்டது அல்லது மிகக் கொடிய நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டது; அதன் பிறகு இங்கிலீஷ் ஜவுளிகள் மிகச் சொற்பமான வரியைச் செலுத்திவிட்டு அல்லது பெயரளவுக்கு ஒரு வரியைச் செலுத்திவிட்டு, இந்தியாவில் குவிந்தன. 1780-ல் 386,152 பவுன்கள் பெறுமானமுள்ள பிரிட்டிஷ் சரக்குகளும் 15,041 பவுன்கள் பெறுமானமுள்ள உலோகக் கட்டிகளும் இந்தியாவுக்குச் சென்றன; அந்த வருஷத்தில் பிரிட்டன் 12,648, 616 பவுன்கள் பெறுமானத்துக்கு மொத்தமாக ஏற்றுமதி செய்ததால் மொத்த ஏற்றுமதியில் 32-ல் 1 பங்கே இந்தியாவுக்குச் சென்றது. 1850-ல் பிரிட்டனும் அயர்லாந்தும் 8,024,000 பவுன்கள் பெறுமானத்துக்கு இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தன. அந்த ஏற்றுமதியில் பருத்தி ஜவுளி மட்டும் 5,220,000 பவுன்கள் பெறுமானமுள்ளவையாகும். வெளி நாடுகளுக்கு பிரிட்டன் ஏற்றுமதி செய்த பருத்தி ஜவுளிகளில் இது நாலிலொரு பங்காகும். அந்த வருஷத்தில் பிரிட்டனின் ஜனங்களில் எட்டில் ஒருவர் பருத்தி ஜவுளித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்; பிரிட்டனின் வருமானத்தில் 12-ல் ஒரு பங்கைப் பருத்தி ஜவுளி உற்பத்தி அளித்தது. ஒவ்வொரு வியாபார நெருக்கடிக்குப் பிறகும் பிரிட்டிஷ் பருத்தி ஜவுளி முதலாளிகளுக்குக் கிழக்கிந்திய வர்த்தகம் மென்மேலும் முக்கியத்துவம் பெற்றது; கிழக்கு

இந்தியக் கண்டம் அவர்களுடைய தலை சிறந்த சந்தையாயிற்று. பிரிட்டிஷ் சமூகத்துக்குப் பருத்தி ஜவுளி முதலாளிகள் முக்கியமானவர்களான அதே வேகத்திலேயே, கிழக்கிந்தியா பிரிட்டிஷ் பருத்தி ஜவுளித் தொழிலுக்கு முக்கியமானதாயிற்று.

இது வரையில், இந்தியாவைத் தனது பண்ணைகளாக மாற்றிய பிரிட்டிஷ் பண முதலாளிகளும், தமது ராணுவத்தின் மூலம் இந்தியாவை வென்ற பிரிட்டிஷ் ஆளும் கூட்டமும், இந்தியாவில் தமது ஆடைகளைக் கொண்டு குவித்த ஆலை முதலாளிகளும் கைகோர்த்துச் சென்றனர். பிரிட்டிஷ் தொழிலின் நலன் மென்மேலும் அதிகமாக இந்திய மார்க்கெட்டைச் சார்ந்து நின்றது. ஆகவே, இந்தியாவின் சுதேசித் தொழிலை அழித்த பிறகு, இந்தியாவில் புதிய உற்பத்தித் திறனை சிருஷ்டிக்க வேண்டுமென்று ஆலை முதலாளிகள் மென்மேலும் நினைத்தார்கள். ஒரு தேசத்தில் உன் சரக்குகளைக் கொண்டு குவிக்க வேண்டுமானால், அந்த தேசம் திரும்பக் கொடுப்பதற்கு ஏதாவது உற்பத்தி செய்ய வேண்டாமா? தமது வர்த்தகம் பெருகுவதற்குப் பதிலாகச் சுருங்குவதை ஆலை முதலாளிகள் கண்டார்கள். 1846 முடிய நான்கு வருஷங்களில் இந்தியாவுக்கு பிரிட்டன் 26 கோடி 10 லட்ச ரூபாய்களுக்கு ஏற்றுமதி செய்தது; 1850 முடிய நான்கு வருஷங்களில் இந்தியாவுக்கு பிரிட்டன் 25 கோடி 30 லட்ச ரூபாய்களுக்கே ஏற்றுமதி செய்தது; முந்திய நான்கு வருஷங்களில், இந்தியா பிரிட்டனுக்கு 27 கோடி 40 லட்ச ரூபாய்களுக்கு ஏற்றுமதி செய்தது; பிந்திய நான்கு வருஷங்களில் 25 கோடி 40 லட்சம் ரூபாய்க்குத் தான் ஏற்றுமதி செய்தது. இந்தியா மிகக் குறைந்த அளவுக்கே பிரிட்டிஷ் சரக்குகளை வாங்க முடிகிறதென்பதை பிரிட்டிஷ் முதலாளிகள் கண்டு கொண்டார்கள். பிரிட்டிஷ் மேற்கு இந்தியத் தீவுகள் வருடத்தில் நபருக்கு 14 ஷில்லிங் விதமும், சில்லி 9 ஷில்லிங் 3 பென்ஸ் விதமும், பிரேஸில் 6 ஷில்லிங் 5 பென்ஸ் விதமும், க்யூபா 6 ஷில்லிங் 2 பென்ஸ் விதமும், பெரு 5 ஷில்லிங் 7 பென்ஸ் விதமும் மத்திய அமெரிக்கா 10 பென்ஸ் விதமும் பிரிட்டிஷ் சரக்குகளை வாங்கும்பொழுது, இந்தியா, 9 பென்ஸ் விதம் சரக்கே வாங்கிற்று. அதன் பிறகு 1850-ல் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பருத்திப் பயிர் மோசம் செய்துவிட்டது. அதனால் பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு 110 லட்சம் பவுன்கள் நஷ்டமேற்பட்டது. இந்தியாவிலிருந்து போதுமான கச்சாப் பருத்தியைப் பெறாமல், அமெரிக்காவை நம்பி நிற்கும் நிலையைக் கண்டு அவர்கள் ஆத்திரமடைந்தார்கள். மேலும், இந்தியாவில் முதல் போடுவதற்கான சகல முயற்சிகளுக்கும் இந்திய அதிகாரிகள் முட்டுக்கட்டை போட்டார்கள். பித்தலாட்டம் செய்து இடையூறு செய்தார்கள். இவ்வாறாக ஒருபுறம் ஆளும் கூட்டமும் பண மூட்டைகளும் மறுபுறம் தொழில் முதலாளிகளும் நின்று பலப் பரீட்சை செய்து கொள்வதற்கு இந்தியா போர்க்களமாயிற்று. இங்கிலாந்தில் ஆலை முதலாளிகளின் கை ஓங்கி விட்டது. இப்பொழுது அவர்கள் இந்தியாவில் உள்ள இந்த விரோதிகள் ஒழிய வேண்டுமென்றும்

இந்திய சர்க்காரின் புராதன வடிவம் முழுவதும் அழிய வேண்டுமென்றும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இறுதியாக முடிவு ஏற்பட வேண்டுமென்றும் கோருகிறார்கள்.

இப்பொழுது, இந்தியப் பிரச்னையை இந்த நான்காவது கடைசித் திருஷ்டிக் கோணத்திலிருந்தும் மதிப்பிடவேண்டும். 1784-லிருந்து இந்திய நிதிநிலைமை மென்மேலும் கஷ்டமானதாகச் சீரழிந்தது. இப்பொழுது இந்தியாவுக்கு 5 கோடி பவுன்கள் தேசியக் கடன் இருக்கிறது; அதன் வருமானவகை வழிகள் இடைவிடாமல் சுருங்கி வருகின்றன; அதற்கேற்றாற்போலச் செலவினங்கள் பெருகி வருகின்றன; அபினி வரியின் சூதாட்ட வருமானத்தின் மூலம் சந்தேகமான முறையில் கணக்குச் சரிக்கட்டப்படுகிறது. சீனர்களே கசகசாச் செடி பயிரிடத் தொடங்கிவிட்டதால், இந்த அபினி வரி வருமானத்துக்கும் அபாயம் ஏற்பட்டு விட்டது; அதற்கு இனி இடமிருக்காது. மறு புறத்தில் வியர்த்தமான பர்மா யுத்தத்தின் செலவால் வரவு செலவு விவகாரம் மேலும் சீரழிந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. "இந்திய சாம்ராஜ்யத்தை இழப்பதென்றால் இங்கிலாந்து அழிந்துவிடும். ஆகவே நாம் அதைக் காபந்து செய்ய வேண்டியிருக்கிறது. இதன் விளைவாக நமது நிதிநிலைமை அழிவுக் கட்டத்தை அணுகிக்கொண்டிருக்கிறது. இதுவே இன்றைய நிலைமை" என்று **டிக்கின்சன்** கூறுகிறார்.

ஆக, இந்தியப் பிரச்னை 1783-க்குப் பிறகு முதன் முதலாக ஒரு இங்கிலீஷ் பிரச்னையாகவும் ஒரு மந்திரிசபைப் பிரச்னையாகவும் இப்பொழுது எப்படி ஆயிற்று என்பதை நான் விளக்கிக் காட்டியுள்ளேன்.

இந்தியாவின் அரசாட்சி*

லண்டன், செவ்வாய், 1853 ஜூலை 5.

"கிழக்கிந்தியக் கம்பெனிக்கு இருபது வருஷக் குத்தகை அளிக்கும் சாசனத்தை, தம்மையே குத்தகைக்கு விடும்சாசனமாக இந்திய சுதேசிகள் கருதினார்கள்" என்று கிழக்கிந்தியக் கம்பெனியின் அதிகாரிகளில் ஒருவரான **ஹாலிடே**, ஒரு விசாரணைக் கமிட்டி முன்னிலையில் விசாரிக்கப்பட்ட சமயத்தில் சாட்சியம் அளித்தார். இந்தத் தடவையாவது, சாசனம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் புதுப்பிக்கப்படவில்லை; இஷ்டப்பட்ட பொழுது பார்லிமெண்ட் அதை ரத்து செய்ய முடியும். ஆகவே, பரம்பரைக் குடியானவர்களின் கண்ணியமிக்க ஸ்தானத்தைக் கம்பெனி இழந்துவிடும்; சொந்தக்காரன் தயவில் பயிரிடும் குடியானவரின் அநித்தியமான

1853 ஜூலை 20-ம் தேதி நியூயார்க் டெயிலிடிரிப்யூன் பிரசுரித்த கட்டுரை.

நிலைக்குக் கம்பெனி தாழ்ந்துவிடும். அந்த அளவுக்கு இது சுதேசிகளுக்கு ஆதாயமே. இதர பிரச்னைகளைப் போலவே இந்திய ஆட்சிப் பிரச்னையையும் தீர்மானமாகாத பிரச்னையாக மாற்றுவதில் கூட்டு மந்திரி சபை வெற்றி யடைந்து விட்டது. தனக்குச் சட்டமியற்றும் சக்தியுமில்லை, சட்டமியற்றுவதில் இணங்குவதற்குத் தனக்கு விருப்பமுமில்லை என்பதை ஒரே வோட்டெடுப்பின்மூலம் காமன்ஸ் சபை ஒப்புக்கொண்டு விட்டது. இவ்வாறாக காமன்ஸ் சபை தன் திறமையின்மைக்குத் தானே ஒரு புதிய அத்தாட்சிப் பத்திரம் அளித்துக்கொண்டு விட்டது. யார் அரசு புரியவேண்டும் என்ற பிரச்னையைப்பற்றி, அரிஸ்டாடில் காலத்திலிருந்து, சமத்காரமானதாகவோ அபத்தமானதாகவோ ஏராளமான வியாசங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் சரித்திரத்தின் காலக்கிரம ஏடுகளிலேயே முதன் முதலாக, 1,368,113 சதுர மைல் பரப்புள்ள நாட்டில் வாழும் 1,560 லட்சம், மக்கள்மீது ஆட்சி செலுத்தும் இன்னொரு மக்களின் சட்டசபை புனிதமான பகிரங்கமான கூட்டங்களில் கூட்டு விவாதம் நடத்தி, “15 கோடி நபர்களுள்ள அன்னிய சமூகத்தின்மீது யதார்த்தத்தில் அரசு புரிவது நம்மில் யார் யார்?” என்ற முறைக்கு முரணான கேள்விக்குப் பதில் காண முயற்சித்து வருகிறார்கள்.

இந்தக் கேள்வியின் மறைபொருளை எடுத்துணர்த்தக்கூடிய **உடிபஸ்*** ஒருவரும் பிரிட்டிஷ் சட்ட மன்றத்தில் இல்லை. விவாதம் முழுமையும் இது சம்பந்தமாகத்தான் நடைபெற்றது; ஏனெனில், வோட் எடுக்கப்பட்டபோதிலும், இந்திய அரசாட்சிக்கு இலக்கணம்காண அவர்களால் முடியவில்லை.

இந்தியாவில் வரவைவிடச் செலவு கூடுதலாயிருப்பதால், வருஷம் தவறாமல் துண்டு விழுந்துகொண்டிருக்கிறது; அது அளவுக்கு மீறி யுத்தங்களில் ஈடுபடுகிறது; இந்தியாவில் பொது மராமத்து வேலைகள் நடைபெறுவதேயில்லை; வரிமுறை வெறுக்கத்தக்கதாயிருக்கிறது. அதைப் போலவே சட்டமும் நீதிபரிபாலனமும் அருவருப்பையே அளிக்கின்றன—இந்த ஐந்து

---

*உடிபஸ்-கிரேக்க தேசத்தைச் சேர்ந்த தீபிஸ் நகரத்தின் அரச குமாரனாக வர்ணிக்கப்படும் உடிபஸ்ஸின் கதையை சபொக்ளீஸ் எழுதியிருக்கிறார். கிரேக்க-ஸ்பின்க்ஸ் (சிறகுகளுடன் கூடிய சிங்கத்தின் உடலையும் பெண்ணின் முகத்தையும் மார்பையும் ஒருங்கே படைத்தது என்பது ஐதிகம்) தீபிஸ் நகரத்துக்கு வந்த, தன் புதிருக்குப் பதிலளிக்காதவர்களையெல்லாம் சாகடித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது, உடிபஸ் அங்கு வந்து அதன் கேள்விக்குப் பதில் சொல்கிறான். பிறந்தவுடன் நாலு கால்கள், பிற்பாடு இரண்டு கால்கள், அதன் பிறகு மூன்று கால்கள், இறந்தவுடன் எட்டுக் கால்கள் என்று பொருள்படும் புதிரைத்தான் அந்த ஸ்பின்க்ஸ் போட்டது. மனிதன் என்று பதில் கூறினான் உடிபஸ். இந்தக் கதையை மனதில் கொண்டே, மார்க்ஸ் இங்கு உடிபஸ்ஸைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

—மொ-ர்.

விஷயங்களும் கிழக்கிந்திய சாசனத்தின் ஐந்து அம்சங்களாக நடைமுறையில் விளங்குகின்றன. 1853-ம் வருஷ விவாதங்களிலும் 1833-ம் வருஷ விவாதங்களிலும் 1813-ம் வருஷ விவாதங்களிலும் அவற்றுக்கு முன்னால் இந்தியா சம்பந்தமாக நடந்த விவாதங்களிலும் இவை யெல்லாம் சந்தேகத்துக்கு இடமில்லாமல் தீர்மானமாகிவிட்டன. இவற்றுக்கெல்லாம் பொறுப்பாளி யார் என்பதைத் தான் ஒருபொழுதும் கண்டு பிடிக்கவில்லை.

இந்தியாவின் கவர்னர்-ஜனரல் என்று ஒருவர் மேலதிகாரம் படைத்தவராக விளங்குகிறார் என்பது உண்மை; ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் அவர் மீது அதிகாரம் செலுத்துகிறது. அந்த பிரிட்டிஷ் சர்க்காரென்பது யார்? கண்ட்ரோல் போர்டின் தலைவர் என்ற ஒடுக்கமான பெயரில் மாறுவேஷம் தரித்திருக்கும் இந்திய மந்திரியா? அல்லது கிழக்கிந்தியக் கம்பெனியின் இருபத்திநான்கு டைரக்டர்களா? இந்திய தர்ம சாஸ்திரங்களின் தொடக்கத்திலேயே நாம் தெய்விக மும்மூர்த்திகளைத் தரிசிக்கிறோம்; அதைப் போலவே இந்திய அரசாட்சியின் வாசலிலேயே நாம் லௌகிக மும்மூர்த்திகளைத் தரிசிக்கிறோம்.

தற்சமயம், கவர்னர் ஜனரலை அப்புறம் ஒதுக்கி விடுவோம். அப்பொழுது இந்திய அரசாட்சிப் பிரச்னை இரட்டையாட்சிப் பிரச்னையாக ஆகிவிடுகிறது; இம் முறையில் இங்கிலீஷ்காரர்கள் இந்தப் பிரச்னையை அறிந்திருக்கிறார்கள். மசோதாவைப் பிரேரேபித்த மந்திரிகளும், வோட் போட்ட சபையும் இந்த இரட்டைவாதத்தை இறுகப் பிடித்துக் கொள்கிறார்கள்.

"இங்கிலீஷ் வர்த்தக சாகசக்காரர்கள் திரவியம் பெறுவதற்காக இந்தியா தேசத்தை ஜயித்து, தமது பாக்டரிகளை ஒரு சாம்ராஜ்யமாக விஸ்தரிக்கத் தொடங்கியதும், டச்சு வியாபாரிகளுடனும் பிரெஞ்சு வியாபாரிகளுடனும் அவர்களுக்கிருந்த போட்டி, அந்த தேசங்களுக்கிடையேயுள்ள போட்டா போட்டியாக மாறிய பொழுது, பிரிட்டிஷ் சர்க்கார் கிழக்கிந்தியக் கம்பெனியின் விவகாரங்களில் தலையிடத் தொடங்கியது. அப்பொழுது பெயரில் இல்லாவிட்டாலும் பொருளில், இந்தியாவின் இரட்டை ஆட்சி அமைந்தது. 1784-ம் வருடத்தில் பிட் நிறைவேற்றிய சட்டம், கம்பெனியுடன் ஒரு சமரசம் செய்து கொண்டதின் மூலம், கண்ட்ரோல்போர்டின் மேற்பார்வைக்குக் கம்பெனியை உட்படுத்தியதன் மூலம் கண்ட்ரோல் போர்டை மந்திரி சபையின் உப அங்கமாகச் செய்ததன் மூலம், சந்தர்ப்ப வசதியால் ஏற்பட்ட இரட்டை ஆட்சிக்கு அங்கீகாரம் அளித்து அதை முறைப்படுத்தியது. இவ்வாறாக, இரட்டை ஆட்சி உண்மையாகவும் சட்ட பூர்வமாகவும் துலங்கியது.

1833-வருஷச் சட்டம் கண்ட்ரோல் போர்டை பலப்படுத்தியது; கிழக்கிந்தியக் கம்பெனியின் முதலாளிகளை, கிழக்கிந்திய வருமானங்களின் அடமானக்காரர்களாகத் தாழ்த்தியது; கம்பெனி

தன் சரக்குகளை விற்றுவிட வேண்டுமென்று கட்டளையிட்டது; அதன் வர்த்தகத் தொழிலுக்கு முடிவு கட்டியது. கம்பெனி அரசியல் ரீதியில் ஜீவித்தவரை, அது பிரிட்டிஷ் அரசனின் சொத்துக்களுடைய பொறுப்பாளியாக—ஏஜண்டாக—மட்டிலுமே இருக்க முடிந்தது. ஆக, இந்திய மன்னர்களுக்குக் கிழக்கிந்தியக் கம்பெனி என்ன செய்ததோ, அதையே கம்பெனிக்கு பிரிட்டிஷ் மந்திரி சபை செய்தது. இவ்வாறு, கிழக்கிந்தியக் கம்பெனியை ஒதுக்கிவிட்டு அதன் இடத்தை ஆக்கிரமித்துக்கொண்ட பிரிட்டிஷ் மந்திரி சபை கொஞ்சகாலத்துக்குக் கம்பெனியின் பெயராலேயே அரசாண்டது. 1833-லிருந்து இதுவரை கிழக்கிந்தியக் கம்பெனி பெயரளவில்தான் இருந்து வந்திருக்கிறது; அதுவும் மந்திரி சபையின் அனுமதியுடன் வாழ்ந்து வந்திருக்கிறது. ஆக ஒரு புறத்தில், கம்பெனியை அறவே அகற்றுவதில் கஷ்டமில்லையென்றாலும் மறுபுறத்தில் அனாமதேயக் கழகத்தின் பரம்பரைக் கம்பெனியின் பெயரால் இந்தியாவை இங்கிலாந்து அரசு புரிவதா அல்லது விக்டோரியா மகாராணியின் சொந்தப் பெயரில் அரசு புரிவதா என்பதை முடிவுகட்டுவது மிகவும் கடினமாகும். ஆகவே, பிரச்னை முழுவதும், அணுகும் முறைபற்றியதாக மட்டுமே தோன்றுகிறது. அந்த வகையிலும், பிரச்னைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க முடியாது என்றும் தோன்றுகிறது. ஆயினும் விவகாரம் அவ்வளவு சுலபமானதல்ல.

முதலாவதாக, மந்திரி சபையால் நியமிக்கப்பட்டு கானன்ரோவில் வசிக்கும் கண்ட்ரோல் போர்டு, லீடன்ஹால் தெருவில் வசிப்பதாகக் கருதப்படும் கிழக்கிந்தியக் கம்பெனியைப் போலவே ஒரு போலி ஸ்தாபனமென்பதைக் குறிப்பிடவேண்டும். கண்ட்ரோல் போர்டின் தலைவருடைய சர்வாதிகாரப் பாத்திரத்துக்கு ஒரு மூடுதிரையாக மட்டுமே போர்டு அங்கத்தினர்கள் பயன்படுகிறார்கள். கண்ட்ரோல் போர்டுத் தலைவரே பிரிட்டிஷ் மந்திரி சபையின் சுயேச்சையான உறுப்பினராயிருந்த போதிலும், மந்திரி சபைக்கு உட்பட்டவராவார். எதற்கும் தகுதியற்றவனாயிருக்கும் ஒருவனிடமிருந்து விடுபட அவனை நீதிபதியாக்குதல் சிறந்தது என்று இந்தியாவில் கருதப்படுவதாகத் தோன்றுகிறது. பிரிட்டனில் ஒரு கட்சி அதிகாரத்துக்கு வரும் பொழுது, ஒரு பத்தாம் தர "ராஜதந்திரி" அந்தக் கட்சிக்குச் சுமையாக இருந்தால், அவரை முகலாய மன்னர்களின் வார்ஸாகவுள்ள கண்ட்ரோல் போர்டுத் தலைவராக நியமிப்பது தலை சிறந்ததென்று அக்கட்சி கருதுகிறது. இவ்வாறாக, அவருடைய தொல்லையிலிருந்து விடுபட அது முயல்கிறது. கரோல்வுட் இதற்கு ஒரு உதாரணம்.

"கிழக்கிந்தியப் பிரதேசங்களில் சர்க்கார் அல்லது வருமானங்களுடன் எவ்விதத்திலாவது சம்பந்தமுள்ள சகல கிழக்கிந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளையும் மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்தி அமுல் நடத்துவதற்கான பரிபூரண அதிகாரத்தை" கண்ட்ரோல் போர்டுக்கு, அதாவது கண்ட்ரோல் போர்டின்

தலைவருக்குச் சட்டம் அளிக்கிறது. "போர்டின் அங்கீகாரத்தைப் பெறாமல் டைரக்டர்கள் இந்தியா சம்பந்தமாகவோ அல்லது அதன் ஆட்சி சம்பந்தமாகவோ உத்திரவுகள், கட்டளைகள், செய்திகள் கடிதங்கள் எவையுமனுப்பக் கூடாது." "போர்டு அறிவித்தவுடன் பதினான்கு நாட்களுக்குள் டைரக்டர்கள் எந்த விஷயத்தையும்பற்றி உத்திரவுகளைத் தயாரிக்க வேண்டுமென்று" கட்டளையிடப்படுகிறார்கள். "அல்லது இந்தியா விஷயமாக போர்டு பிறப்பிக்கும் உத்திரவுகளை" அவர்கள் இந்தியாவுக்கு "அனுப்பவேண்டும்." இந்தியாவுடன் உள்ள சகல கடிதப் போக்குவரத்துக்களையும் தஸ்தாவேஜி போக்குவரத்துக்களையும் பரிசோதிப்பதற்கு, போர்டுக்கு அதிகாரம் உண்டு; முதலாளிகள், டைரக்டர்களின் கோர்ட்டுகளுடைய நடவடிக்கைகளைப் பரிசோதிக்கவும் போர்டுக்கு அதிகாரமுண்டு. கடைசியாக, டைரக்டர்களுடைய கோர்ட் ஒரு ரகசியக் கமிட்டியை அமைக்கவேண்டும்; அந்தக் கோர்ட்டின் தலைவர், உபதலைவர், மூத்த அங்கத்தினர் ஆகியோர் அந்த ரகசியக் குழுவின் அங்கத்தினர்களா யிருப்பார்கள். அவர்கள் தாமறியும் தகவல்களை ரகசியமாக வைத்திருப்போமென்று பிரமாண மெடுத்தவர்களாயிருக்கவேண்டும். சகல ராஜீய, ராணுவ விஷயங்களிலும், போர்டுத் தலைவர் இந்த ரகசியக் கமிட்டி மூலம் தன் சொந்த உத்திரவுகளை இந்தியாவுக்கு அனுப்பலாம். இந்தக் கமிட்டியும் தபால் போக்குவரத்து மார்க்கமாக மட்டிலுமே பயன்படுகிறது. ஆப்கானிய, பர்மா யுத்தங்கள் சம்பந்தமாகவும், சிந்து மாகாணத்தை வசப்படுத்திக்கொள்வது சம்பந்தமாகவும் இந்த ரகசியக் குழுவின் மூலமே உத்திரவுகள் அனுப்பப்பட்டன. அந்த உத்திரவுகளைப்பற்றி ஜனங்களுக்கும் பார்லிமெண்டுக்கும் எவ்வளவு தெரியுமோ, அவ்வளவே டைரக்டர்கள் மன்றத்துக்கும் தெரியும். ஆகவே, இந்த அளவில் பார்த்தால் கண்ட்ரோல் போர்டுத் தலைவரே உண்மையான முகலாய மன்னராகத் தோன்றுகிறார். எந்தச் சூழ்நிலையிலும், இங்கு செய்வதற்கு அவரிடம் வரையற்ற அதிகாரமிருக்கிறது; உதாரணமாக, பேரழிவை விளைவிக்கும் யுத்தங்களுக்கு அவர் காரணமாயிருக்க முடியும்; அதே சமயத்தில் அவர் டைரக்டர்களுடைய மன்றத்தின் பெயருக்குப் பின்னால் மறைந்து வாழவும் முடியும். மறுபுறத்தில், டைரக்டர்கள் மன்றத்துக்கும் உண்மையான அதிகாரமில்லாமல் இல்லை. பொதுவாக, அவர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் முதல் முயற்சி எடுத்துச் செயலாற்றினார்கள்; கண்ட்ரோல் போர்டுடன் ஒத்து நோக்கினால், டைரக்டர்கள் அதிக நிலையானவர்கள், பரம்பரை விதி முறைப்படி செயலாற்றுகிறார்கள்; விவரஞானம் உடையவர்கள். ஆகவே, சாமான்ய உள் நிர்வாகத்தை நடத்துவது நிச்சயமாக அவர்கள் பங்குக்குச் சேர்கிறது. மேலும், அவர்கள் ஆங்கிலேய அரசனின் அனுமதியுடன், இந்தியாவின் பிரதம நிர்வாகியான கவர்னர்-ஜனரலை நியமிக்கிறார்கள். கவர்னர்-ஜனரல் உள்பட மேலதிகாரிகளை யெல்லாம் வாபஸ் வாங்குவதற்கு அவர்களுக்குத் தங்கு தடையில்லாத அதிகாரம் இருந்தது. ஸர் ராபர்ட் பீல் காலத்

இல், கவர்னர்-ஜனரலாயிருந்த **எல்லன்பரோ** பிரபுவை அவர்கள் அம்மாதிரி வாபஸ் வாங்கினார்கள். ஆனால் இதுகூட அவர்களுடைய மிக முக்கியமான சலுகையல்ல. அவர்களுக்கு நபருக்கு 300 பவுன்கள் விதமே வருஷச் சம்பளம் கிடைக்கிறது; உண்மையில் அவர்கள், வேண்டியவர்களுக்கு உதவும் சந்தர்ப்பத்தைப் பெறுவதன் மூலமே தமது பதவியின் பயனை அடைகிறார்கள். குமாஸ்தா பதவிகளையும் ராணுவப் பயிற்சி பெறுவோர் பதவிகளையும் அவர்கள் வினியோகம் செய்தார்கள். இவ்வாறு நியமிக்கப்படுகிறவர்களிடையிலிருந்தே இந்திய கவர்னர்-ஜனரலும், மாகாண கவர்னர்களும், சுதேசிகளுக்கு மறுக்கப்படும் மேல் பதவிகளுக்கு நியமனங்களைச் செய்யவேண்டும். வருஷத்தில் நியமனமாக வேண்டியவர்களின் எண்ணிக்கையை அறிந்ததும், அதை 28 சம பங்குகளாக டைரக்டர்கள் பிரிப்பார்கள். அவற்றில் தலைவருக்கு இரண்டு பங்குகள், உபதலைவருக்கு இரண்டு பங்குகள், கண்ட்ரோல் போர்ட் தலைவருக்கு இரண்டு பங்குகள் ஒதுக்கப்படுகின்றன; டைரக்டர்களுக்கு நபருக்கு ஒரு பங்கு விதம் ஒதுக்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் பங்கின் மதிப்பு 14 ஆயிரம் பவுன்களைவிடக் குறைவாக இருந்தது அபூர்வம். "சகல நியமனங்களும் தனி நபர்களின் சொந்தச் சொத்து மாதிரித் தோன்றுகின்றன. டைரக்டர்கள் அவற்றைப் பங்குத் போட்டுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு டைரக்டரும் தன் பங்கைத் தன் இஷ்டப்படி உபயோகப்படுத்திக் கொள்கிறார்" என்று **காம்பல்** கூறுகிறார். அடிஸ் கோம்பியிலும் ஹேலிபரியிலுமுள்ள கலாசாலைகளில் பயிற்சி பெற்று, டைரக்டர்களுடைய சகாயத்துடன் பதவிக்கு வந்துள்ள இந்திய மேலதிகாரிகள் அனைவரிடமும் டைரக்டர்களின் மனோவேகம் பரவியிருக்குமென்பது வெளிப்படை. வருடா வருடம் பீரிட்டிஷ் மேல் வர்க்கங்களிடையே 4 லட்சம் பவுன்கள் மதிப்புள்ள நியமனங்களை டைரக்டர்கள் கோர்ட் வினியோகம் செய்து வரும்பொழுது, அதே மேல் வர்க்கங்களால் உருவாக்கப்படும் பிரிட்டிஷ் அபிப்பிராயம் அந்த டைரக்டர்களுடைய கோர்ட்டுக்கு எவ்வகையிலும் தடையாக விருக்காது என்பதும் வெளிப்படை. டைரக்டர்கள் கோர்ட்டின் மனோ வேகத்தைப் பற்றி நான் இந்தியாவின் யதார்த்த நிலைமை சம்பந்தமாக எழுதவிருக்கும் கடிதத்தில் விளக்குவேன். இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் விவாதத்தில், பேசுங்கால், கோர்ட் துன்மார்க்கனாயிருந்தாலும் அது விரும்பும் சகல தீமைகளையும் செய்வதற்கு அதற்குச் சக்தியில்லை என்று கூறி, **மெக்காலே** கோர்ட்டுக்குப் பரிந்து பேசியதை மாத்திரம் இங்கு குறிப்பிட்டால் போதுமானது. டைரக்டர்கள் கோர்ட்டை எதிர்த்துக் கொண்டுதான், தனிப்பட்ட கவர்னர்கள் தத்தம் சொந்தப் பொறுப்பில் சில சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். இவ்வாறுதான், உடன்கட்டை ஏறுவது நிறுத்தி வைக்கப்பட்டது; வெறுக்கத்தக்க போக்குவரத்து வரிகள் ரத்து செய்யப்பட்டன; கிழக்கிந்தியப் பத்திரிகைகள் விடுதலையடைந்தன.

டைரக்டர் மன்றத்தின் திரை மறைவில், கண்ட்ரோல் போர்டின்! தலைவர் இந்தியாவை நாசகார யுத்தங்களில் சிக்க வைக்கிறார்; டைரக்டர் மன்றம் கண்ட்ரோல் போர்டின் திரை மறைவில், இந்திய நிர்வாகத்தை ஊழல் மயமானதாகச் செய்கிறது.

இந்த விபரீதமான அரசாங்க அமைப்பை மேலும் ஆழ்ந்து ஆராய்ந்தால், அடித்தட்டில் ஒரு மூன்றாவது அதிகாரக் கருவியை நாம் காண்கிறோம். போர்டையும் மன்றத்தையும்விட அதிக அதிகாரம் படைத்ததாக அது செயலாற்றுகிறது; போர்டையும் மன்றத்தையும்விட அதிகமாகப் பொறுப்பற்றது; பொதுஜன அபிப்பிராயத்தின் மேற்பார்வையிலிருந்து போர்டையும் மன்றத்தையும்விட அதிகமாகப் பாதுகாப்புப் பெற்றிருக்கிறது. மாறிக்கொண்டிருக்கும் போர்ட் தலைவர், கானன்ரோவிலுள்ள தன் ஸ்தாபனத்தின் நிரந்தரக் குமாஸ்தாக்களை நம்பி நிற்கிறார். அந்தக் குமாஸ்தாக்களுக்கு இந்தியா தேசம் இந்தியாவில் இல்லை, லெடன்ஹால் தெருவில் இருக்கிறது. லெடன்ஹால் தெருவின் எஜமானன் யார் ?

வயது மூத்த சிமாட்டிகளும் சக்தியில்லாத கனவான்களுமாக இரண்டாயிரம் நபர்கள் இந்தியப் பங்குகளின் உடைமையாளர்களாக விளங்குகிறார்கள். இந்திய வருமானத்திலிருந்து தமது பங்கு லாபங்களைப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்பதைத் தவிர அவர்களுக்கு இந்தியாவிடம் எத்தகைய அக்கரையுமில்லை. அவர்கள் 25 டைரக்டர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். 1000 பவுன் பங்கு இருப்பது மட்டுமே டைரக்டராவதற்கு யோக்கியதாம்சம். வியாபாரிகளும் பாங்கர்களும் கம்பெனிகளுடைய டைரக்டர்களும் தத்தம் சொந்தக் கம்பெனிகளின் நலன்களுக்காக டைரக்டர் மன்றத்தில் இடம் பெறப் பெரு முயற்சி எடுக்கிறார்கள். "லண்டன் நகரத்தில் ஒரு பாங்கரிடம் கிழக்கிந்தியக் கம்பெனியின் வோட்டுக்களில் 300 வோட்டுக்கள் இருக்கின்றன. டைரக்டர் தேர்தலில் அவருடைய வார்த்தை ஆட்சேபிக்க முடியாத சட்டமாகவிருக்கிறது" என்று **பிரைட்** கூறினார். ஆகவே டைரக்டர் மன்றம் இங்கிலீஷ் பண மூட்டைகளின் கருவியே.

இந்த மன்றம், மேற்சொன்ன ரகசியக் கமிட்டியைத் தவிர, (1) அரசியல்—ராணுவக் கமிட்டி (2) நிதி—உள் விவகாரக் கமிட்டி (3) வரி வசூல்—நீதி—சட்ட நிரூபணக் கமிட்டி ஆகியவற்றையும் அமைக்கிறது. இந்தக் கமிட்டிகள் வருடா வருடம் மாற்றி மாற்றியமைக்கப்படுகின்றன. ஒரு பணக் கோமான் இவ்வருடம் நீதிக் கமிட்டியிலிருந்தால், அடுத்த வருடம் ராணுவக் கமிட்டியிலிருப்பார்; ஆகவே ஒரு குறிப்பிட்ட இலாகாவின் மீது தொடர்ச்சியாக மேற் பார்வை செய்வதற்கு அவருக்குச் சந்தர்ப்பமிருக்காது. தேர்தல் முறையே, வேலைகளுக்குத் தகுதியென்பது லவலேசமும் இல்லாதவர்களை அந்த ஸ்தானங்களில் அமர்த்தியது. அவர்களையும் கமிட்டிகளிடையே மாற்றிக்கொண்டேயிருப்பதால், அவர்களுக்கு ஏதாவது தகுதி இருந்திருந்தால் கூட, அதுவும் பூரணமாக

ஒழிந்து விடுகிறது. அப்படியானால், டைரக்டர்களின் பெயரால் உண்மையில் ராஜ்யத்தை நடத்துவது யார்? பொறுப்பற்ற காரியதரிசிகளும் பரிசோதகர்களும் குமாஸ்தாக்களுமாக இந்தியக் காரியாலயத்தில் குழுமியிருப்பவர்கள் தான். அவர்களில் ஒரே ஒருவர் தான் இந்தியாவுக்குச் சென்று வந்திருப்பதாகவும் அவரும் தற்செயலாக இந்தியாவுக்குப் போய் வந்தவரென்றும் "இந்திய அரசாட்சியின் திட்டம்" என்ற புத்தகத்தில் **காம்பேல்** எழுதுகிறார். ஆகவே, வேண்டியவர்களுக்குச் சகாயம் செய்வதைத் தவிர, டைரக்டர் மன்றத்துக்கு அரசியலும் கோட்பாடுகளும் முறையும் இருப்பதாகப் பேசுவது வெறுங் கற்பனையாகும். இந்தியாவின் உண்மையான டைரக்டர் மன்றம், உண்மையான பிரிட்டிஷ் சர்க்கார் முதலியன வெல்லாம் இந்த "நிரந்தரமான, பொறுப்பில்லாத யதேச்சாதிகார வர்க்கமாகும்" இவர்கள் "பதவியின் சிருஷ்டிகள்; பட்சபாதத்தின் சிருஷ்டிகள்." இவர்கள் லெடன்ஹால் தெருவில் வசிக்கிறார்கள். வெனிஸ் நகரத்தில் உயர்குலக் கோமான்கள் சேர்ந்தமைத்த கழகம் ஒரு பரந்த சாம்ராஜ்யத்தை யாண்டது. இங்கு வயது சென்ற பிடிவாதக் குமாஸ்தாக்களும், அவர்களைப் போன்ற விசித்திரமான பேர்வழிகளுமுள்ள கழகம் ஒரு பரந்த சாம்ராஜ்யத்துக்கு அதிபனாக விளங்குகிறது.

ஆக, இந்திய சர்க்காரைப் போல ஒரு சர்க்காரைப்பற்றி இவ்வளவு அதிகமாக எழுதப்பட்டதும் கிடையாது, இம்மாதிரி நடைமுறையில் ஒன்றுமே செய்யாதிருந்ததும் கிடையாது என்றால் அதில் அதிசயமில்லை. கிழக்கிந்தியக் கம்பெனி ஒரு வர்த்தகக் கம்பெனியாக மாத்திரம் இருந்தபொழுது, ஒவ்வொரு வியாபாரக் கம்பெனியும் செய்வதைப் போல அதுவும் கிழக்கிந்தியாவிலிருந்த தமது பாக்டரிகளின் மானேஜர்களிடமிருந்து ஒவ்வொரு சரக்கு இனத்தைப் பற்றியும் மிக விரிவான அறிக்கை கேட்டார்களென்பது உண்மை. பாக்டரிகள் ஒரு சாம்ராஜ்யமாக வடிவெடுத்த பொழுது, சரக்கு இனங்கள் பற்றிய கடிதப் போக்குவரத்து, கப்பல் கப்பலாகப் போய் வரும் அளவுக்கு உள்ள தஸ்தவேஜிகளாகவும் கடிதங்களாகவும் குவிந்தபொழுது, லெடன்ஹால் குமாஸ்தாக்கள் தமது முறையைத் தொடர்ந்து அமுல் நடத்தினார்கள்; டைரக்டர்களும் போர்டும் தம் உதவியில்லாமல் எதுவும் செய்ய முடியாத நிலைமையை உண்டாக்கினார்கள். சர்க்காரை ஒரு பிரம்மாண்டமான எழுதும் யந்திரமாக மாற்றுவதில் வெற்றியடைந்தார்கள். அதிகார பூர்வமான சம்பளக் கமிட்டிக்கு முன்னால் **பிரௌட்டன்** பிரபு சாட்சியம் கொடுக்கும்பொழுது, ஒரே ஒரு தபாலில் 45 ஆயிரம் பக்கங்கள் அடங்கிய கட்டுகள் போவதாகக் கூறினார்.

இந்தியக் காரியாலயத்தில், காலத்தை விரயம் செய்யும் முறையில் வேலை நடப்பதைப் பற்றி நீங்கள் புரிந்து கொள்வதற்காக நான் **டிக்கின்ஸன்** கூறியதை மேற்கோள் காட்டுகிறேன் :—

" இந்தியாவிலிருந்து ஒரு தபால் வரும்பொழுது, அது முதலில் அதற்குரித்தான பரிசோதகர் இலாகாவுக்கு அனுப்பப்

படுகிறது. அதன் பிறகு அந்த இலாகாவுக்குப் பொறுப்பான அதிகாரியுடன் தலைவர்கள் கூடிப்பேசி, எழுதவேண்டிய பதிலின் கருத்தைத் முடிவு செய்கிறார்கள். இந்தப் பதிலின் நகலை இந்திய மந்திரிக்கு அனுப்புகிறார்கள்; இதற்கு பி. ஸி. என்று பெயர். பூர்வாங்கக் கடிதம் என்று இதற்குப் பொருள். இந்தப் பூர்வாங்க நிலையில், தலைவர்கள் குமாஸ்தாக்களையே நம்பி நிற்கிறார்கள். ஆகவே முன்னறிவிப்புடன்கூட முதலாளிகள் மன்றம்கூடி விவாதிக்கும்பொழுதுகூட, தலைவர் தனக்குப் பக்கத்திலுள்ள காரியதரிசியை விளக்கம் கேட்டுக்கொண்டேயிருப்பதையும், காரியதரிசி தலைவரிடம் சப்தமில்லாமல் பேசிக்கொண்டும் தலைவரைத் தூண்டிக்கொண்டும் கேலி செய்துகொண்டும் இருப்பதையும், அதாவது தலைவரை ஒரு கைப்பாவையாகக் காரியதரிசி பாவிப்பதையும் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கிறது; மறு பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மந்திரியும் அதே நிலைமையிலிருக்கிறார். இந்தப் பூர்வாங்கக் கடித விவாதக் கட்டத்தில் நகலைப்பற்றி அபிப்பிராய பேதம் எழுந்தால், மந்திரியும் தலைவரும் சுமுகமாக விவாதித்து அதைத் தீர்த்துக் கொள்வார்கள். இறுதியாக, மந்திரி நகலை ஏற்றுக்கொண்டோ திருத்தியோ திருப்பியனுப்புகிறார். அதன் பிறகு, அந்தக் கடிதம் சம்பந்தப்பட்ட இலாகாவை மேற்பார்வையிடும் கமிட்டிக்கு அது சம்பந்தமான சகல தஸ்தவேஜிகளுடனும் சமர்ப்பிக்கப்படுகிறது. அந்தக் கமிட்டி அதைப்பற்றி ஆலோசித்து விவாதித்து, அதை அங்கீகரிக்கவேண்டும் அல்லது மாற்ற வேண்டும். அதன் பிறகு, டைரக்டர் மன்றத்தில் இதே நிகழ்ச்சி மீண்டும் நடைபெறுகிறது. அதற்குப்பின் அது முதல் தடவையாக, அதிகார முத்திரைபெற்ற கடிதமாக மந்திரியிடம் போகிறது. அதன் பிறகு அது திரும்பவும் அதே நிகழ்ச்சிக்கு உட்படுகிறது.”

“ஒரு விஷயம் இந்தியாவில் விவாதிக்கப்படும்பொழுது, அந்த விஷயத்தை டைரக்டர்கள் மன்றத்திடம் ஒப்படைத்திருக்கிறது என்று அறிவிக்கப்பட்டால், காலவரம்பு இல்லாமல் அது ஒத்தி வைக்கப்பட்டு விட்டதாக இந்தியாவில் அர்த்தம் செய்துகொள்கிறார்கள்” என்று காம்பெல் கூறுகிறார்.

இந்த அதிகார வர்க்கத்தின் அடைபட்டுக் கிடக்கும் பழக்கத்தையும் இழிவான மனோபாவத்தையும், பர்க்கின் பிரசித்தி பெற்ற வாக்கியங்களில் கண்டிப்பது சாலப் பொருத்தமாயிருக்கும். அவர் கூறினார் :—

“இந்த இழிவான அரசியல் வாதிகளின் கூட்டம் நமது இனத்தின் மிகத் தாழ்ந்த நபர்களாவார்கள். அவர்களிடமுள்ள ஆட்சியைப்போன்ற அதர்மமானதும் யந்திரத்தின் தன்மை வாய்ந்ததுமான தொழில் ஒன்றுமில்லை. நல்லொழுக்கம் அவர்களுக்குப் பழக்கமில்லை. மனச்சாட்சியும் கீர்த்தியும் மாத்திரம் சிபார்சு செய்யக்கூடிய எந்த நடத்தைக்கும் அவர்கள் ஒருக்காலும் இணங்க மாட்டார்கள். ராஜ்யங்களின் நலன்களைப்பற்றிய பிரமாதமான விசாலமான தீர்க்க தரிசனத்துடன் கூடிய

கண்ணோட்டம் என்பதை அவர்கள் அனுபவத்துக்குப் பொருந்தாத அசாத்தியக் கற்பனையாகக் கருதுகிறார்கள். அத்தகைய பார்வையை வலியுறுத்தும் கோட்பாடுகளை அவர்கள் பைத்தியக்காரனுடைய கற்பனையின் சஞ்சாரங்களாகக் கருதுகிறார்கள். கணக்கர்கள் அவர்களை அறிவிழந்தவர்களாகக் கணிக்கிறார்கள். விதூஷகர்களும் கோமாளிகளும் அவர்கள் உயர்வுக்கும் பெருமைக்கும் தகுதியற்றவர்களென்பதைச் சித்திரித்துக் காட்டி அவமானப் படுத்துகிறார்கள். அவர்களுடைய குறிக்கோள் அற்பத்தனமானது. அதை அடையும் முறை விவேகமானதாகவும் நிதானமானதாகவும் அவர்களுக்குப் புலப்படுகிறது."

கானன்ரோவிலும் லெடன்ஹால் தெருவிலும் உள்ள குமாஸ்தாக்களின் காரியாலயங்களுக்காக இந்திய மக்கள் வருஷத்துக்கு 160 ஆயிரம் பவுன்களை செலவழிக்கிறார்கள். பிரிட்டனை ஆளும் கூட்டமோ தமது இளைய குமாரர்களுக்கு உத்தியோகம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, இந்தியாவை யுத்தங்களில் ஈடுபடுத்துகின்றது. பண மூட்டைகளோ இந்தியாவை, அதிகத் தொகைக்கு ஏலம் கேட்பவனிடம் ஒப்படைக்கிறது. கீழ்ப்பட்ட அதிகார வர்க்கமோ அதன் நிர்வாகத்தை முடமாக்கி, தாம் தொடர்ந்து வாழ்வதற்கு அவசியமான நிபந்தனையாக உள்ள நிர்வாகக் கேடுகளைப் பாதுகாக்கிறது.

இந்த அமைப்பில் ஸர் சார்லஸ் வுட் மசோதா எத்தகைய மாறுதலையும் கொண்டுவரவில்லை. அது மந்திரிகளின் பொறுப்பை அதிகரிக்காமல், அவர்களுடைய அதிகாரத்தை அதிகரித்திருக்கிறது.

சுதேசி சமஸ்தானங்கள்*

லண்டன், செவ்வாய் ஜூலை 12, 1853

இந்தியக் மசோதாவின் ஷரத்துக்கள் ஒன்றன் பின் ஒன்றா நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. விவரத்தில் குறிப்பிடத்தக் அம்சம் ஒன்றுமில்லை. இந்தியாவில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதற்காகப் பாடுபடுகிறோமென்று உரிமை கொண்டாடுகிறவர்களின் முரண்பாடான நடத்தை மாத்திரமே கவனிக்கத்தக்கது. உதாரணமாக பார்லிமெண்ட் அங்கத்தினரான ஜோஸிலின் பிரபு இருக்கிறார். இந்தியாவுக்கு இழைக்கப்பட்ட தீங்குகளையும் கிழக்கிந்தியக் கம்பெனியின் கெட்ட ஆட்சியைப் பற்றியும் அடிக்கடி கண்டித்துப் பேசுவதையே ஒரு வகையில் தனது பிழைப்பாகக் கொண்டவர் அவர். அவருடைய திருத்தத்தின் சாராம்சம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? கிழக்

---

* நியூயார்க் டெயிலி டிரிப்யூன் 1853 ஜூலை 25-ல் பிரசுரித்த கட்டுரை.

கிழக்கிந்தியக் கம்பெனிக்குப் பத்து வருடக் குத்தகை கொடுக்க வேண்டுமென்பதே. நல்ல வேளையாக, அவர் மாத்திரமே அந்தத் திருத்தத்துக்கு ஆதரவாகவிருந்தார். "சீர்திருத்தத்தை"த் தொழிலாகக் கொண்ட இன்னொருவர் இருக்கிறார். அவர் பெயர் **ஜோஸ் ஹ்யூம்.** அவருடைய நீண்டகால சட்டசபை வாழ்க்கையில் அவர் எதிர்ப்பையே, மந்திரி சபையை ஆதரிக்கும் ஒரு குறிப்பிடத்தக்க முறையாக மாற்றுவதில் வெற்றியடைந்தவர். கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர்களின் எண்ணிக்கை 24-லிருந்து 18-க்குக் குறையக் கூடாதென்று அவர் பிரேரேபித்தார். பகுத்தறிவுக்கு உகந்ததாக ஒரு திருத்தம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றால் அது **பிரைட்** கொண்டுவந்த திருத்தமாகும். முதலாளிகள் கோர்ட் தேர்ந்தெடுக்கும் டைரக்டர்களுக்குக் கம்பெனியில் குறைந்த பட்சமாக எத்தனை பங்குகள் இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறதல்லவா? அந்த விதியிலிருந்து அரசாங்கத்தால் நியமிக்கப்படும் டைரக்டர்களுக்கு விலக்கு அளிக்க வேண்டுமென்பதே அவருடைய திருத்தம். கிழக்கிந்தியச் சீர்திருத்தச் சங்கம் பிரசுரித்திருக்கும் பிரசுரங்களைப் படியுங்கள். வார்ஸா முறைப்படி போர்பான் குடும்பத்தினர் முடியாட்சி ஏற்படவேண்டுமென்று கூறுகிறவர்களும் ஆர்லியன் குடும்பத்தினர் அரியாசனத்திலமர்ந்து மகுடம் தரிக்கவேண்டுமென்கிறவர்களும், நீலக் குடியரசுக்காரர்களும், சிவப்புக் குடியரசுக்காரர்களும், நெப்போலியன் போனபார்த்தியைப் பின்பற்றி, அவரிடம் அதிருப்தி அடைந்தவர்களும் ஒன்று சேர்ந்து நெப்போலியனுக்கு எதிராக ஒரு குற்றப் பத்திரிகை படித்துக் கேட்பதைப்போன்ற ஒரு உணர்ச்சியே, கிழக்கிந்தியச் சீர்திருத்தச் சங்கத்தின் பிரசுரங்களைப் படிக்கும் பொழுது நமக்கு ஏற்படுகிறது. இதுவரையில் அச்சங்கம் செய்துள்ள நன்மையெல்லாம், பொதுவாக, இந்திய விவகாரங்களைப் பற்றிப் பொதுவாழ்வில் அக்கரை ஏற்படுத்தியிருப்பதுதான். அதற்குமேல், பல முரண்பட்ட அபிப்பிராயங்களின் கதம்பமான அவர்களுடைய எதிர்ப்பு எதையும் செய்யமுடியாது. உதாரணமாக, இந்தியாவில் இங்கிலீஷ் நிலப்பிரபுக்கள் செய்துள்ள தீங்குகளை அவர்கள் தாக்குகிறார்கள்; ஆனால் இந்திய நிலப்பிரபுத்துவ சமஸ்தானாதிபதிகள் அழிக்கப்படுவதை எதிர்த்து அவர்கள் கண்டனம் செய்கிறார்கள்.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்கள் இந்தியாவில் காலடி எடுத்து வைத்த பிறகு, இந்தியாவைத் தம் வசம் வைத்துக் கொள்வதென்று அவர்கள் தீர்மானித்த பிறகு, அவர்களுக்கு பலாத்காரத்தின் மூலமோ அல்லது சூழ்ச்சியின் மூலமோ சுதேசி மன்னர்களின் அதிகாரத்தை அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை, புராதன கால ரோமானியர்கள் அவர்களுடைய கூட்டாளிகள் சம்பந்தமாக எந் நிலையில் இருந்தார்களோ, அதே மாதிரியான சூழ்நிலையில் சுதேசி சமஸ்தானாதிபதிகள் சம்பந்தமாக பிரிட்டிஷார் இருந்தார்கள். ஆகவே, அவர்கள் ரோமானியரின் அரசியல்

பாதையைப் பின்பற்றினார்கள். "எருதுகளைக் கொழுக்க வைப்பதைப்போல, விழுங்கப்படுவதற்கு அவர்கள் தகுதியாகும் வரையில், கூட்டாளிகளைக் கொழுக்க வைக்கும் முறை அது" என்று ஒரு இங்கிலீஷ் எழுத்தாளர் கூறுகிறார். புராதன கால ரோமாபுரியின் வழியில், சகாக்களை வென்ற பிறகு, கிழக்கிந்தியக் கம்பெனியார் அவர்களைத் தீர்த்துக் கட்ட ஒரு புது முறையைக் கையாண்டார்கள் கம்பெனியுடன் அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக, சுதேசி மன்னர்கள் இங்கிலீஷ்காரர்களிடமிருந்து அக்கிரம வட்டிக்கு ஏராளமாகக் கடன் வாங்கவேண்டியிருந்தது. அவர்களுடைய கவலையும் சங்கடமும் அதிகப்பட்சமாகப் பெருகிய சமயத்தில் கடன் கொடுத்தவன் கல்நெஞ்சக்காரனாகி, தயவு தாட்சண்யமில்லாமல் கடனை அடைக்கும்படி கோரினான். சமஸ்தானாதிபதிகள் சௌஜன்யமாகத் தமது பிரதேசங்களைக் கம்பெனிக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. அல்லது யுத்தம் தொடங்கவேண்டியிருந்தது. ஒன்று, தத்தம் ராஜ்யத்தை ஆக்கிரமிப்பவர்களிடம் உபகாரச் சம்பளம் பெறுகிறவர்களாக மாறவேண்டும் அல்லது துரோகிகளென்று பட்டம் சூட்டப்பட்டு ராஜ மகுடத்தை இழக்க வேண்டும். இப்பொழுது, சுதேசி சமஸ்தானங்கள் 699,961 சதுர மைல்கள் பரப்பளவில் வியாபித்திருக்கின்றன; அவற்றின் ஜனத்தொகை 52,941,263. அந்த சமஸ்தானாதிபதிகள் கம்பெனியின் கூட்டாளிகளாயிருந்த காலம் போய்விட்டது; இப்பொழுது அவர்கள் பல வகைப்பட்ட காபந்து பரிபாலன முறைகள், துணைப் பரிபாலன முறைகள் ஆகியவற்றுக்கு உட்பட்டு, பலவித நிபந்தனைகளுக்குட்பட்டு பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பினராக விளங்குகிறார்கள். இந்த முறைகளின் பொதுவான அம்சம் என்னவெனில், அவற்றின் மூலம், சுதேசி சமஸ்தானங்கள், தற்காப்பு உரிமையையும் பிற ராஜ்யங்களுடன் ஸ்தானிக உறவு கொள்ளும் உரிமையையும், கவர்னர் ஜனரலின் தலையீடு இல்லாமல் தமக்குள்ளேயுள்ள தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளும் உரிமையையும் தாமே இழந்து விடுகின்றன.

அவையனைத்தும், ரொக்கப் பணமாக அல்லது பிரிட்டிஷ் அதிகாரிகளின் தலைமையிலுள்ள ராணுவப் படைகளாகக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கப்பம் கட்டவேண்டும். சுதேசி சமஸ்தானங்களைக் கம்பெனியின் ராஜ்யத்தில் இறுதியாகச் சேர்த்துவிட வேண்டுமா கூடாதா என்பதைப் பற்றி இப்பொழுது உற்சாகத்துடன் வாக்குவாதம் நடந்து வருகிறது. அவ்வாறு செய்வது கொடுங்குற்றமென்று சீர்திருத்தக்காரர்கள் அதை வன்மையாகக் கண்டிக்கிறார்கள்; அவ்வாறு செய்வது அவசியமென்பதால் அதை மன்னித்து விடலாமென்கிறார்கள் முதலாளிகள்.

இந்தக் கேள்வியே தவறானது என்று நான் அபிப்பிராயப் படுகிறேன். சுதேசி ராஜ்யங்களைப் பொறுத்த வரையில், அவை கம்பெனியின் சம்ரட்சணைக்கு உட்பட்டதிலிருந்தே, நடைமுறையில்

இல்லாமலொழிந்து விட்டன. ஒரு நாட்டின் வருமானத்தை இரு சர்க்கார்களுக்கிடையே பங்கு போட்டால், தேசத்தின் வளங்கள் விரயமாகும்; இரண்டின் நிர்வாகங்களும் முடமாகும். இன்றைய முறைப்படி, சுதேசி சமஸ்தானங்களை சுதேசி நிர்வாகமும் கம்பெனி திணிக்கின்ற கப்பங்களும் அசாத்திய ராணுவ ஸ்தாபனங்களும் சேர்ந்து இரட்டைப் பேய்களாக அமுக்குகின்றன. மேற்பார்வைக்குச் சுதந்திரமாகத் தோன்றுவதற்கு சுதேசி சமஸ்தானங்கள் எந்த நிபந்தனைகளின் கீழ் அனுமதி பெற்றுள்ளனவோ, அந்த நிபந்தனைகள் நிரந்தரமாக க்ஷீணிப்பதற்கு வழி செய்யும் நிபந்தனைகளாகும்; முன்னேற்றம் என்பதை முற்றிலும் அசாத்தியமாக்கும் நிபந்தனைகளாகும். பிறர் தயவில் வாழும் சகல ஜீவன்களையும் போலவே, இந்த சுதேசி சமஸ்தானங்களுடைய வாழ்க்கைக்கும் ஸஜீவ பலவீனமே அடிப்படை விதியாகும். ஆகவே இப்பொழுதுள்ள பிரச்னை சுதேசி **ராஜ்யங்களைப்** பற்றியதல்ல; சுதேசி **சமஸ்தானாதிபதிகளையும்** ராஜ சபைகளையும் பற்றியதே. “இங்கிலாந்து தேசத்தின் மன்னன், பிரபுக்கள் ஆகியோரின் மூடப்பகட்டுகளை”க் கண்டிப்பவர்களே இந்தியாவின் நவாப்புகளும் ராஜாக்களும் ஜாகிர்தார்களும் வீழ்ச்சி அடைவதைக் குறித்துக் கண்ணீர் வடிப்பது விசித்திரமாயிருக்கிறதல்லவா? இந்த இந்திய நவாப்புகள், ராஜாக்கள், ஜாகிர்தார்கள் ஆகியோரில் மிகப் பெரும்பான்மையோருக்குப் பண்டைக்காலக் கீர்த்தி கூடக் கிடையாது. அவர்கள் அநேகமாக, ஆங்கிலேயர் சூழ்ச்சியால், மிகச் சமீப காலத்தில் அந்த ஸ்தானங்களைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அரபு நாட்டுக் கதைகளில் வரும் கொடுங்கோலர்களை யொத்த இவர்களுடைய கொடுங்கோன்மையை விடப் பரிகசிக்கத் தக்கதும், மதியீனமானதும் சிறுபிள்ளைத் தனமானதுமான கொடுங்கோன்மையை உலகத்தில் எங்குமே காண முடியாது. **வெல்லிங்டன் கோமகன், ஸர் ஜே. மால்காம், ஸர் ஹென்றி ரஸ்ஸல், எல்லன்பரோ பிரபு, ஜெனரல் பிரிக்ஸ்** ஆகியவர்களும் மற்றும் அதிகார பூர்வமான பிரதிநிதிகளும், இன்றைய நிலைமையே (அதாவது சுதேசி சமஸ்தானங்கள் அப்படியே) நீடிக்க வேண்டுமென்கிறார்கள். அதற்கு அவர்கள் என்ன காரணங்களைக் கூறுகிறார்கள்? ஏனென்றால், சுதேசிப் படைகள் தமது பலத்தைத் தமது ஐரோப்பிய எஜமானர்களுக்கு எதிராகத் திருப்புவதைத் தடுப்பதற்காக, அவை தம் தேசத்தினருடன் அற்பச் சண்டைகளில் ஈடுபட வேண்டும். மேலும், (மன்னர்களின்) சுயேச்சை அந்தஸ்து நீடிப்பதால், ஆங்கிலேயப் படைகளுக்கும் இடையிடையே வேலை கிடைக்கிறது. தவிர, இந்தப் பரம்பரைச் சமஸ்தானாதிபதிகள் ஆங்கிலேய யதேச்சாதிகாரத்தின் தாசானுதாசர்களாகப் பயன்படுகிறார்கள். இந்தியாவில் ராணுவச் சாகசங்களில் தேர்ச்சியடைந்த வீரர்கள் ஏராளமாக எப்பொழுதுமே இருந்து வந்திருக்கின்றனர்; இனியும் அபரிமிதமாக உண்டாவார்கள்; அத்தகையோரின் எழுச்சியை இந்த சமஸ்தானாதிபதிகள் தடை செய்கிறார்கள்; ஏனென்றால், சுயேச்சைப் பிரதேசங்கள், அதிருப்தியடைந்த சாமர்த்தியசாலிகள் அனைவருக்

கும் புகலிடங்களாகப் பயன்படுகின்றன. ஆக, சுதேசி மன்னர்கள், வெறுக்கத் தக்கதாயுள்ள தற்கால ஆங்கிலேய ஆட்சிக்கு ஆதரவுத் தூண்களாகவும், இந்திய முன்னேற்றத்துக்குப் பெரும் தடைகளாகவும் உள்ளனர். இது நிற்க, ஸர் **தாமஸ் மன்ரோவும் எல்பின்ஸ்டன்** பிரபுவும் உயர்ந்த அறிஞர்கள்; இந்தியமக்களிடம் உண்மையான அனுதாபம் கொண்டவர்கள். ஒரு சுதேசி பிரபுத்துவப் பகுதி இல்லாவிடில், சமூகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் சக்தியிருக்காதென்றும், பிரபுக்களின் ஆதிக்கத்தை அழித்தால் சமூகம் முழுமையும் உயர்ந்தோங்குவதற்குப் பதிலாகத் தாழ்ந்து சிறுமையடையுமென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். நேரடியான ஆங்கிலேயராட்சி சுதேசிகளைச் சகல நிர்வாக, ராணுவ உயர்பதவிகளிலிருந்தும் விலக்கி வைத்திருக்கும் வரையில், அவர்களுடைய கூற்று மெய்யாகவிருக்கலாம். தோற்கடிக்கப்பட்ட மக்களுக்குக் கொஞ்சம் சுயமகத்துவம் மிச்சமாக விட்டுவைக்க வேண்டுமானால், சுயமுயற்சியால் மகா புருஷர்கள் ஏற்பட இயலாதபொழுது, பிறப்பிலே உயர்ந்தோர் இருக்கவேண்டும். ஆங்கிலேயரின் ஆட்சியிலுள்ள பிரதேசங்களில் சுதேசி மக்களை உயர்பதவிகளிலிருந்து விலக்கி வைத்துள்ள விதிமுறை, சுயேச்சைப் பிரதேசங்கள் என்று வர்ணிக்கப்படுமிடங்களில் பரம்பரை மன்னர்களைப் பாதுகாப்பதன்மூலம் மட்டுமே பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதாரமாயுள்ள சுதேசி ராணுவத்துக்கு இந்த இரண்டு சலுகைகளில் ஒன்றை அளித்தாக வேண்டும். இந்தியப் பிரபுக்கள் மேல் பதவிகளை வகிப்பதற்குத் தகுதியுடையவரல்லவென்றும் சகல புதிய தேவைகளுக்கும் ஒரு புதிய வர்க்கத்தைச் சிருஷ்டிப்பது அவசியமென்றும் "கீழ்ப்பட்ட வர்க்கங்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று பேராவல் கொண்டிருப்பதைப் பார்த்தால், வேறு எந்த தேசத்திலும் செய்யமுடியாதஅளவுக்கு இந்தியாவில் இதைச் செய்ய முடியும்" என்றும் **காம்பல்** கூறுவதை நாம் நம்பலாமென்று நான் நினைக்கிறேன்.

சுதேசி மன்னர் குலங்கள் அழிந்துகொண்டிருப்பதால், சுதேசி மன்னர்களே வேகமாக மறைந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, சுதேசி மன்னர்கள் சுவீகாரமெடுத்து வார்ஸுகளை சிருஷ்டித்துக் கொள்வதை பிரிட்டிஷ் சர்க்கார் அனுமதித்து வருகிறது; அல்லது, வார்ஸு இல்லாத ராஜ்யங்களில் தமது கைப்பாவைகளுக்கு முடிசூட்டிப் பட்டாபிஷேகம் செய்து வருகிறது. மகத்துவத்துடன் விளங்கிய கவர்னர்-ஜனரலான **டெல்ஹவுஸி பிரபு**தான் முதன் முதலாக இந்த முறையைக் கண்டித்தார். சம்பவங்களின் இயற்கைப் போக்கை வேண்டுமென்றே எதிர்க்காமலிருந்தால், சுதேசி ராஜாக்களை ஒழிப்பதற்கு யுத்தங்களோ செலவோ தேவைப்பட்டிருக்காது.

மன்னர்களுக்கு 2,468,969 பவுன்கள் உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிறது. இந்திய வரிப் பணத்திலிருந்தே பிரிட்டிஷ் ஆட்சி

இந்தத் தொகையை மன்னர்களுக்குக் கொடுக்கிறது. அரிசிச் சோற்றை உண்டு வாழும் மக்களுக்கு, வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகள் மறுக்கப்பட்டுள்ள மக்களுக்கு, இந்த உபகாரச் சம்பளம் கடுஞ் சுமையாகும். அவமானச் சின்னமாகவும் நகைக்கத்தக்கதாகவும் ராஜ மகிமையை இழிவு படுத்திக் காட்டுவதற்கே அவர்கள் பயன்படுகின்றனர். அவர்களால் ஏற்படும் நற்காரியம் இது ஒன்றே. உதாரணமாக, தைமூரின் வழித் தோன்றலான முகலாயச் சக்கரவர்த்தியை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் வருஷத்துக்கு 120 ஆயிரம் பவுன்கள் உபகாரச் சம்பளம் பெறுகிறார். அவருடைய அரண்மனைச் சுவர்களுக்கு அப்பால், அவருடைய ஆணைக்கும் அதிகாரத்துக்கும் மதிப்பு இல்லை. அந்த அரண்மனைக்குள் சுயேச்சையாகவுள்ள இந்த மடமை மிகுந்த ராஜ குலம், குழி முயல்களைப் போலத் தன் இனத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. டெல்லி போலீஸ் இலாகாக் கூட ஒரு ஆங்கிலேயர் அதிகாரத்துக்கு அடங்கிச் செயலாற்றுகிறது; அந்த ஆங்கிலேயர் இந்தச் சக்கிரவர்த்தியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவரல்ல. இந்தியாவில் தேவதாசிகளின் உடையை, சரிகையால் சித்திரத் தையல் வேலை செய்த ஆடம்பர உடையை, அணிந்து சிங்காரித்துக் கொண்டு இந்தக் கிழச் சக்கரவர்த்தி, ஓரளவு உடல் சுருங்கியவராய், மஞ்சள் நிறத்தவராய், சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். அரசாங்க முக்கியத்துவம் வாய்ந்த சில சந்தர்ப்பங்களில், இந்த பகட்டாடைப் பொம்மைச் சக்கிரவர்த்தி விசுவாசிகளின் இதயங்களில் மகிழ்ச்சி பொங்கச் செய்வதற்காகக் காட்சியளிக்கிறார். அவருடைய வரவேற்பு நாட்களிலும், மக்களுக்கு அவர் தரிசனம் அளிக்கும் இதர சந்தர்ப்பங்களிலும், தரிசிப்பவர்கள் தங்க நாணயங்களைக் காணிக்கை செலுத்த வேண்டும். அவர் தலைப்பாகைகள், வயிரங்கள் முதலியவற்றைச் சன்மானங்களாக வழங்குவார். அந்த வயிரங்களை உற்று நோக்கினால், அவை சாமான்யக் கண்ணாடியில் செய்தவை என்பதையும், வைரக்கற்கள் மாதிரி இருக்க வேண்டுமென்பதற்காக, சாயம் பூசப்பட்டிருக்கின்றனவென்பதையும், அவை மோசமாகக் கட்டப்பட்டிருக்கிறபடியால், இஞ்சி ரொட்டி மாதிரி விண்டுவிடுகின்றனவென்பதையும் அவர்கள் காண்பார்கள்.

ஆங்கிலேய லேவாதேவிக்காரர்களும் ஆங்கிலேயப் பிரபுக்களும் ஒன்று சேர்ந்து, முடியாட்சியை இழிவு படுத்தும் கலையில் தேர்ச்சியடைந்திருப்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்; தாய் நாட்டில், சட்டத்துக்குட்பட்ட முடியரசு என்று சொல்லி, முடியரசனை அசக்தனாக்கினார்கள்; வெளி நாட்டில் (உ-ம்.—இந்தியாவில்) அதை ஆசாரப் பொருளாக ஒதுக்கிவிட்டார்கள். ஆனால் அங்கு இந்தக் காட்சியைக் கண்டு, தீவிரவாதிகள் கோபாவேசம் கொள்கிறார்கள்!

பிரிட்டிஷ் ஆட்சியால் இந்தியாவுக்கு ஏற்படவிருக்கும் விளைவுகள்*

லண்டன், வெள்ளிக்கிழமை, 1853, ஜூலை 22.

இந்தியாவைப் பற்றிய என்னுடைய குறிப்புக்களை இந்தக் கடிதத்தில் முடித்துவிட வேண்டுமென்று நான் உத்தேசித்திருக்கிறேன்.

இந்தியாவில் ஆங்கிலேயராதிக்கம் எப்படி ஏற்பட்டது? முகலாயச் சக்கிரவர்த்தியின் மேலதிகாரத்தை முகலாய ராஜப் பிரதிநிதிகள் ஒழித்தார்கள். ராஜப் பிரதிநிதிகளின் அதிகாரத்தை மகாராஷ்டிரர்கள் அழித்தார்கள். மகாராஷ்டிரர்களின் அதிகாரத்தை ஆப்கானியர்கள் நசுக்கினார்கள். எல்லோரும் எல்லோரையும் எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த சமயத்தில், ஆங்கிலேயன் பாய்ந்து வந்து தலையிட்டான்; எல்லோரையும் அடக்கி ஆள்வதற்கு அவனால் முடிந்தது. இந்தியர்கள் ஹிந்துக்களென்றும் முஸ்லீம்களென்றும் பிரிந்திருந்தார்கள்; அதுமட்டுமல்ல; ஒரு மக்கட் தொகுதிக்கும் இன்னொரு மக்கட் தொகுதிக்குமிடையே, ஒரு சாதிக்கும், மற்றொரு சாதிக்குமிடையே பிரிவினைச் சுவர் அமைந்திருந்தது. ஒருவரையொருவர் பொருட்படுத்தாமல் தன்னந்தனியாக வாழும் மரபிலிருந்து ஒருவிதச் சமநிலையை எய்தியிருந்த அமைப்பை அச்சமூகம் பெற்றிருந்தது. இத்தகைய ஒரு நாடும், இத்தகைய ஒரு சமுதாயமும், ஆக்கிரமிப்புக்கு இரையாக வேண்டுமென்பது முன்னாலேயே தீர்மானமான விஷயமல்லவா? இந்தியாவின் கடந்த கால வரலாற்றை நாம் அறியாவிட்டாலும், இன்றுகூட இந்தியாவின் செலவில் பராமரிக்கப்படும் ஒரு இந்திய ராணுவத்தைக் கொண்டே இந்தியாவின்மீதுள்ள ஆங்கிலேய ஆதிக்கம் பாதுகாக்கப்படுகிறதென்பது ஒரு ஆட்சேபிக்கப்பட முடியாத பேருண்மையல்லவா? ஆகவே, படையெடுப்புக்குப் பலியாகும் விதியிலிருந்து இந்தியா தப்ப முடியவில்லை. இந்தியாவின் கடந்த கால வரலாறு முழுமையுமே, அது மீண்டும் மீண்டும் படையெடுப்புக்குப் பலியான வரலாறுதான்; அந்தச் சரித்திரத்தில் வேறு ஒன்றுமில்லை. அந்த இந்திய சமூகத்துக்குச் சரித்திரம் எதுவுமில்லை; குறைந்த பட்சமாகக் கூறப்போனால், அறியப்பட்ட சரித்திரம் எதுவுமில்லை. இந்திய சரித்திரம் என்று நாம் சொல்வதெல்லாம், ஒருவர்பின் ஒருவராக இந்தியாவுக்கு வந்து, எதிர்க்காமலும் மாறுமலுமுள்ள இந்திய சமூகத்தின் செயலற்ற தன்மையின் அடிப்படையில் சாம்ராஜ்யங்களை அமைத்த ஆக்கிரமிப்பாளர்களின் சரித்திரம்தான். ஆகவே, இந்தியாவை ஜயிப்பதற்கு

---

* 1853 ஆகஸ்ட் 8-ல் 'நியூயார்க் டெயிலி டிரிப்யூன்' பிரசுரித்த கட்டுரை இது.

ஆங்கிலேயருக்கு உரிமையுண்டா இல்லையா என்பது பிரச்னை அல்ல; துருக்கியரும் பாரசீகரும் ருஷ்யரும் இந்தியாவைப் பிடித்துக்கொள்வதே ஆங்கிலேயர் இந்தியாவை வசப்படுத்திக்கொண்டதைவிட சிலாக்கியமென்று நாம் கருதுகிறோமா என்பதுதான் பிரச்னை.

இந்தியாவில் இங்கிலாந்து ஒரு இரட்டைத் தன்மை வாய்ந்த பணியை நிறைவேற்ற வேண்டும்—ஒன்று அழிப்பது, மற்றொன்று புனருத்தாரணம் செய்வது; அதாவது பழைய ஆசிய சமூகத்தை அழிப்பதும் ஆசியாவில் மேலைய சமூகத்தின் பௌதிக அஸ்திவாரங்களை இடுவதுமாகும்.

அரேபியர்கள், துருக்கியர்கள், தார்த்தாரி தேசத்தவர், முகலாயர்கள் ஆகியோர் ஒருவர்பின் ஒருவராக இந்தியாவைப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் சீக்கிரத்தில் ஹிந்து மயமாக்கப் பட்டார்கள். காட்டுமிராண்டிக்கால ஆக்கிரமிப்பாளர்களை, அவர்களுடைய பிரஜைகளின் மேம்பட்ட நாகரிகம் வென்றுவிடுமென்பது சரித்திரத்தின் அழியாச் சட்டமாகும். பிரிட்டிஷார்தான் ஹிந்து நாகரிகத்தைவிட உயர்ந்த நாகரிகத்தை உடைய ஆக்கிரமிப்பாளர்கள்; ஆகவே அவர்களை ஹிந்து நாகரிகம் அணுக முடியவில்லை. சுதேசி சமூகங்களைத் தகர்ப்பதன் மூலமாக, சுதேசித் தொழிலை வேரோடு பிடுங்கி எறிவதன் மூலமாக, சுதேசிச் சமூகத்தில் மகத்தானதாகவும் உயர்ந்ததாகவுமிருந்தவற்றையெல்லாம் தகர்த்துத் தரை மட்டமாக்கியதன் மூலமாக, அவர்கள் அந்த ஹிந்து நாகரிகத்தை அழித்தார்கள். "இந்தியாவில் அவர்கள் ஆட்சி புரிந்த வரலாற்றைக் கூறும் ஏடுகள் இந்த அழிவுக்கு அப்பால் வேறு ஒரு விஷயம் பற்றியும் குறிப்பிடவில்லை. அழிவுகளின் குவியலுக்கிடையே புனருத்தாரண வேலை மூச்சுவிடவில்லை. என்றாலும், புனருத்தாரண வேலை தொடங்கிவிட்டது.

முகலாயச் சக்கிரவர்த்திகளின் காலத்தில் ஒருபொழுதும் இல்லாத அளவுக்கு விரிவடைந்து உறுதிப்பட்டுள்ள இந்திய அரசியல் ஒற்றுமை அந்தப் புனருத்தாரணத்தின் முதல் அம்சமாகும். பிரிட்டிஷ் வாள் ஸ்தாபித்த ஒற்றுமை இது; மின்சாரத் தந்தி இந்த ஒற்றுமையைப் பலப்படுத்தி நீடிக்கச் செய்யும். பிரிட்டிஷ் அதிகாரிகள் ஒரு சுதேசி ராணுவத்தைத் திரட்டி பயிற்சி அளித்துள்ளனர்; இந்தியாவின் சுய விமோசனத்துக்கும், முதலில் வரும் எந்த அன்னியனுக்கும் இந்தியா இரையாவதைத் தடுத்து நிறுத்தவும், இந்த சுதேசி ராணுவம் அத்தியாவசியமானதாகும். ஆசிய சமூகத்தில் முதன் முதலாகச் சுதந்திரப் பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன; இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் பிறந்தவர்கள் (ஆங்கிலோ–இந்தியர்கள்) இந்தப் பத்திரிகைகளை முக்கியமாக நடத்துகிறார்கள்; இந்த சுதந்திரப் பத்திரிகைகள் புனர் நிர்மாணத்துக்காகப் பயன்படக்கூடிய ஒரு புதிய, குறிப்பிடத்தக்க சக்தியாகும். ஜமீன்தாரி, ரயத்துவாரி முறைகள் வெறுக்கத்

தக்கவையாக இருந்தாலும், அவை நிலத்தில் இரு வகைப்பட்ட தனிச் சொத்துரிமைகள் நிலவுவதைக் குறிக்கின்றன; நிலத்தில் தனி உரிமை ஏற்படுவது ஆசிய சமூகத்தின் மாபெரும் தேவையாகும். கல்கத்தாவில், இந்திய சுதேசிகளுக்கு வேண்டா வெறுப்புடன் அபூர்வமாகக் கல்வி போதிக்கப்படுகிறது; ஆங்கிலேயர் மேற்பார்வையில் போதனை பெறும் இவர்கள் மத்தியிலிருந்து ஒரு புதிய வர்க்கம் உருவாகிக் கொண்டிருக்கிறது; நிர்வாகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வர்க்கம் இது; ஐரோப்பிய விஞ்ஞானம் புகட்டப்பட்ட வர்க்கம் இது. நீராவியின் சக்தி இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் முறையான, துரிதமான போக்குவரத்தை நிறுவிவிட்டது; தென்கிழக்கு சமுத்திரத்தின் பிரதான துறைமுகங்களுடன் அதன் பிரதான துறைமுகங்களுக்குத் தொடர்பு ஏற்படுத்திவிட்டது; இவ்வாறாக, இந்தியாவின் தேக்கத்துக்கு அஸ்திவார விதியாகவிருந்த அதன் ஏகாந்த ஸ்தானத்தை நீராவியின் சக்தி அகற்றிவிட்டது. ரயில்களும் நீராவிக் கப்பல்களும் சேர்ந்து இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையேயுள்ள தூரத்தை எட்டு நாட்களில் பிரயாணம் செய்யக் கூடியதாக்கி, ஒரு காலத்தில் நம்பத்தகாத கதைகளுக்குப் பொருளாக விளங்கிய அந்நாடு உண்மையில் மேலைய உலகத்தின் பகுதியாக்கப்படும் நாள் தூரத்திலில்லை.

இந்தியாவின் முன்னேற்றத்தில் ஆங்கிலேய ஆளும் வர்க்கங்களுக்கு இதுவரையில் ஒரு அகஸ்மாத்தான, தற்காலிகமான, விதிக்கு விலக்கான சிரத்தையே இருந்து வந்திருக்கிறது. பிரபுக்கள் அதை ஜயிக்க வேண்டுமென்று விரும்பினார்கள்; பணமூட்டைகள் அதைக் கொள்ளையடிக்க வேண்டுமென்று விரும்பினார்கள்; மில் முதலாளிகள், இந்தியச் சரக்குகளைவிட மலிவாகத் தமது சரக்குகளை விற்க விரும்பினார்கள். ஆனால் இப்பொழுது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. இந்தியாவை மீண்டும் மீண்டும் உற்பத்தி செய்யும் தேசமாக மாற்றுவது தமக்கு மிகவும் முக்கியமென்பதை மில் முதலாளிகள் கண்டுகொண்டு விட்டனர்; ஆகவே, இந்தியாவுக்கு நீர்ப்பாசன வசதியும் உள்நாட்டுப் போக்குவரத்து வசதியும் அளிப்பது மிகவும் அவசியமென்பதை அவர்கள் அறிந்து விட்டனர். இப்பொழுது இந்தியாவில் வலைப்பின்னலைப்போல ரயில்வே இருப்புப் பாதைகளை அமைக்க அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் அதைச் செய்து முடிப்பது திண்ணம். அதன் விளைவுகளை மதிப்பிட முடியாது.

இந்தியாவில் அதன் பல்வேறு உற்பத்திப்பொருட்களைக் கொண்டு சென்று பரிவர்த்தனை செய்வதற்கு ஒரு சாதனமுமில்லை. அதனால் இந்தியாவின் உற்பத்தித் திறன் ஸ்தம்பித்திருப்பதென்பது பிரபலமான விஷயம். பரிவர்த்தனை சாதனங்களில்லாத காரணத்தால், இயற்கைச் செல்வத்தின் மத்தியில் சமுதாய வறுமையும் வெந்துயரும் மலிந்துகிடப்பதை இந்தியாவைப்

போல வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. "28 ராத்தல் தான்யம் காண்டிஷ் பகுதியில் 6 ஷில்லிங் முதல் 8 ஷில்லிங்வரை விற்றபொழுது பூனாவில் 64 ஷில்லிங் முதல் 70 ஷில்லிங் வரை விற்றது; களிமண் ரஸ்தாக்களை உபயோகிக்க முடியாத காரணத்தால், காண்டிஷிலிருந்து தான்யத்தைக்கொண்டுவர முடியவில்லை. அதனால் பூனாவின் வீதிகளில் ஜனங்கள் பஞ்சத்தால் செத்து மடிந்தார்கள்" என்று 1948-ல் காமன்ஸ் சபையின் விசாரணைக் கமிட்டிக்கு முன்னர் ருசுப்பிக்கப்பட்டது.

இருப்புப்பாதை அமைப்பதற்கான கரைகளைக் கட்டுவதற்கு மண் எடுக்கும்பொழுது, குளங்களை வெட்டமுடியும். வெவ்வேறு இருப்புப் பாதைகளுக்குப் பக்கத்தில் தண்ணீர் செல்வதற்கான வாய்க்கால்களை வெட்ட முடியும். இவ்வாறாக, இருப்புப் பாதைகளை அமைக்கும்பொழுதே விவசாயத்துக்கும் சுலபமாக உதவமுடியும்; கீழை நாடுகளின் விவசாயத்துக்கு அத்தியாவசியத் தேவையான நீர்ப்பாசனம் பெரிய அளவுக்கு விரிவடையும். தண்ணீர்ப் பஞ்சத்தால் ஸ்தலப் பஞ்சங்கள் அடிக்கடி சம்பவிப்பதைத் தடுக்க முடியும். மலைத்தொடர்களுக்கு அருகாமையிலுள்ள ஜில்லாக்களில்கூட பாசன நிலங்கள் மும்மடங்கு அதிகமாக வரி செலுத்துகின்றன என்பதையும், அதே பகுதியிலுள்ள பாசனமில்லாத நிலங்களைவிடப் பாசன நிலங்கள் பத்து அல்லது பன்னிரண்டுமடங்கு அதிகமாக லாபம் பெறுகின்றன என்பதையும் நாம் நினைவில் கொண்டால், நீர்ப் பாசனம் அமையும் கோணத்திலிருந்து ரயில்பாதை அமைப்புக்குள்ள முக்கியத்துவம் நிதர்சனமாகும்.

ராணுவ ஸ்தாபனச் செலவைக் குறைப்பதற்கும் ரயில் போக்குவரத்து உதவும். காமன்ஸ் சபையின் தனிக்கமிட்டி முன்னால், வில்லியம் கோட்டையின் டவுன் மேஜரான கர்னல் **வாரன்** கூறினார் :

"தேசத்தின் தொலை தூரப் பகுதிகளிலிருந்து தகவல்கள் கிடைப்பதற்குப் பல நாட்களாகின்றன; பலவாரங்களும் ஆகின்றன. இந்நிலை மாறி, மணிக்கணக்கில், தகவல்கள் கிடைத்துவிடும். அதைப்போலவே குறுகிய காலத்தில், துருப்புகளையும் அவற்றின் தேவைப்பொருட்களையும் உத்திரவுகளுடன் அனுப்பமுடியும். இவற்றின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தி மதிப்பிட முடியாது. இப்பொழுதிருப்பதைவிட அதிக தூரத்தில் உள்ள இடங்களில் அதிகமாக ஆரோக்கிய வசதி பெற்றுள்ள இடங்களில் படைகளை நிறுத்திவைக்க முடியும். இதன் மூலம், வியாதியால் ஏற்படும் உயிர் நஷ்டத்தைப் பெரிய அளவுக்குத் தவிர்க்க முடியும். பல்வேறு இருப்பு நிலையங்களில் ராணுவத்தின் தேவைப் பொருட்கள் இன்றைய அளவுக்குச் சேகரித்து வைக்கவேண்டாம்! ஆகவே காலப்போக்கில் க்ஷீணமடைவதாலும், சீதோஷ்ண நிலையின் காரணமாக அழிந்துபோவதாலும் ஏற்படும் பொருள்

நஷ்டத்தைத் தவிர்க்க முடியும். படைகள் எந்த அளவுக்குக் காரியத்துக்குச் சாதகமான நிலையில் உள்ளனவோ, அந்த அளவுக்கு அவற்றின் தொகையைக் குறைக்க முடியும்."

கிராம சமூகங்களின் ஸ்தல ஸ்தாபன அமைப்பும் பொருளாதார அடிப்படையும் தகர்ந்துவிட்டன என்பதை நாம் அறிவோம். ஆனால் அந்த சமூகங்கள் தமது ஜீவதாதுவை இழந்த பிறகும், அவற்றின் மிகமோசமான அம்சம் மறையவில்லை; அதாவது, ஒரே அச்சில் வார்த்தெடுக்கப்பட்டதாகவும் ஒன்றோடொன்று தொடர்பில்லாமலும் அணு அணுவாகச் சிதறி நிற்கும் அம்சம் ஒழியவில்லை.

இந்தியாவில், கிராமங்கள் தன்னந்தனியாக இருந்ததால், சாலைகள் அமையவில்லை, சாலைகள் இல்லாத காரணத்தால், கிராமத்தனிமை நீடித்தது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில், இதர கிராமங்களுடன் உறவில்லாமல், சமூக முன்னேற்றத்துக்கு அத்தியாவசியமான ஆசைகளும் முயற்சிகளுமில்லாமல், வரையறுக்கப்பட்ட குறைந்த சௌகரியங்களுடன் கிராம சமூகம் வாழ்ந்தது. இந்தக் கிராமங்களின் மமதை மிகுந்த **ஜடத்துவத்தை** பிரிட்டிஷார் அழித்துவிட்டார்கள். ஆகவே, போக்குவரத்துக்கும் உறவுக்கும் புதிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தேவையை ரயில்வே அமைப்புப் பூர்த்தி செய்யும். மேலும்,

" இந்தியாவில் வாழையடி வாழையாகச் சம்பளம் பெற்று வேலை செய்து வரும் கிராமக் கைத்தொழிலாளர் முதலில் தமது திறமைகளைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கும், அதன் பிறகு அவற்றின் குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கும் அவசியமான இதர நாடுகளின் யந்திர சாதனங்களைப் பற்றிய ஞானத்தையும் அந்த யந்திர சாதனங்களைப் பெறும் முறைகளையும் ரயில்வே அமைப்பு, அதன் மூலம் பாதிக்கப்படும் கிராமங்களுக்குத் தெரிவிக்கும். ரயில்வே அமைப்பின் பலன்களில் இதுவும் ஒன்று."
(சாப்மன், இந்தியாவின் பருத்தியும் வர்த்தகமும்.)

தங்களுடைய தொழில்களுக்குக் குறைந்த செலவில் பருத்தியையும் இதர மூலப் பொடுள்களையும் பெறவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் ஆங்கிலேய மில்முதலாளிகள் இந்தியாவில்இருப்புப் பாதைகளை அமைக்க விரும்புகிறார்களென்பதை நான் அறிவேன். ஆனால் இரும்புக் கனிகளும் நிலக்கரியுமுள்ள ஒரு தேசத்தின் போக்குவரத்தில் யந்திர முறையைப் புகுத்தினால் அந்த தேசத்தில் யந்திரத் தொழில் விஸ்தரிப்பதை உன்னால் தடுக்க முடியாது. ஒரு பரந்த தேசம் முழுவதும் வலைப்பின்னல்போல அமைந்துள்ள ரயில் போக்குவரத்து சரிவர நடந்து வரவேண்டுமானால், ரயில் போக்குவரத்தின் உடனடியான அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான தொழில்களைத் தொடங்காமல் அது சாத்தியமில்லை. இதிலிருந்து ரயில்வேக்களுடன் உடனடியான தொடர்பில்லாத தொழில்களும் யந்திர மயமாகித் தீரும். ஆகவே

இந்தியாவில் ரயில் அமைப்பு நவீன யந்திரத் தொழிலின் முன்னோடியாக விளங்கும். முற்றிலும் புதிய உழைப்புக்குத் தம்மைத் தயாரித்துக் கொள்வதற்கும், தேவையான யந்திர நுணுக்க அறிவைப் பெறுவதற்கும் இந்தியர்களை பிரிட்டிஷ் அதிகாரிகள் அனுமதிப்பதால், இது மேலும் உறுதிப்படுகிறது. கல்கத்தா தங்க சாலையில் நீராவியால் ஓட்டப்படும் யந்திரங்களில் பலவருஷங்களாக வேலை செய்துவரும் சுதேசி என்ஜினியர்களுடைய திறமைகளும் நிபுணத்துவமும் நான் கூறுவதை நிரூபிக்கிறது. ஹரித்வார் நிலக்கரி ஜில்லாக்களில் பல நீராவி என்ஜின்களில் வேலை செய்யும் சுதேசிகளும், இதர உதாரணங்களும் நான் கூறுவதை நிரூபிக்கின்றன. காம்பல் கிழக்கிந்தியக் கம்பெனியின் துரபிமானங்களைப் பெரிய அளவுக்குக் கிரகித்துக் கொண்டவர். அவர்கூட, இந்திய மக்களுக்கு மகத்தான தொழிலாக்க சக்தி இருக்கிறதென்றும், அவர்கள் மூலதனத்தைச் சேகரிப்பதற்கு முழுத் தகுதி உடையவர்களென்றும், திட்டமான சிந்தனைத் தெளிவு படைத்தவர்களென்றும் புள்ளி விவரங்கள், பௌதீக நுட்ப விஞ்ஞானங்கள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ச்சி அடையும் இயற்கைத் திறமை படைத்தவர்களென்றும் கூறுகிறார். அவர்கள் கூர்மையான அறிவும் விவேகமும் உள்ளவர்களென்றும் அவர் கூறுகிறார். இந்திய முன்னேற்றத்துக்கும் இந்தியத்திறன் அபிவிருத்திக்கும் தீர்மானமான தடை மதில்களாக விளங்குவதும் இந்தியச்சாதிகளின் அடிப்படையில்) எழுந்துள்ளதுமான பரம்பரை வேலைப் பிரிவினைகளை, ரயில்வே அமைப்பின் விளைவாக உருவாகப் போகும் நவீன யந்திரத் தொழில் ஒழித்துவிடும். ஆங்கிலேய முதலாளி வர்க்கம் கட்டாயப்படுத்தப்பட்டுச் செய்யக் கூடியதெல்லாம், பொது மக்களுடைய சமுதாய விடுதலையை அளிக்காமலும், அவர்களுடைய சமூக நிலைமைகளில் உருப்படியான அபிவிருத்தியும் செய்யாமலுமிருப்பதுதான். இந்தச் சமூக நிலைமை, உற்பத்தித் திறனின் வளர்ச்சியை மாத்திரம் பொறுத்ததல்ல; வளர்ந்திருக்கும் உற்பத்தித் திறனால் பெறப்படும் பொருட்களைப் பொதுமக்கள் அனுபவிப்பதையும் பொறுத்திருக்கிறது. ஆனால் இந்த இரண்டுக்கும் தேவையான பௌதீக அடிப்படையை முதலாளி வர்க்கம் உண்டாக்கத் தவறாது. இதைவிட அதிகமாக, முதலாளி வர்க்கம் எங்காவது செய்திருக்கிறதா? தனி நபர்களையும் ஜனங்களையும் ரத்தக் களரியிலும் சகதியிலும் துன்பத்திலும் இழிவிலும் அல்லல் படச் செய்யாமல் எங்காவது முதலாளி வர்க்கம் முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா?

பிரிட்டனில் இன்றுள்ள ஆளும் வர்க்கங்கள் ஒழிந்து, ஆலைத் தொழிலாளி வர்க்க அரசாட்சி ஏற்படும் வரையில் அல்லது ஆங்கிலேய நுகத்தடியைப் பூரணமாகத் தூக்கி எறியுமளவுக்கு இந்தியர்களுக்குச் சக்தி ஏற்படும் வரையில், பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம் சிந்திச் சிதறிய முறையில் தூவியுள்ள புதிய சமூக அம்சங்களின் பலன்களை இந்தியர்கள் அனுபவிக்க முடியாது. எப்படி

யிருந்தாலும், பணிந்து போகும் பொழுதுகூட அதற்கு ஈடுசெய்யும் முறையில் அமைதியான பெருந் தன்மையுடன் துலங்கும் மக்கள், இயல்பாகவே களைத்துத் தளர்ந்திருந்த போதிலும், தமது தைரியத்தின் மூலம் பிரிட்டிஷ் அதிகாரிகளை பிரமிக்கச் செய்த மக்கள் வாழும் அந்த மகத்தான இனிய தேசம், நமது மொழிகளுக்கும் நமது மதங்களுக்கும் பிறப்பிடமான அந்த தேசம், புராதன ஜர்மானியர்களை **ஜாட்டுகள்**[*] மூலமாகவும், புராதனக் கிரேக்கர்களை பிராம்மணர்கள் மூலமாகவும் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்தத் தேசம், ஏறக்குறைய தூரத்திலுள்ள கட்டத்தில் புனருத்தாரணம் செய்யப்படுவதைப் பார்ப்போமென்று நாம் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

சில முடிவான வர்த்தைகளைக் கூறாமல் நான் இந்தியா என்ற விஷயத்திடமிருந்து விடைபெற்றுக் கொள்ளமுடியாது.

தாய் நாட்டில் கண்ணியமான வடிவங்களை மேற்கொள்ளும் முதலாளித்துவ நாகரிகம் காலனி நாடுகளில் அம்மணமாகக் காட்சியளிப்பதால், அதன் ஆழ்ந்த கபடமும் இயல்பான கொடுமையும் நம் கண்களுக்கு முன் அம்பலமாகி நிற்கிறது. இவர்கள் சொத்துரிமையின் காவலர்களாம்! ஆனால் வங்காளத்திலும் சென்னையிலும் பம்பாயிலும் ஏற்பட்டவற்றைப் போன்ற விவசாயப் புரட்சிகளை[†] எந்தப் புரட்சிக் கட்சியாவது எப்பொழுதாவது தோற்றுவித்திருக்கின்றதா? அந்தப் பெருங்கொள்ளைக்காரன் கிளைவ் பிரபுவே கூறியதைப்போல இந்தியாவில் சாமான்ய லஞ்சம் அவர்களுடைய பேராசைக்கு ஒத்துவராத பொழுது, அவர்கள் மிகக்கொடிய முறைகளில் கொள்ளையடிக்கவில்லையா? தேசியக்கடன் மீறக்கூடாத புனிதத்தன்மை வாய்ந்ததென்று அவர்கள் ஐரோப்பாவில் பிதற்றியபொழுதே, இந்தியாவில் கம்பெனியின் நிதியிலேயே தமது சொந்தப் பணத்தைப் போட்டுவைத்திருந்த ராஜாக்களின் பங்கு லாபத்தை அவர்கள் பறிமுதல் செய்யவில்லையா? "நமது பவித்திரமான மதத்தை"ப் பாதுகாப்பதற்காகவென்று போலிச் சமாதானம் கூறிக்கொண்டு, அவர்கள் பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்துப் போராடியபொழுதே, இந்தியாவில் கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்வதை அவர்கள் தடை செய்யவில்லையா? ஒரிஸ்ஸாவிலும் வங்காளத்திலுமுள்ள கோயில்களுக்கு வந்து குவியும் தீர்த்த யாத்திரைப் பிரயாணிகளிடமிருந்து பணம்

---

[*] வடமேற்கு இந்தியாவில், இந்திய—ஆரிய குலத்தில் வந்த விவசாயிகள்.

[†] பிரிட்டிஷ் ஆட்சி கிராம சமூக அமைப்பை அழித்தது; அத்துடன் விவசாயத்துக்கும் விவசாயிகளின் குடிசைத் தொழிலுக்குமிருந்த ஒற்றுமையையும் தகர்த்தது. ஆசிய சமூகத்தின் பெருந் தேவையான தனிச் சொத்துரிமையை நிலத்தில் அமுலுக்குக் கொண்டு வந்தது. இந்தக் கருத்தில்தான் பிரிட்டன் ஒரு விவசாயப்புரட்சியைச்சாதித்திருப்பதாக மார்க்ஸ் கூறுகிறார்—மொ-ர்.

சம்பாதிப்பதற்காக, * ஜகன்னாதர் கோயிலில் நடைபெறும் கொலை வியாபாரத்தையும் விபச்சார வர்த்தகத்தையும் அவர்கள் மேற்கொள்ளவில்லையா? இவர்கள்தான் "சொத்து, ஒழுங்கு, குடும்பம், மதம்" ஆகியவற்றின் காவலர்கள்!

பரப்பளவில் ஐரோப்பாவை ஒத்த ஒருதேசம், 15 கோடி ஏக்கராக்கள் கொண்ட தேசம் இந்தியா. இத்தகைய பெரிய தேசத்தில் ஆங்கிலேயத் தொழிலால் தாறுமாறான விளைவுகள், நாசகரமான விளைவுகள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கமுடியும். ஆனால் தற்பொழுது நிறுவப்பட்டுள்ள பொருளுற்பத்தி அமைப்பு முழுமையின் ஸஜீவ விளைவுகளே அவை என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்தப் பொருளுற்பத்தி மூலதனத்தின் சர்வாதிகார ஆட்சியை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் ஒரு சுயேச்சையான சக்தியாக இருப்பதற்கு மூலதனம் மையப்படுத்தப்படவேண்டும். அதனால் உலக மார்க்கெட்டுகளில் ஏற்பட்டுள்ள நாசகரமான விளைவு, ஒவ்வொரு நாகரிக நகரத்திலும் இப்பொழுது செயலாற்றும் அரசியல் பொருளாதாரத்தின் இயல்பான ஸஜீவ விதிகளையே மிகப்பெரிய அளவில் வெளிப்படுத்துகிறது. முதலாளித்துவக் காலகட்டம், புதிய உலகத்தின் பௌதிக அடிப்படையைப் படைக்கவேண்டும்—ஒருபுறம், மனிதகுலம் பரஸ்பரம் நம்பி நிற்பதை அடிப்படையாகக் கொண்ட பிரபஞ்ச உறவுகளும் அவற்றை அடைவதற்கான வகைவழிகளும்: மறுபுறம் மனிதனின் உற்பத்தித் திறன்களுடைய வளர்ச்சியும், பொருளுற்பத்தியை இயற்கையின்மீது உள்ள விஞ்ஞானத்தின் ஆதிக்கமாக மாற்றுவதும் ஆகும். ஒரு புதிய உலகத்துக்குத் தேவையான இந்த பௌதிக நிலைமைகளை பூமியின் மேற்பரப்பை பூபௌதிகப் புரட்சிகள் சிருஷ்டித்திருப்பதைப்போல, முதலாளித்துவத் தொழிலும் வர்த்தகமும் சிருஷ்டிக்கின்றன. ஒரு மகத்தான சமுதாயப் புரட்சி, முதலாளித்துவ சகாப்தத்தின் விளைவுகளான உலக மார்க்கெட்டையும் நவீன உற்பத்தித் திறன்களையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரும்பொழுது, அதிக வளர்ச்சியடைந்த மக்களின் பொதுவான கட்டுப்பாட்டுக்கு அவற்றை உட்படுத்தும்பொழுதுதான், மனித முன்னேற்றமானது, கொல்லப்பட்டவர்களின் மண்டையோடுகளிலிருந்து மட்டுமே அமிர்தத்தைப் பருகும் விகாரமான பயங்கரமான பண்டைக்கால விக்கிரகத்தை ஒத்திருப்பதற்கு முடிவு ஏற்படும்.

---

*ஜகன்னாதர் கோயில் ஒரிஸ்ஸா மாகாணத்தில் பூரியில் உள்ளது. விழா நாட்களில், உற்சவ விக்கிரகத்தைத் தேரில் வைத்து வீதிகளில் வலம்வரும் பொழுது, பல பக்தர்கள் அந்தப் புனிதமான தேரின் சக்கரங்களின் கீழ் விழுந்து அரைக்கப்பட்டு இறந்தனர். அந்தக் கோயில் புரோகிதர்கள் ஆசாரத்தின் பெயரால் விபச்சாரமடங்களை நடத்தினார்கள். உண்மையில் அது ஒரு வருமான வழியே. இந்த வருமானத்தில் பகுதி பிரிட்டிஷாருக்குக் கப்பமாகக் கிடைத்தது.

இந்தியப் பொதுவுடைமைப் பொருளாதாரம்

1

அலெக்சாண்டர் காலத்திலேயே, இந்தியாவில் கூட்டுவிவசாயத்துடன் கூடிய குடும்ப சமூகம் இருந்ததாக, **நியர்சஸ்**[1] குறிப்பிடுகிறார். பஞ்சாலத்தில் அதே பிரதேசத்திலும், வடமேற்கு இந்தியா முழுவதும், அது இன்றும் நிலவுகிறது, காகஸஸ் பிரதேசத்தில் அது இருந்ததை **காவலவஸ்கி**[2]யே ஸ்தாபித்திருக்கிறார்.

அல்ஜீரியாவில் அது இன்றும் **காபிலிகள்**[3] மத்தியில் காணப்படுகிறது. அமெரிக்காவில்கூட அது இருந்ததாகக் கூறப்படுகிறது. புராதன **மெக்ஸிகோவின்** இந்தியக் குடும்பங்களை **ஸூரிடா**[4] வர்ணிக்கிறாரே, அந்தக் குடும்பங்கள் அந்தமாதிரியானவை எனக் கூறப்படுகிறது. ஆனால் **பெரு** பிடிபட்ட பொழுது அங்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒருதடவை, சாகுபடி நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் முறையும் அத்துடன் தனிப்பட்டவர், வேளாண்மையும் இருந்ததென்பதைக் **கூனே**[5] தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். **"குடும்பத்தின் தோற்றம்"**—**ஏங்கல்ஸ்.**

2

இந்த இந்திய சமூகங்கள் மிகமிகப் புராதனமானவை; அவை சின்னஞ்சிறு சமூகங்களாகும், அவற்றில் சில இந்நாள்வரை நீடித்து வந்திருக்கின்றன. நிலம் சமூகத்தின் பொதுச் சொத்தாக விருப்பதையும், விவசாயமும் கைத்தொழில்களும் ஒன்றோ

---

[1] **நியர்சஸ்:** அலெக்சாண்டரின் தோழன். அவருடைய கப்பற்படையின் தளபதி. இந்தியாவில் அலெக்சாண்டர் பிரவேசித்து நடத்திய போராட்டங்களைப் பற்றி அவர் எழுதியுள்ள குறிப்புகளின் சிலபகுதிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2] **காவலவஸ்கி:** (1851—1916) ருஷியாவின் சட்ட நிபுணர், சரித்திராசிரியர், சமூதாய இயல் விற்பன்னர், அரசியல்வாதி. அவர் 1890-ல் எழுதியுள்ள ஆராய்ச்சி நூலையே இங்கு எங்கல்ஸ் குறிப்பிடுகிறார்.

[3] **காபிலிகள்:** வட ஆப்ரிக்காவின் பூர்வ குடிகள்,

[4] **ஸூரிடா:** பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஸ்பெயின் தேசத்துச் சரித்திராசிரியர், எழுத்தாளர். மெக்ஸிகோவைப் பிடித்தவர்களில் ஒருவர். மெக்ஸிகோவில் பல நிர்வாகப் பதவிகளை வகித்தார்.

[5] **கூனே:** ஜெர்மானிய சோஷலிஸ்ட் தலைவர், பண்டைக்கால சமூக வரலாற்றைப்பற்றிப் பல புத்தகங்கள் எழுதியுள்ளார்.

[6] **குடும்பத்தின் தோற்றம்:** குடும்பம், தனி உடைமை, அரசு ஆகியவை தோன்றிய வரலாற்றை விமர்சிக்கும் ஆராய்ச்சி நூல். மார்க்ஸீயத்தின் மூல நூல்களில் ஒன்று.

டொன்று சேர்ந்திருப்பதையும், மாற்ற முடியாதவகையில் வேலைப் பிரிவினை ஏற்பட்டிருப்பதையும் இந்த சமூகங்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. பூரணமாக வகுக்கப்பட்டுத் தயாராயுள்ள இதே திட்டம், புதிதாகத் துவங்கும் சமூகங்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது. நூறு ஏக்கராக்கள் முதல் பல்லாயிரம் ஏக்கராக்கள் வரை பல்வேறு பரப்பளவுகளில் இந்தச் சமூகங்கள் வாழ்கின்றன; அவை ஒவ்வொன்றும் தத்தம் சுயதேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துகொள்கின்றன. உற்பத்தியாகும் பொருட்களில் பெரும் பகுதி, சமூகத்தின் நேரடியான உபயோகத்துக்கே பயன்படுகின்றன; அவை விற்பனைச் சரக்குகளாக மாறுவதில்லை. ஆகவே இந்தக் கிராமச் சமூகங்களில் நடைபெறும் உற்பத்தி, விற்பனைச் சரக்குகளின் பரிவர்த்தனை அடிப்படையில் இந்திய சமூகம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கும் வேலைப் பிரிவினையைச் சார்ந்திருக்கவில்லை. (கிராம சமூகங்களின் பொருளுற்பத்தியில் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் மிச்சப்படும்) உபரிப் பொருட்கள்தான் விற்பனைச் சரக்குகளாகின்றன. அவற்றிலும் ஒரு பகுதி பொருள் வரியாக அரசாங்கத்தின் கைக்கு எட்டிய பிறகே விற்பனைச் சந்தைக்கு வருகின்றன; உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் ஒரு பகுதி தொன்றுதொட்டு, பொருள் வரியாக ராஜாங்கத்துக்குக் கிடைத்து வந்திருக்கிறது. இந்தப் புராதன சமூகங்களின் உள்ளமைப்பு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு தினுசாக உள்ளது. சிக்கலே இல்லாததும் சுலபமானதுமான அமைப்பைப் படைத்துள்ள சமூகங்களில், நிலச்சாகுபடி பொதுவில் நடைபெறுகிறது; உற்பத்தியாகும் தானியங்களை சமூக உறுப்பினர்கள் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். அதே சமயத்தில், ஒவ்வொரு குடும்பமும் நூல் நூற்றலையும் துணி நெய்தலையும் உப தொழில்களாகக் கொண்டிருக்கின்றன. இவ்வாறாக, ஒரே வேலையைச் செய்துகொண்டிருக்கும் ஜனங்களுடன் கூடவே, கீழ்க்கண்டவர்களும் சமூகத்தில் இருக்கின்றனர்:—சமூக நாட்டாண்மைக்காரர் வரி வசூலிக்கிறார், போலீஸ் வேலை செய்கிறார், நீதிபதியாக விளங்குகிறார். கணக்கன் உழவு சாகுபடி சம்பந்தமான சகல கணக்குகளையும் பதிவு செய்து நிர்வகிக்கிறார். இன்னொரு அதிகாரி குற்றவாளிகள்மீது வழக்கு நடத்துவதுடன், அவ்வூர் வழியே பிரயாணம் செய்யும் அயலூரார்க்காரர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்; அவர்கள் அடுத்த கிராமம் செல்லும்வரை துணை செல்கிறார். காவற்காரர் அக்கம்பக்கத்துச் சமூகங்கள் ஆக்கிரமித்துவிடாமல் கிராம எல்லைகளைக் கண்காணித்து வருகிறார்; தண்ணீர் மேஸ்திரி பொதுக் குளங்களிலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் விநியோகம் செய்கிறார். பிராம்மணர் மதச் சடங்குகளை நடத்துகிறார்; பள்ளிக்கூட உபாத்தியாயர் பாலர்களுக்கு மணல்மீது எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கிறார். பஞ்சாங்கப் பிராம்மணர் அல்லது சோதிடர், விதைப்புக்கும் அறுவடைக்கும் இதர விவசாய வேலைகளுக்கும் நல்ல நாட்களைப் பார்த்துச் சொல்கிறார்.

கெட்ட நாட்களைச் சொல்லி எச்சரிக்கிறார்; விவசாயக் கருவிகளனைத்தையும் செய்தவற்கும் பழுது பார்ப்பதற்கும் ஒரு கொல்லரும் ஒரு தச்சரும் உள்ளனர். கிராமத்துக்குத் தேவையான மண் பாண்டங்களைச் செய்து தருவதற்கு ஒரு குயவன் இருக்கிறார். அம்பட்டர், துணிகளை வெளுத்துத் தருவதற்காக ஒரு சலவைத் தொழிலாளி, தட்டார் ஆகியோரும் இருக்கிறார்கள். சிற்சில கிராம சமூகங்களில் கவிராயரே தட்டாராகவுமிருப்பர்; இதர சமூகங்களில் கவிராயரே பள்ளிக்கூட உபாத்தியாயராகவும் இருப்பார். இந்த டஜன் நபர்களும் சமூகத்தின் கூட்டுச் செலவில் பராமரிக்கப்படுகிறார்கள். ஜனத்தொகை அதிகரித்தால், இதே வடிவத்தில், யாரும் குடியேறியிராத இடத்தில், ஒரு புதிய சமூகம் ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த அமைப்பு முழுமையும், ஒரு முறையான வேலைப் பிரிவினையைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது; ஆனால் பலர் வேலை செய்யும் கைத்தொழிற்சாலைகளில் அத்தகைய வேலைப் பிரிவினையை அமுல் நடத்த முடியாது. ஏனென்றால் கொல்லர், தச்சர் முதலியோரின் 'மார்க்கெட்' மாறுவதேயில்லை; அதிகப்பட்சமாகப் போனால், அவர்கள் கிராம அளவுகளுக்குத் தக்கபடி, ஒருவருக்குப் பதிலாக இரண்டு அல்லது மூன்று நபர்களாக விருப்பார்கள். சமூத்தின் வேலைப் பிரிவினையை ஒழுங்குபடுத்தும் விதி இயற்கைச் சட்டத்தின் ஆட்சேபிக்கப்பட முடியாத அதிகாரத்துடன் செயலாற்றுகிறது; அதே சமயத்தில் கொல்லன், தச்சன் முதலான ஒவ்வொரு தனிப்பட்ட வினைஞனும், தன் கைத்தொழிலின் சகல நடவடிக்கைகளையும் பரம்பரை வழியில் தன் பட்டறையில் நடத்துகிறான்; தனக்குமேல் உள்ள அதிகாரக்கருவியாக அவன் எதையும் அங்கீகரிப்பதில்லை. தன் தேவைகளைத்தானே பூர்த்தி செய்து கொள்ளும் இந்தச் சமூகங்கள் இதே உருவத்தில் இடைவிடாமல் பெருகிக் கொண்டிருக்கின்றன; தற்செயலாக அழிக்கப்பட்டாலும் அதே இடத்தில் அதே பெயருடன் அவை மீண்டும் முளைக்கின்றன. இந்த உற்பத்தி ஸ்தாபனத்தின் சிக்கலற்ற தன்மையில், சுலபமான தன்மையில்தான் ஆசிய சமூகங்களுடைய சிரஞ்சீவித் தன்மையின் ரகசியம் அடங்கியிருக்கிறது. ஆசிய ராஜ்யங்கள் இடைவிடாமல் அழிந்து போய்க்கொண்டும் ஆர்த்தெழுந்து கொண்டும் இருப்பதற்கும், ஆசிய அரச குலங்கள் இடைவிடாமல் மாறிக் கொண்டிருப்பதற்கும் நேர்மாறாக, ஆசிய சமூகங்கள் அழியாமலும் மாறுதல் அடையாமலும் பிறந்த மேனியாகத் திகழ்கின்றன. அரசியல் வானத்தைச் சூழும் கரும்புயல் மேகங்களால் சமூக அமைப்பின் பொருளாதார அம்சங்கள் கொஞ்சமும் பாதிக்கப்படுவதில்லை.

[கார்ல் மார்க்ஸ் : **மூலதனம்** : முதல்பாகத்திலிருந்து]

3

குறிப்பிட்ட சில பலன்களைப் பெறவேண்டிய நிகழ்ச்சியின் தன்மையால் நிர்ணயிக்கப்படும் நெருக்கடிக் காலங்கள் பல தொழில்களில் உண்டு. உதாரணமாக, ஒரு செம்மறியாட்டு மந்தையின்

ரோமத்தைக் கத்திரிக்க வேண்டுமானால் அல்லது ஒரு கோதுமை வயலை அறுவடை செய்ய வேண்டுமானால், பெறப்படும் பொருளின் அளவும் நன்மையும், அந்த வேலை குறிப்பிட்ட காலத்துக்குள் தொடங்கி முடிவதைப்பொறுத்திருக்கிறது. இவற்றில் அசரை **(Herring)** மீன் பிடிப்பதற்குக் காலமிருப்பதைப் போல, அந்த வேலை முடிவதற்கான நேரம் முன் கூட்டியே வரையறுக்கப் பட்டிருக்கிறது. உதாரண மாக, ஒரு நாளில் 12 மணி நேர வேலைக்கு மேல் ஒருவன் ஏற்படுத்திக் கொள்ள முடியாது; ஆனால் 100 பேர் ஒத்துழைத்தால், வேலைநாளை 1200 மணிகளாக நீட்டிவிடலாம். வேலைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள காலம் குறுகியதாயிருப்பது, தீர்மானமான நேரத்தில், உற்பத்தித் துறையில் ஏராளமான உழைப்பாளிகளை ஈடுபடுத்துவதன் மூலம், ஈடுசெய்யப் படுகிறது. குறிப்பிட்ட காலத்துக்குள் கடமை பூர்த்தியாக வேண்டுமானால், ஏராளமான வேலை நாட்கள் ஏக காலத்தில் உபயோகிக்கப்பட வேண்டும்; பிரயோஜனகரமான பலனின் அளவு தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது; எனினும் இந்த எண்ணிக்கை, அதே காலத்தில் அதே அளவு வேலை செய்வதற்குத் தனிப்பட்ட தொழிலாளிகளாகத் தேவைப் படுகிறவர்களின் எண்ணிக்கையை விட எப்பொழுதும் குறைவாக விருக்கிறது. இத்தகைய ஒத்துழைப்பு இல்லாத காரணத்தால், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மேற்குப் பகுதியில் ஏராளமாகத் தானியமும், ஆங்கிலேயராட்சி பழைய சமூகங்களை அழித்துவிட்ட கீழைய இந்தியாவின் சில பகுதிகளில் ஏராளமாகப் பருத்தியும் வருஷா வருஷம் வீணாகின்றன.

(கார்ல் மார்க்ஸ்: **மூலதனம்** முதல் பாகத்திலிருந்து.)

4

புராதன காலப் பொதுச் சொத்துரிமை ஸ்லாவ் நாடுகளில் மாத்திரம் தான் நிலவியதென்று அல்லது ருஷ்யாவில் மட்டுமே நிலவியதென்று கூட அனுமானிக்கப் படுகிறது; இந்தப் பரிகசிக்கத்தக்க அனுமானத்துக்குச் சமீப காலத்தில் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பூர்வீகமுறை ரோமானியர்கள், டியூடன்கள், கெல்ட்கள் ஆகியோரிடமு மிருந்ததென்பதை நாம் ருசுப்பிக்க முடியும். ஓரளவு அழிந்துவிட்ட போதிலும், இந்தப் பூர்வீகப்பொதுச் சொத்துரிமை முறையின் உதாரணங்கள் பலவற்றை இன்றும் இந்தியாவில் காணமுடியும். ஆசியாவின் சமூகச் சொத்துரிமை முறைகளை, குறிப்பாக இந்தியாவின் சமூகச் சொத்துரிமை முறைகளை உன்னிப்பாகக் கற்றறிந்தால், எப்படிப் பல்வகைப்பட்ட புராதனக் கம்யூனிஸ்ட் முறைகள் பல விதங்களில் அழிந்தன வென்பது விளங்கும். உதாரணமாக, ரோமானியர்களிடமும் டியூட்டன்களிடமும் நிலவிய தனிச் சொத்துரிமையின் பல்வேறு ஆரம்பகால ரூபங்களுக்கும் பல்வேறு இந்தியக் கம்யூனிஸ முறைகளுக்கும் தொடர்பிருப்பதைக் காணலாம்.

(கார்ல் மார்க்ஸ் : **மூலதனம்** - முதல் பாகத்திலிருந்து)

5

மனித வளர்ச்சியின் துவக்க காலத்தில், வேட்டையாடிப் பிழைத்த சமூகங்களிலும், விவசாயம் செய்த இந்திய சமூகங்களிலும் நிலவிய கூட்டுறவு, உற்பத்திச் சாதனங்களின் பொது உடைமையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அத்துடன் அந்த சமூகங்களின் ஒவ்வொரு உறுப்பினரும், கூட்டிலிருந்து விடுபடாத தேனியைப் போல, தன் சமூகத்தின் கொப்பூழ்க் கொடியிலிருந்து கத்தரித்துக் கொள்ளாத நிலையிலிருந்ததும், அக்காலக் கூட்டுறவின் அடிப்படையாகவிருந்தது .இந்த இரண்டு குணாம்சங்களுமே அக்கால ஒத்துழைப்பை முதலாளித்துவக் கூட்டுறவிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன. பண்டைக் காலத்திலும், மத்திய காலத்திலும், நவீன காலனிகளிலும், பெரிய அளவில் ஆனால் தனித் தனியர்கக் கூட்டுறவு முறை அமுலில் இருந்திருக்கிறது; ஆனால் இது ஆண்டான்-அடிமை உறவுகளை, குறிப்பாக அடிமை முறை உறவுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

(கார்ல் மார்க்ஸ், **மூலதனம்** முதல் பாகம்)

6

மிருகராசிகளிலிருந்து மனிதர்கள் முதலில் தோன்றிய பொழுது, அவர்கள் காட்டு மிராண்டிகளாக இருந்தார்கள்; மற்ற விலங்கினங்களை ஒத்திருந்தார்கள். மனித சமூகத்தின் சிசுப்பருவம் அது. இயற்கையின் சக்திகள் மீது அவர்களுக்கு எத்தகைய அதிகாரமும் ஏற்படவில்லை. தமது சொந்த சக்திகளை அவர்கள் அப்பொழுது அறியவில்லை. மிருகங்களைப் போலவே அற்ப ஸ்திதியிலிருந்தார்கள்; உற்பத்தித் திறமையிலும் விலங்கினங்களை விட உயர்ந்தவர்களா யில்லை. அப்பொழுது வாழ்க்கை நிலைமைகளில் ஒருவகை சமத்துவம் நிலவியது; குடும்பத் தலைவர்களைப் பொறுத்த மட்டில், சமூக நிலைமைகளில் சமத்துவம் நிலவியது. பிற்காலத்தில், விவசாய சமூகங்களில் வளர்ந்த வர்க்க வேறுபாடுகள் அப்பொழுது இல்லாமலிருந்ததென்று திடமாகச் சொல்லலாம். அத்தகைய சமுதாய நிலையில், தகராறுகளைத் தீர்த்து வைப்பது, தமது உரிமைகளை மிஞ்சிப் போகும் தனிப்பட்டவர்களை அடக்குவது, குறிப்பாக உஷ்ண நாடுகளில் தண்ணீர் வசதியைக் கவனிப்பது, இறுதியாக, பூர்வ கால நாடுகளில் மதம் சம்பந்தமான கடமைகளைப் புரிவது ஆகிய துறைகளில், தனி நபரின் நலன் பொது நலன்களுக்கு உட்பட்டிருந்தது. இவை போன்ற பொதுக் கடமைகளை நிறைவேற்றும் பொது அதிகாரிகள் மிகப் புராதனமான ஜெர்மானிய சமூகங்களைப் போலவே இன்றைய இந்தியாவிலும், சகல கால கட்டங்களிலும் இருப்பதை நாம் பார்க்கிறோம். அரசும் அதிகாரமும் ஆரம்ப வடிவத்தில் தோன்றும்பொழுது, இவற்றை நாம் பார்க்கிறோம்.

(ஏங்கல்ஸ், ஆன்டி-டூரிங்.)

7

மத்திய காலத்தில், ஆசிரமங்களில் மாத்திரமே, விவசாயத்துக்குக் கணக்குகள் வைக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். ஆனால் பூர்வீக இந்தியப் பொதுவுடைமைச் சமூகங்களிலேயே விவசாயத்துக்குக் கணக்கன் இருந்ததை நாம் முதல் பாகத்தில் பார்த்தோம். இந்த வேலைப் பிரிவினை, நேரத்தையும் சிரமத்தையும் செலவையும் மிச்சப் படுத்துகிறது. ஆனால் உற்பத்தியும் உற்பத்திக் கணக்கும் வெவ்வேறு விஷயங்களாகும். கணக்கன் ரூபத்தில், சமூகத்தின் உழைப்புச் சக்தியில் ஒரு பகுதி உற்பத்தியில் ஈடுபடாமல் போகிறது. கணக்கன் வேலையின் செலவு, அவருடைய உழைப்பால் உற்பத்தியாவதில்லை. சமூக உற்பத்தியிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்தியாவின் கம்யூனிஸ்ட் சமூகத்தின் கணக்கருக்குப் பொருந்துவது, மாறுபட்ட சூழ்நிலையில், முதலாளிகளின் கணக்கர்களுக்கும் பொருந்தும்.

(மூலதனம், பாகம் 2. **கார்ல் மார்க்ஸ்.**)

8

கீழ் தேசங்களின் நகரங்களுடைய அமைப்பைப் பற்றி வயது முதிர்ந்த **பிரான்கியாஸ் பேர்னியர்** எழுதியிருப்பதை விட (இவர் அவுரங்கசீப்பின் வைத்தியராக ஒன்பது வருஷகால மிருந்தார். பிரயாணக் குறிப்புகள் எழுதியிருக்கிறார்) தெளிவாகவும் பிரகாசமாகவும் பொருந்திறமையுடனும் எழுதப் பட்டிருப்பது எதுவும் இல்லை. ராணுவ அமைப்பையும், இந்தப்பெரிய ராணுவங்கட்கு எப்படி உணவு அளிக்கப்பட்டன என்பதுபற்றியும், இவை போன்ற மற்றவற்றைப் பற்றியும் அவர் மிக நன்றாக வர்ணிக்கிறார். இந்த இருவிஷயங்களைப் பற்றி அவர் குறிப்பிடும் பலவற்றில் கீழ்க்கண்டவை முக்கியமானவை. "குதிரைப்படை முக்கியபாகமாகும். பொதுவாக ஊர்வதந்தி கூறுவதைப் போல, காலாட்படை பெரிதல்ல. கடைத் தெருக்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் ராணுவத்தைப் பின் தொடர்ந்து செல்லும் வேலைக்காரர்கள், ஜனங்களையும் உண்மையில் போராடும் ராணுவமாகக் கருதினால், காலாட்படை. பெரிதெனச் சொல்லலாம்; ஏனெனில் அப்பொழுது அரசனுடன் செல்லும் ராணுவத்தில் மாத்திரம் 2 அல்லது 3 லட்சம் பேர் இருப்பதாகவும், சில சமயங்களில்—உதாரணமாக அரசன் முக்கிய நகரத்துக்கு நீண்டகாலம் திரும்பி வர மாட்டாரென்பது நிச்சயமாயிருக்கும்பொழுது — அரசன் ராணுவத்தில் 3 லட்சத்துக்கும் அதிகமாக இருப்பதாகவும் கூறினால் சரியாக இருக்கும். இந்த ராணுவங்களுடன் கூடவே, கூடாரங்களும் சமையல் ஏற்பாடுகளும் உடைகளும் தட்டுமுட்டுச் சாமான்களும் அடிக்கடி பெண்களும்கூடச் செல்வதையும், அத்துடன் யானைகளும் ஒட்டகங்களும் எருதுகளும் குதிரைகளும் சுமை தூக்கிச் சேவகர்களும் மாட்டுத் தீவன

மும், சரக்கு விற்பனையாளரும், பலவகை வியாபாரிகளும் பணியாட்களும் செல்வதையும் அறிந்தவர்களுக்கு இது அதிசயமாயிருக்காது. அல்லது, ராஜ்யத்தின் **நிலம் முழுமைக்கும் அரசனே சொந்தக்காரன்** என்பதை அறிந்தவர்கள் தேசத்தின் இந்தக் குறிப்பான நிலையை, ஆட்சி முறையைப் புரிந்து கொண்டவர்கள், அதிசயிக்கத் தேவையில்லை. ராஜ்யத்தின் நிலம் முழுமைக்கும் அரசனே சொந்தக்காரனாயிருப்பதால் ஏற்படும் விளைவு என்ன? டெல்லி அல்லது ஆக்ராவைப் போன்ற தலைநகரம் ராணுவத்தையே அநேகமாக நம்பி வாழ்கிறது. ஆகவே, அரசன் நீண்ட காலத்துக்குப் போர்க்களம் செல்கிறானென்றால், நகர முழுமையும் அரசனைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த நகரங்கள் பாரிஸ் போன்ற நகரங்களாக இல்லை, இருக்க முடியாது. **சரியாகச் சொல்லப் போனால், இவை ராணுவ முகாம்கள் தான்.** திறந்த வெளியிலுள்ள ராணுவ முகாம்களைவிடக் கொஞ்சம் சிறப்பானதாகவும் அதிக சௌகரியத்துடன் கூடியதாகவும் இருக்கும் ராணுவ முகாம்கள் ”

முகலாயப் பெரியார் 4 லட்சம் பேர் கொண்ட ராணுவம் முதலியவற்றுடன் காஷ்மீருக்குள் பிரவேசித்த சந்தர்ப்பத்தைக் குறித்து, பேர்னியர் எழுதுகிறார் :

“ இவ்வளவு பெரிய ராணுவம், இத்தனை மனிதர்கள், பிராணிகள் அனைவரும் போர்க்களத்தில் எப்படிப் பிழைத்தார்களென்பதைப் புரிந்து கொள்வது கடினம். இதைப் புரிந்து கொள்வதற்கு, பின்வரும் உண்மைகளை உணர வேண்டும் ; இந்தியர்கள் தமது உணவு விஷயத்தில் மிகவும் நிதானமான, மிதமான, எளிய பழக்கங்களை உடையவர்கள். குதிரை வீரர்களில் பத்தில் ஒருவர் கூட, இருபதில் ஒருவர் கூட, போராட்ட காலத்தில் இறைச்சி உண்பதில்லை. அரிசியும் காய்கறிகளும் கலந்து சமைத்து, நெய் ஊற்றிச் சாப்பிடுவதற்கு, இந்தப் பொருட்கள் கிடைக்கும் வரை, அவர்கள் திருப்தியாகவிருக்கிறார்கள். மேலும் ஒட்டகங்களால் சகிப்புத் தன்மையுடன் பாடுபட முடியும்; பசியையும், தாகத்தையும் அவற்றால் பொறுத்துக் கொள்ள முடியும்; கொஞ்ச உணவில் அவை வாழ முடியும். காண்பது எதுவாயிருந்தாலும், அதை உட்கொள்ள அவற்றால் முடியும். மேலும் டெல்லியிலே கடை வீதி வைத்திருக்கும் வியாபாரிகளே இங்கும் கடை வைக்க வேண்டியிருக்கிறது; சிறு வியாபாரிகளும் அப்படியே...இறுதியாக, கால்நடைகளின் தீவனத்தைப் பொறுத்தவரை, ஏழைகள் கிராமங்களின் பல பாகங்களுக்கும் சென்று ஏதாவது சம்பாதிக்கவும் வாங்கவும் முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய பொதுவான பெரிய வேலை என்னவென்றால், சிறு மண் வெட்டி மாதிரி ஒன்றைக் கொண்டு, வயல் வயலாகச் சுரண்டுவது தான். அந்தப் புல்லைக் கொண்டு வந்து சுத்தம் செய்து ராணுவத்திடம் விற்கிறார்கள்...”

(ஏங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம். 1853 ஜூன் 2.)

9

நிலத்தில் சொத்துரிமை இல்லாமலிருந்தது தான் கீழ்நாடுகள் முழுமைக்கும் திறவுகோலாகும். கீழ் நாடுகளின் அரசியல் வரலாறும் மத வரலாறும் இதில் அடங்கியிருக்கிறது. ஆனால் கீழ்த்தேச மக்கள், பிரபுத்துவ வடிவத்தில் கூட நிலச் சொத்துரிமையை அடையாததற்கு காரணம் என்ன? சீதோஷ்ண ஸ்திதியும் பூமி நிலையுமே பிரதான காரணங்களென்று நான் நினைக்கிறேன். சஹாரா பாலைவனத்திலிருந்து அரேபியா, பாரசிகம், இந்தியர், தார்த்தாரி மூலம் ஆசியாக் கண்டத்து மேட்டுப் பூமி வரையில் பிரம்மாண்டமான பாலைவனப் பிரதேசம் வியாபித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்கு பயிர் செய்ய வேண்டுமானால் செயற்கைப் பாசனம் முதல் தேவையாகும். இந்தத் தேவையை கம்யூன்கள், மாகாணங்கள் அல்லது மத்திய சர்க்கார் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு கீழ்த்தேச சர்க்காருக்கு மூன்று இலாகாக்களுக்குமேல் இருந்ததில்லை. அவையாவன: நிதி இலாகா (உள் நாட்டுக் கொள்ளை)' யுத்தம் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொள்ளையடிப்பது), பொது மராமத்து வேலை (மறு உற்பத்திக்கு வசதி). இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் முதல் இரண்டு அம்சங்களையும் முன்னை விட முறையாக நிர்வகித்து வருகிறது; ஆனால் மூன்றாவது அம்சத்தை அப்படியே புறக்கணித்து விட்டது. ஆகவே இந்திய விவசாயம் அழிந்து கொண்டிருக்கிறது. இங்கு போட்டிச் சுதந்திரம் தன்னைத் தானே பூர்த்தியாக அவமானப் படுத்திக் கொள்கிறது. நீர்ப்பாசன அமைப்பு க்ஷீணித்தவுடன் நிலத்தைச் செழுமைப் படுத்தும் காரியம் நின்று விடுவதால்தான், ஒரு காலத்தில் உன்னத முறையில் வேளாண்மை செய்யப்பட்ட பிரதேசங்கள் பாழ் நிலங்களாகக் காட்சியளிக்கும் விசித்திர உண்மையை நாம் பார்க்கிறோம். (பல்மைரா, பெட்ரா, யெமனில் *ஏற்பட்ட அழிவுகள்; எகிப்து, பாரசிகம், ஹிந்துஸ்தானம் ஆகியவற்றின் ஜில்லாக்கள்.) ஒரு நாசகார யுத்தம் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு தேசத்தை ஜனசஞ்சாரமற்றதாகச் செய்து, அதன் நாகரிகத்தையே அது இழக்கச் செய்து விடுவதற்கும் இதுவே (செயற்கைப் பாசனத்தின் பாத்திரமே) காரணமாகும். மகம்மதுவுக்கு முன், தென் அரேபிய வர்த்தகம் அழிந்ததற்கு இதுவே காரணமென்று நான் நினைக்கிறேன். மகம்மதியப் புரட்சிக்கு அந்த வர்த்தக அழிவு ஒரு முக்கிய காரணம் என்று நீங்கள் கருதுவது முற்றிலும் சரியே...

கிழவர் பெர்னியர் எழுதியிருப்பதெல்லாம் உண்மையில் மிகவும் நேர்த்தியாக இருக்கின்றன. நிதானமுள்ள, தெளிவு நிறைந்த பிரெஞ்சுக்காரர், கவனிக்காமல் செய்வதைப் போல,

---

*பல்மைரா சிரியா பாலைவனத்தில் உள்ளது. டாமஸ்கஸ் நகரத்துக்கு வடகிழக்கே 120 மைல். அழிந்த நகரம். பெட்ரா அரேபியாவில் உள்ள அழிந்த நகரம். யெமன் தென்மேற்கு அரேபியா.

விஷயத்தை டக், டக் என்று எடுத்துக் கூறுவதைப் படிப்பதானது உண்மையில் இன்பத்தை அளிக்கிறது………

(மார்க்ஸுக்கு ஏங்கல்ஸ் எழுதிய கடிதம் 1853 ஜூன் 6)

10

இந்தியாவைப்பற்றிய முதல் கட்டுரையில், மறைமுக யுத்தத்தை நான் தொடர்ந்து நடத்துகிறேன். சுதேசித் தொழிலை இங்கிலாந்து அழித்த காரியம் **புரட்சிகரமானது** என்று நான் வர்ணித்திருக்கிறேன். இது அவர்களுக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தும். மற்றபடி இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சி முழுவதும் துப்புக் கெட்டதாக இருந்தது, இன்றும் இருக்கிறது.

அரசியல் மேற்பரப்பில் நோக்கமில்லாத இயக்கமெல்லாம் இருந்தபொழுதிலும், ஆசியாவின் இந்தப் பகுதி அசையாத் தன்மை கொண்டிருந்ததற்கு, ஒன்றையொன்று சார்ந்துநிற்கும் இரு சந்தர்ப்பங்களைக் கொண்டு பூர்ண விளக்கம் பெறலாம். (1) **மராமத்து** நீர்ப்பாசன வேலைகள் மத்திய சர்க்காரின் வேலையாக இருந்தது. (2) சில பெரிய நகரங்களைத்தவிர சாம்ராஜ்யம் முழுமையும் **கிராமங்களாக** பாகுபடுத்தப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றுக்கும் தனி ஸ்தாபனம் இருந்தது. அவை ஒவ்வொன்றும் தனக்குள்ளே ஒரு சிறு உலகமாக இருந்தது.

இந்தப் பூர்விகக் குடியரசுகள் தத்தம் **கிராமத்தின் எல்லை**களை பக்கத்து கிராமத்துக்கு எதிராக உஷாராகப் பாதுகாத்து வந்தன. இந்தக் குடியரசுகள், சமீபத்திலேயே ஆங்கிலேயர் வசப்பட்டுள்ள வடமேற்கு இந்தியாவில் இன்றும் ஏறக்குறைய சுத்த வடிவத்தில் உள்ளன. ஆசியக் கொடுங்கோன்மை தேங்கி நிற்பதற்கு இதைவிடத் திடமான அடிப்படையை கற்பனை செய்ய முடியுமென்று நான் நினைக்கவில்லை. ஆங்கிலேயர்கள் எவ்வளவு தூரம் அந்த தேசத்தை ஐயர்லாந்து மாதிரி யாக்கியிருந்தாலும், இந்த மாருத அச்சிலுள்ள புராதனக் குடியரசுகள் சிதறுண்டுபோவது, தேசம் ஐரோப்பிய மயமாவதற்கு அவசியமான நிபந்தனையாகும். வரி வசூலிப்பவர் மாத்திரம் இதைச் சாதிக்கவில்லை. அவர்களுடைய புராதனத் தொழிலையும் அழிக்கவேண்டியிருந்தது; அப்பொழுதே, கிராமங்கள் தன்னைத்தானே ஆதரித்துக்கொள்ளும் தன்மையை இழக்க முடியும்.

ஜாவாவுக்கு கிழக்கே உள்ள ஒரு தீவு, பாலி. பாலியில், இந்த ஹிந்து ஸ்தாபனமும் ஹிந்துமதமும் அப்படியே நிலவுகிறது. மேலும் இந்த ஸ்தாபனத்தின் அம்சங்கள், ஹிந்து செல்வாக்கின் அம்சங்களைப் போலவே, ஜாவா முழுவதும் காணப்படுகின்றன. **சொத்துரிமை** பிரச்னையைப் பொறுத்தவரை, இது இந்தியாவிலுள்ள ஆங்கிலேய எழுத்தாளர்கள் மத்தியில் **பெருந்தொல்லை தரும் பிரச்னை**யாக இருக்கிறது. கிருஷ்ணா நதிக்குத் தெற்கே உள்ள மலையடிவாரப் பிரதேசத்தில், நிலத்தில் சொத்துரிமை இருந்ததாகத்தான்

தோன்றுகிறது. மறுபுறத்தில் ஜாவாவில் அரசன் நிலம் முழுமைக்கும் முழுச் சொந்தக்காரனாக இருந்தானென்றும், பெரிய அளவுக்கு நிலவாடகை வசூலிக்க அவனால் முடிந்ததென்றும் ஜாவாவின் மாஜி ஆங்கிலேய கவர்னர் ஸர். **ஸ்டாம்போர்ட் ராபிள்ஸ்** "**ஜாவாவின் சித்திரம்**" என்ற அவருடைய நூலில் குறிப்பிடுகிறார். "எப்படியிருந்தாலும், நிலத்தில் சொத்துரிமை இல்லை" என்ற கொள்கையை ஆசியா முழுவதும் முதன் முதலாக ஸ்தாபித்தது முக்கியமாக மகம்மதியர்கள்தான் என்று தோன்றுகிறது.

மேலே குறிப்பிட்ட கிராமங்களைப் பொறுத்தவரை, அவை மனுவின் நூல்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. மனுவின் கூற்றுப்படி, 10 கிராமங்களுக்கு ஒரு மேலதிகாரி, நூறு கிராமங்களுக்கு ஒரு மேலதிகாரி, அதற்குப் பிறகு ஆயிரம் கிராமங்களுக்கு ஒரு மேலதிகாரி என்ற ரீதியில் ஸ்தாபனம் நிறுவப்பட்டிருந்தது.

[எங்கல்ஸுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம்; 17-6-1853.]

11

விவசாயத்தின் சீரழிவைப்பற்றிய ருஷியப் புத்தகத்தின் முக்கியமான பகுதிகளை போர்கீம் எனக்காக மொழி பெயர்த்துக் கொண்டிருக்கிறார். ஷீடோ - பெர்ரோட்டி என்ற ருஷியர் அதைப் பற்றி எழுதியுள்ள பிரெஞ்சுப் புத்தகத்தையும் போர்கீம் என்னிடம் கொடுத்திருக்கிறார். இந்த ஷீடோ-பெர்ரோட்டி நுனிப்புல் மேயும் ஆசாமி. விவசாயி நிலத்திலிருந்து வெளியேறக் கூடாதென்று சட்டம் செய்த காரணத்தால் புராதன ருஷியப் பொதுவுடைமை முறை முதலில் தோன்றியதாகக் கூறி இவர் பெருந் தவறு செய்கிறார். இந்தப் புராதன ருஷியப் பொதுவுடைமை முறை முழுவதும், **சின்னஞ்சிறு விவர அம்சங்கள் உள்பட புராதன ஜெர்மானியப் பொதுவுடைமை முறை**யின் நகலைப் போலவே இருக்கிறது. ருஷியர்கள் புதிதாகச் சேர்த்திருப்பது என்னவெனில் (இது இந்தியப் பொதுவுடைமை முறையிலும் காணப்படுகிறது; பஞ்சாபில் அல்ல, தென்னிந்தியாவில்) (1) சமூகத் தலைமை ஜனநாயகத் தன்மையற்றதாக இருந்தது; தந்தை வழிச் சமூகத் தலைமையாக இருந்தது. (2) அரசுக்கு வரிகளைச் செலுத்துவது முதலியன சமூகத்தின் **கூட்டுப் பொறுப்பாக** இருந்தது. இந்த இரண்டாவது அம்சத்தின் விளைவு என்னவென்றால், ருஷிய விவசாயி எந்த அளவுக்கு அதிகமாகப் பாடுபடுகிறானோ, அந்த அளவுக்கு அதிகமாக அவன் அரசாங்கக் காரியங்களுக்காகச் சுரண்டப்படுகிறான்; அவன் வரிகளைச் செலுத்துவதுடன், சர்க்கார் தூதர்கள் ராணுவம் முதலியன தொடர்ச்சியாகப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, அவர்களுக்கு பொருட்கள், குதிரைகள் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். இந்த அசுத்தக் கோளாறுக்கு அந்திக்காலம் வந்துவிட்டது.

[எங்கல்ஸுக்கு மார்க்ஸ்: 1868 நவம்பர் 7]

முதலாளித்துவத்தின் பலாத்காரப் பிரவேசம்

1

பரிவர்த்தனைப் பண்டங்களை உற்பத்தி செய்யும் சமுதாயம், பண்டங்களின் இயல்பான மதிப்பு ரூபத்தைத் தங்க ரூபத்தில் கணித்து, தங்கத்தைப் பயன்படுத்தும் பொழுது, அதுவரை மறைந்திருந்த மதிப்பின் பல முனைகள் அப்பொழுது துளிர்விடத் தொடங்குகின்றன. அடுத்தபடியாக, பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி பொது நிகழ்ச்சியாகிறது. நேரடி உபயோகத்துக்காக உற்பத்தியான பொருட்களை பரிவர்த்தனைக்கு அனுப்புவதன் மூலம், தங்கம் அவற்றைப் பரிவர்த்தனைச் சரக்குகளாக்குகிறது. அதன் பிறகு, சமூக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சமூகத்தை பரிவர்த்தனைப் பண்டமும் தங்கமும் தாக்குகின்றன; ஒன்றன்பின் ஒன்றாக சமுதாய இணைப்புகளை துண்டித்து விடுகின்றன; இறுதியாக, தனிப்பட்ட உற்பத்தியாளர்களாக சமுதாயம் கரைந்து போகும்படி செய்கிறது. இந்தியாவில் செய்ததைப்போல, தங்கம் பொதுச்சாகுபடிக்குப் பதிலாக தனிச் சாகுபடி முறையை ஸ்தாபிக்கிறது; அதன் பிறகு, பொது நிலங்கள் தனி நபர்களுக்கிடையே வினியோகமாகும் முறைக்கு முடிவு கட்டுகிறது, நிலம் தனிபபட்டவர் சொத்தாவதை ஊர்ஜிதம் செய்கிறது. பொதுவாகவுள்ள புறம்போக்கு நிலத்தையும் பங்கிடச் செய்கிறது. தொழில் வளர்ச்சியிலிருந்து தோன்றும் காரணங்கள் அத்துடன் வேலை செய்த போதிலும், புராதனப் பொதுவுடமைச் சமூகத்தை அழிப்பதில் தங்கம் மிகவும் சக்தி வாய்ந்த கருவியாக எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது.

[ஏங்கல்ஸ், ஆண்டிடூரிங்.]

2

முதலாளித்துவத்துக்கு முந்திய உற்பத்தி முறைகள் அனைத்திலும் லேவாதேவி முறையால் புரட்சிகரமான பலன்கள் ஏற்படுகின்றன. அரசியல் ஸ்தாபனத்துக்குத் திடமான அடிப்படையாகவும், அவசியமான அடிப்படையாகவும் விளங்கிய அந்தச் சொத்துரிமை முறைகளை லேவாதேவி முறை அழித்துக் கரைத்து விடுகிறது. ஆசியப் பொருளாதார முறைகளில், லேவாதேவி முறை நீண்ட காலம் நிலைத்திருக்கலாம்; ஆனால் பொருளாதார சீர்குலைவையும் அரசியல் சீரழிவையும் தவிர பலன் எதுவுமில்லாமல் இருக்க முடியும். முதலாளித்துவ உற்பத்தியை சாத்தியமாக்கும் இதர முக்கிய தேவைகள் பூர்த்தியாகும் பொழுதே, லேவாதேவி முறையானது நிலப்பிரபுவையும் சிறு அளவில் நடைபெறும் உற்பத்தியையும் அழித்தும், உற்பத்தி சாதனங்களை மூலதனமாகக் குவித்தும் புதிய உற்பத்தி முறை உருப்பெறுவதற்கு உதவி புரிய முடியும்.

[மூலதனம் மூன்றாம் பாகம்—கார்ல் மார்க்ஸ்.]

3

இந்தியாவிலிருந்து அயர்லாந்து வரையில், கிராமம் அல்லது சமூகம் நிலத்தின் பொதுச் சொந்தக்காரனாக உள்ள முறையில்தான் பெரிய பெரிய அளவுகளில் நிலம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதுவே ஆரம்ப கால முறை. சில சமயங்களில், உறுப்பினர்களின் பொது நன்மைக்காக, நிலம் பொதுவில் சாகுபடி செய்யப்பட்டது. சில சமயங்களில், காட்டு நிலமும் செடிகொடி உள்ள நிலமும் பொதுவில் இருக்க, மற்ற நிலம் தனித்தனிப் பகுதிகளாக, தனித்தனிக் குடும்பங்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை, பங்கு போட்டுக் கொடுக்கப்பட்டது.

[ஏங்கல்ஸ், ஆண்டிடூரிங்.]

4

நேரடியாக உழைப்பவனே உற்பத்திச் சாதனங்களுக்கும் தன் பிழைப்புக்குத் தேவைகளை உற்பத்தி செய்யும் வேலை நிலைமைகளுக்கும் எஜமானனாகவிருக்கும்பொழுது, சொத்துரிமை உறவு, ஆள்வோர் - பணிவிடையாளர் என்ற நேரடியான உறவாகப் பிரதிபலிக்கிறது. ஆகவே உற்பத்தியாளன் சுதந்திரமாக இருக்கவில்லை. கட்டாய உழைப்புடன் கூடிய பண்ணை அடிமைத்தனத்துக்குப் பதிலாக, இறை செலுத்தும் உறவாக இந்தச் சுதந்திரமற்ற நிலைமை திருத்தப்பட்டிருக்கலாம். நமது அனுமானப்படி இங்கு நேரடியான உற்பத்தியாளரே உற்பத்திச் சாதனங்களை வைத்திருக்கிறார்; உழைப்பதற்குத் தேவையான பௌதிக வேலை நிலைமைகளுக்கு வாழ்க்கைத் தேவைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பௌதிக வேலை நிலைமைகளுக்கு எஜமானனாகவிருக்கிறார். தன் விவசாயத்தையும் அத்துடன் தொடர்பு கொண்டுள்ள தன் குடிசைத் தொழில்களையும் சுயேச்சையான உற்பத்தியாளர் என்ற முறையில் அவர் நடத்துகிறார். இந்தக் குட்டி விவசாயிகள் ஏறக்குறைய இயற்கையாகவுள்ள கம்யூனில் சேர்ந்து உற்பத்தி செய்தால், அவர்களுடைய சுயேச்சைத்தன்மை ஒழிந்துவிடாது. இந்தியாவில் அம்மாதிரித்தான் செய்கிறார்கள். நிலத்தின் பிரபுவாக பெயரளவுக்கு உள்ளவரிடமிருந்து சுயேச்சையாக இருப்பதுதானே பிரச்னை. இந்தச் சூழ்நிலையில் பெயரளவில் நிலப்பிரபுவாக விளங்குகிறவர் உபரி உழைப்பைக் களவாட வேண்டுமானால், பொருளாதார நடவடிக்கைகள் மூலம் முடியாது. வேறு நடவடிக்கைகளை என்ன ரூபத்திலாயினும் சரி, எடுக்க வேண்டும்.

[மூலதனம், மூன்றாவது பாகம்.]

5

முதலாளித்துவத்திற்கு முந்தைய சுதேசி உற்பத்தி முறைகளுடைய உள்ளமைப்பின் உறுதியும் உயிர்த்துடிப்பும் வர்த்தகத்தின் அழிவுக் கூத்துக்குத் தடையாக இருந்ததை இந்தியா சீனா

வுடன் ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட உறவில் நன்றாகக் காணமுடியும். இங்கு சிறு நில விவசாயமும் குடிசைத் தொழிலும் சேர்ந்த ஒற்றுமை உற்பத்தி முறையின் பரந்த அடிப்படையாகவிருக்கிறது. இத்துடன் நிலத்தின் பொதுச் சொத்துரிமையை அடிப்படையாகக் கொண்ட கம்யூன்களும் இந்தியாவில் உள்ளன. சீனாவிலும் இத்தகைய கம்யூன்கள் ஆரம்ப காலத்தில் இருந்தன. இந்தியாவில் இந்தச் சிறு பொருளாதார ஸ்தாபனங்களை அழிப்பதற்காக ஆங்கிலேயர்கள் ஆட்சியாளர்கள் என்ற முறையிலும் நிலப்பிரபுக்கள் என்ற முறையிலும் தமக்கு உள்ள நேரடியான அரசியல் பொருளாதார அதிகாரத்தை ஏககாலத்தில் உபயோகித்தார்கள். ஆங்கிலேய வர்த்தகத்தால் இந்த ஸ்தாபனங்கள் புரட்சிகரமான முறையில் பாதிக்கப்படுகின்றன. இந்தப் பொருளாதார ஸ்தாபனங்களின் ஒற்றுமையின் பாகமாக உள்ளதும் காலங் கடந்ததுமான நூற்றல் நெய்தல் தொழில்களை, ஆங்கிலேய வர்த்தகம் தன் சரக்குகளின் குறைந்த விலைகளால் எந்த அளவுக்கு அழிக்கிறதோ அந்த அளவுக்கு அந்தப் பொருளாதார ஸ்தாபனங்களே உடைகின்றன. அப்படியிருந்தும், இந்த அழிவு வேலை மிகவும் மெதுவாகத்தான் நடைபெறுகிறது. சீனாவில் இது மேலும் குறைவான வேகத்தில் தான் நடைபெறுகிறது; சீனாவில் ஆங்கிலேயர்கள் நேரடியான அரசியல் அதிகாரம் பெறுமலிருப்பதே இதற்குக் காரணம். விவசாயத்துக்கும் குடிசைத் தொழிலுக்கும் நேரடியான தொடர்பு இருப்பதால், குடிசைத் தொழில் பொருட்களை உற்பத்தி செய்வதில், நேரம் மிச்சப்படுகிறது; அவை சிக்கனமாகவும் உற்பத்தியாகின்றன. ஆகவே. பெருந்தொழில்களின் சரக்குகள் ஊரெல்லாம் சுற்றிவந்த வீண் செலவால் உயர்ந்த விலைக்கு விற்கும்பொழுது, அவற்றுக்கு எதிராக குடிசைத் தொழில்கள் பிடிவாதமாக எதிர்க்கின்றன. மறுபுறத்தில், ஆங்கிலேய வர்த்தகத்துக்கு நேர்மாறாக ருஷிய வர்த்தகம், ஆசிய உற்பத்தியின் பொருளாதார அடிப்படையைத் தொடாமல் இருக்கிறது. *

[மூலதனம்-கார்ல்மார்க்ஸ் மூன்றும் பாகம்]

6

ஒவ்வொன்றும் அழியக்கூடியது. கடல்களைக் கடக்கும் நீராவிக் கப்பல்களும், வடதென் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் போடப்பட்ட இருப்புப்பாதைகளும், மிகவும் விசித்திரமான நிலப் பரப்புகள் ஐரோப்பியத் தான்யச் சந்தையில் போட்டி போடும் நிலைமையை உண்டாக்கிவிட்டன; அவையாவன: வட அமெரிக்க 'பிரெயிரி' வெளிகள், அர்ஜெண்டைனாவின் 'பம்பாஸ்' வெளிகள்

---

* ருஷியா தன் உள்நாட்டு மார்க்கெட்டையும் அக்கம்பக்கத்து ஆசிய நாடுகளையுமே நம்பி, முதலாளித்துவ உற்பத்தியை விஸ்தரிக்க தீவிர முயற்சி செய்யத் தொடங்கிவிட்டதால், இதுவும் படிப்படியாக மாறுகிறது - ஏங்கல்ஸ்.

(மரமில்லாத புல் வெளிகள்) உழவுக்காக இயற்கையாலேயே வளப்படுத்தப்பட்ட 'ஸ்டெப்பிகள்', பண்டைக்கால சாகுபடி முறையுடன் நிலத்தை வளப்படுத்தாமலேயே, பல வருஷங்களுக்குச் செழுமையான அறுவடையைக் கொடுக்கக்கூடிய புது (இதுவரை சாகுபடியாகாத) நிலம் ஆகியவை. ருஷியாவையும் இந்தியாவையும் சேர்ந்த கம்யூன்களின் நிலங்களும் இந்தப் போட்டியில் சேர்ந்தன. தயவுதாட்சண்யமில்லாத கொடுங்கோலாட்சி, அடிக்கடி சித்திரவதை செய்து, வசூலிக்கும் வரிகளுக்காகப் பணம் பெற, இந்த கம்யூன்கள் தமது அறுவடையில் ஒரு பகுதியை மென்மேலும் அதிகமாகும் பகுதியை விற்க நேரிட்டது; இந்தப் பொருட்கள் உற்பத்திச் செலவை பொருட்படுத்தாமலேயே விலை பேசி விற்கப்பட்டன. வாங்குபவன் வைத்த விலைக்கு அவை கொடுக்கப்பட்டன. ஏனென்றால், எப்படியிருந்தாலும், கிஸ்திகட்டும் நாளில் விவசாயி வசம் பணம் இருக்கவேண்டும். பிரெயிரி சமவெளிகளின் புதிவள நிலங்களுடைய போட்டிக்கும், வரிக்கொடுமையால் திணறும் ருஷிய, இந்திய விவசாயிகளின் போட்டிக்கும், ஐரோப்பிய விவசாயியும் முதலாளித்துவ வேளாண்மைக்காரரும் பழைய வாடகை விதங்களின் அடிப்படையில் ஈடுகொடுக்க முடியவில்லை. ஐரோப்பாவில் சாகுபடி நிலத்தில் ஒரு பகுதியில் தான்ய சாகுபடி நின்றது. நிலவாடகை விதங்கள் விழுந்தன. விலைவாசிகளின் வீழ்ச்சியும், கூடுதலாகப் போடப்படும் முதலின் உற்பத்தித் திறமைக் குறைவும் ஐரோப்பாவில் விதிமுறையாயிற்று. ஸ்காட்லந்து முதல் இத்தாலிவரையில், தென் பிரான்ஸ் முதல் கிழக்கு பிரஷ்யாவரை, நிலப்பிரபுக்கள் துயருற்று இருப்பதற்கு இதுவே காரணம். அதிர்ஷ்டவசமாக, பிரெயிரி நிலங்கள் அனைத்தும் சாகுபடியாகவில்லை. ஐரோப்பாவின் பெரிய நிலப்பிரபுக்களையும் அவர்களுடன் கூடவே குட்டி நிலப்பிரபுக்களையும் அழிப்பதற்குத் தேவையான அளவு பிரெயிரி நிலம் இருக்கிறது. (மூலதனம். பாகம் 3)

7

நிலத்தின் வாடகையைத் தான்யமாகக் கொடுக்கும் முறை அலாதியானது; குறிப்பிட்ட பொருளுடனும் பொருளுற்பத்தியுடனும் பிணைக்கப்பட்டுள்ள முறை இது. அத்துடன் விவசாயமும் குடிசைத்தொழிலும் இணைக்கப்பட்டுள்ளன; விவசாயி குடும்பம் அநேகமாகத் தன் தேவைகள் அனைத்தையும் தானே பூர்த்திசெய்து கொள்கிறது. மார்க்கெட்டுகள், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, இதர சமூகத்துறைகளில் ஏற்படும் சரித்திர வளர்ச்சி ஆகியவற்றுக்கு சம்பந்தமில்லாமல் விவசாயி வாழ்கிறான். சுருங்கச் சொன்னால் இயற்கைப் பொருளாதாரத்தின் தன்மைகளைப் பொதுவாகப் பெற்றிருப்பதால், இந்த முறை ஆசியாவில் நாம் பார்ப்பதைப் போன்ற தேங்கிய சமூக நிலைமைகளுக்கு அடிப்படையாக விளங்குவதற்குத் தகுதியானது. இங்கு, முன்னால் வாடகை ரூபத்தில் உபரி உழைப்பு நிலச்சுவானுக்குக் கிடைத்தது. இப்பொழுது, குறைந்த

பட்ச வாடகை ரூபத்தில் உற்பத்தியாளனின் உபரி உழைப்பு நிலத்தின் உடைமையாளனுக்குக் கிடைக்கிறது. இப்பொழுதும் கட்டாயமாகவே இந்த உழைப்பு விவசாயியிடமிருந்து பெறப்படுகிறது; முன்போல் நிர்ப்பந்தம் மிருகத்தனமானதாகவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். நேரடியான உற்பத்தியாளரின் உழைப்பில் அவருடைய அவசிய உழைப்பைக் கழித்துவிட்டால் அவருக்கு கிடைக்கும் மிச்சத்தை நாம் லாபம் என்று தவறாக அனுமானித்து விடலாம், இந்த லாபத்துக்கும் தான்ய வாடகை நிர்ணயத்துக்கும் எத்தகைய தொடர்புமில்லை. ஆகவே, இந்தலாபம் வாடகைக்குப் பின்னால் வளரவேண்டும். வாடகையின அளவில் இந்த லாபம் அதன் இயற்கையான எல்லையை அடையவேண்டும். (அதாவது, தன் அவசிய உழைப்புக்குமேல், வாடகையின் அளவுக்கு உற்பத்தியாளர் உபரியாக உழைக்கவேண்டும்.—மொ-ர்)

உழைப்பு நிலைமைகளும் உற்பத்திச் சாதனங்களும் மீண்டும் இயங்குவதற்கே அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய முறையில் இந்த வாடகை அதிகரித்து விடலாம். அது உற்பத்தி விஸ்தரிப்பை ஏறக்குறைய அசாத்தியமாக்கிவிடலாம். மிகக்குறைந்த வாழ்க்கை நிலைக்கு அது உற்பத்தியாளரை அழுத்திவிடலாம். வெற்றியடைந்த, ஒரு தொழில் வளர்ச்சிபெற்ற நாடு இந்த முறையைப் பயன்படுத்தும்பொழுது, உதாரணமாக இந்தியாவில் ஆங்கிலேயர் இதைப் பயன்படுத்தும்பொழுது, இந்த விளைவுகள் குறிப்பாக ஏற்படுகின்றன. (மூலதனம், மூன்றாம்பாகம்.)

8

புராதன ஐரோப்பாவிலும் சரி, மத்திய காலத்திலும் சரி, இன்றைய இந்தியக் கம்யூனிலும் சரி, இயற்கைப் பொருளாதாரத்துக்கு அடிப்படையாகவுள்ள உற்பத்தி முறைக்கு விவசாயம் ஆதாரமாயிருக்கிறது; குடிசைத் தொழில்கள் அதற்குத் துணை புரிகின்றன. இந்தத் தொடர்பை முதலாளித்துவ உற்பத்திமுறை பூரணமாக அழித்துவிடுகிறது. இங்கிலாந்தில், பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி முப்பது வருஷங்களில் இந்த நிகழ்ச்சியை ஆராயலாம். (மூலதனம், மூன்றாவது பாகம்.)

9

டாக்டர் பௌரிங் கூறுகிறார்:—

"கிழக்கு இந்தியக் கம்பெனிக்கு கவர்னர் ஜெனரல் எழுதிய கடிதம் என் கையிலிருக்கிறது. டாக்கா ஜில்லா கைநெசவுத் தொழிலாளர் சம்பந்தமான கடிதம் இது. ''சில வருஷங்களுக்கு முன், கிழக்கிந்தியக் கம்பெனி இந்த தேசத்தின் தறிகளில் நெய்யப்பட்ட பஞ்சாடைகள் 60 லட்சம் முதல் 80 லட்சம் வரை வாங்கியது.

இந்தக் கிராக்கி படிப்படியாகக் குறைந்து பத்து லட்சமாயிற்று. இப்பொழுது, துணி கேட்பதே கிடையாது" என்று கவர்னர் இந்தக் கடிதத்தில் கூறுகிறார். மேலும், 1800-ல் வட அமெரிக்கா இந்தியாவிலிருந்து 8 லட்சம் பஞ்சாடைகளைப் பெற்றது. 1830-ல் 4000 கூடப் பெறவில்லை. இறுதியாக, 1800-ல் போர்ச்சுக்கல்லுக்கு 10 லட்சம் ஆடைகள் சென்றன; 1830-ல் 20 ஆயிரத்துக்குமேல் போர்ச்சுக்கல்லுக்குப் போகவில்லை.

"இந்திய நெசவாளரின் கஷ்டத்தைப்பற்றிய செய்திகள் பயங்கரமாக விருக்கின்றன. இதற்கு மூலகாரணம் என்ன? ஆங்கிலேயத் தொழில்களின் பொருட்கள, விசைத் தறியில் செய்யப்பட்ட அதே பொருட்கள் சந்தையில் இருப்பதால்தான். ஏராளமான நெசவாளர்கள பட்டினி கிடந்து மடிந்தார்கள். மற்றவர்கள் வேறுவேலைக்கு, குறிப்பாக வயலுக்குச் சென்றார்கள். வேறுவேலை கிடைக்கவில்லையென்றால், மரணதண்டனை விதிக்கப்பட்டிருப்பதற்குச் சமமாகும். இப்பொழுது டாக்கா ஜில்லாவில் இங்கிலீஷ் நூல்களும் பஞ்சாடைகளும் நிறைந்திருக்கின்றன. உறுதியான நெசவுக்கும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகுக்கும் உலகமெங்கும் புகழ்பெற்ற டாக்கா மஸ்லினைக்கூட ஆங்கிலேய யந்திரத்தின் போட்டி வீழ்த்திவிட்டது. வர்த்தகத்தின் சரித்திரம் முழுவதிலும், இந்தியாவில் இந்த வர்க்கங்கள் அனுபவித்த துன்பத்துக்கு இணைகாண்பது கடினமாயிருக்கும்."

பௌரிங் பிரசங்கம் மிகவும் குறிப்பிடத்தக்கது; ஏனென்றால், அவர் கூறும் புள்ளி விவரங்கள் பிசகற்றவை; அவற்றை மழுப்புவதற்காக அவர் உபயோகிக்கும் வாசகம் வர்த்தக சுதந்திர உபனியாசங்கள் அனைத்துக்கும் பொதுவான கபடம் நிறைந்த வாசகமாகும். அவர் தொழிலாளர்களை உற்பத்திச் சாதனமாக வர்ணிக்கிறார். அவர் எந்த உழைப்பைப்பற்றிப் பேசுகிறாரோ அது அலாதியானதென்று அவர் பாசாங்கு செய்கிறார். நெசவாளர்களை அழித்த யந்திரமும் அலாதியான யந்திரவகையென்று அவர் பாசாங்கு செய்கிறார். கைத்தறி நெசவாளரின் விதியை ஏதோ ஒரு நாள் பெறாமல் இருக்கக்கூடிய உடலுழைப்பே கிடையாதென்பதை அவர் மறந்துவிடுகிறார். (கார்ல்மார்க்ஸ்: வர்த்தக சுதந்திரத்தைப் பற்றிய பிரசங்கம். **தத்துவ வறுமை** என்ற அவருடைய நூலில் அனுபந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது)

காலனிகளில் ஆரம்பத்தில் கடைப்பிடிக்கப்பட்ட முதலாளித்துவ முறைகள்

அமெரிக்காவில் தங்கமும் வெள்ளியும் கண்டுபிடிக்கப்பட்டது, பூர்வ குடிகள் அடிமைப்படுத்தப்பட்டு, நிர்மூலம் செய்யப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது. கிழக்கு இந்தியத் தீவுகளை வசப்படுத்திச் சூறையாடத் தொடங்கியது. கறுப்பர்களை வர்த்தக வேட்டையாடும் பண்ணையாக ஆப்பிரிக்காவை மாற்றுவது ஆகிய நிகழ்ச்சிகள் முதலாளித்துவ உற்பத்தி சகாப்தத்தின் அருணோதயத்தை அறிவித்தன. பூர்வாங்கச் சேமிப்புக்கு வழிசெய்த பிரதான சக்திகள் இவையே. அவற்றின் சுவடுகளிலே, உலகத்தை அரங்கமாகக் கொண்டுள்ள ஐரோப்பிய நாடுகள் வர்த்தக யுத்தத்தை நடத்துகிறார்கள். ஸ்பெயினுக்கு எதிராக ஹாலந்து கலகம் செய்வதில் அது தொடங்குகிறது. பிரெஞ்சுப் புரட்சிக்காரர்களை எதிர்த்து இங்கிலாந்து நடத்திய யுத்தத்தில் அது பெரிய அளவுக்கு வளர்ந்தது. சீனாவுக்கு எதிராக இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபினி யுத்தம் முதலியவற்றில் அது இன்னும் வளர்கிறது.

பூர்வாங்கச் சேமிப்புக்குப் பயன்பட்ட பலவகை சக்திகள், ஏறக்குறைய காலகணித நிர்ணய முறையில், பலநாடுகளுக்கிடையே, குறிப்பாக ஸ்பெயின், போர்ச்சுகல், ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகியவற்றுக்கிடையே வினியோகமாகின்றன. இங்கிலாந்தில் 17-வது நூற்றாண்டின் முடிவில், காலனிகள், தேசியக் கடன், நவீன வரி முறை, பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றைக் கொண்ட ஏற்பாட்டை உருவாக்கினார்கள். இந்த முறைகளின் ஒரு பகுதியில் குறிப்பாகக் காலனிகளில், மிருக பலத்தை நம்பி நிற்கின்றன; சகல முறைகளும் அரசாங்கத்தின் அதிகாரத்தை சமுதாயத்தின் ஒன்று குவிக்கப்பட்ட ஸ்தாபன ரீதியான சக்திகளை பயன்படுத்துகின்றன. இவ்வாறெல்லாம் பிரபுத்துவ உற்பத்தி முறை முதலாளித்துவ உற்பத்திமுறையாக மாறும் நிகழ்ச்சி துரிதப்படுத்தப்படுகிறது; இடைக்காலம் குறைக்கப்படுகிறது. புதிய சமுதாயத்தைக் கர்ப்பாசயத்தில் கொண்டுள்ள ஒவ்வொரு பழைய சமூகத்துக்கும் பலாத்காரம் மருத்துவச்சியாகிறது. அதுவே ஒரு பொருளாதார சக்தியாகும்.

கிறிஸ்துவ மதத்தில் விசேஷத் தேர்ச்சி அடைந்திருக்கும் ஹோவிட் என்பவர் கிறிஸ்துவ கலோனியல் முறைபற்றி எழுதுகிறார்: "கிறிஸ்துவர்கள் எனப்படுவோர் உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும், அவர்களால் பணியவைக்கப்பட்ட ஒவ்வொரு மக்கள் மீதும் இழைத்துள்ள மூர்க்கத்தனமான கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எந்தக்கால கட்டத்திலும் வேறு எந்த இனத்

தினரின் செயல்களிலும்—எவ்வளவு மூர்க்கமானவர்களும் கல்வியறிவில்லாதவர்களாகவும், இரக்கமில்லாதவர்களாகவும் மானுபிமானத்தைப் பொருட்படுத்தாதவர்களாகவும் இருந்தாலும் சரி, அவர்களுடைய செயல்களில்கூட—இணைகாணமுடியாது." 17-ம் நூற்றாண்டில், முதலாளித்துவ நாடுகளுக்குத் தலைமைதாங்கியது ஹாலந்து. அது நடத்திய காலனி நிர்வாகத்தின் சரித்திரம், "துரோகம், லஞ்சம், படுகொலை, அற்பத்தனம் ஆகியவற்றின் அசாதாரணமான உறவுகளைக் கொண்டதாகும்" என்று **ஜாவாவின் சரித்திரத்தில்** ஸர் ஸ்டான்போர்ட் ராபில்ஸ் கூறுகிறார். இதற்கு நல்ல உதாரணம் என்னவெனில், ஜாவாவிலிருந்து அடிமைகளைக் கொண்டுவருவதற்காக, டச்சுக்காரர்கள் ஆட்களையே திருடியதாகும். இதற்காக, திருடர்கள் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். திருடன், துவிபாஷி, விற்பனையாளன் ஆகியோர் இந்த வர்த்தகத்தின் முக்கிய ஏஜண்டுகள். சுதேசி அரசர்கள் முக்கியமான விற்பனையாளர்கள். திருடப்பட்ட இளைஞர்கள், அடிமைகளின் கப்பல்களுக்கு அனுப்பப்படுவதற்குத் தயாராகும்வரை, **செலிபிஸ் தீவின்** ரகசிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்கள். ஒரு அதிகார பூர்வமான ரிப்போர்ட் கூறுவதைக் கேளுங்கள்: "இந்த மாகஸ்ஸார் டவுனில் மாத்திரம் ரகசிய சிறைகள் ஏராளமாக இருக்கின்றன; ஒன்றைவிட இன்னொன்று பயங்கரமாகவிருக்கிறது. பேராசைக்கும் கொடுங்கோன்மைக்கும் பலியான துரதிர்ஷ்டக்காரர்கள், தமது குடும்பங்களிலிருந்து பலாத்காரமாகத் துண்டிக்கப்பட்டு, விலங்குகளிடப்பட்டு, இந்தச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்."

மலாக்காவைப் பிடிப்பதற்காக டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியக் கவர்னரை லஞ்சவலையில் வீழ்த்தி கையில் போட்டுக்கொண்டார்கள். அவர் அவர்களை *1641*-ல் டவுனுக்குள் இட்டுச் சென்றார். உடனே அவர்கள் அவருடைய இல்லத்துக்கே அவசர அவசரமாகச்சென்று அந்த கவர்னரையே கொலை செய்தார்கள். துரோகத்துக்கு விலையாக *21,875* பவுன்கள் செலுத்தாமலிருப்பதற்காகவே அவரைக் கொலை செய்தார்கள். அவர்கள் அங்கு காலடிவைத்தாலும், அழிவு அவர்களைப் பின்தொடர்ந்தது; அந்தப் பகுதியே பாழாயிற்று. **பங்குவாங்கி** என்பது ஜாவாவின் ஒரு மாகாணம். இதில் *1750*-ல் *80* ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வசித்தார்கள்; *1811*-ல் *18* ஆயிரம் பேரே வசித்தார்கள். இனிய வர்த்தகம்!

இங்கிலீஷ் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தியாவின் அரசியலாட்சியைப் பெற்றதுடன், தேயிலை வியாபாரத்தின் ஏகபோகத்தையும் பெற்றது; அத்துடன் சீன வர்த்தகம் முழுமையையும், ஐரோப்பாவிலிருந்தும் ஐரோப்பாவுக்கும் சரக்குகளை ஏற்றிச் செல்வதும் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்தது. ஆனால் இந்தியாவின் கடற்கரையோர வர்த்தகமும் தீவுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தக

மும் இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகமும் கம்பெனியின் உயர்தரச் சிப்பந்திகளிடம் இருந்தது. உப்பு, அபினி, வெற்றிலை முதலிய பொருட்களின் ஏகபோகம் வற்றாத செல்வச் சுரங்கங்களாயின. சிப்பந்திகளே விலையை நிர்ணயித்தார்கள்; மனம்போன போக்கில் துர்ப்பாக்கிய இந்தியர்களைக் கொள்ளையடித்தார்கள். இந்தத் தனி வியாபாரத்தில் கவர்னர்-ஜெனரலும் கலந்துகொண்டார். அவருக்கு வேண்டியவர்கள் கண்ட்ராக்டுகள் பெற்றனர். அவர்கள் ரசவாதிகளைவிட சாமர்த்தியசாலிகள்! வெறுமையிலிருந்து தங்கம் உண்டாக்கிவிடுவார்கள். ஒரே நாளில், காளான்களைப்போல, பெருஞ் செல்வங்கள் குவிக்கப்பட்டன. ஒரு ஷில்லிங் முன்பணமில்லாமல், பூர்வாங்கச் சேகரிப்புகள் நடைபெற்றன. வாரன்ஹேஸ்டிங்ஸ் விசாரணையில் இத்தகைய விஷயங்கள் நிரம்பியிருக்கின்றன. இதோ ஒரு உதாரணம். ஸுலிவான் என்ற அதிகாரிக்கு ஒரு அபினி கண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது. அவர் அப்பொழுது அபினி ஜில்லாவிலிருந்து தொலைதூரமுள்ள பகுதிக்கு சர்க்கார் ஜோலிக்காகச் செல்லவேண்டியிருந்ததால், தன் கண்ட்ராக்டை பின்என்பவருக்கு 40 ஆயிரம் பவுன்களுக்கு விற்றார். அதே தினத்தில் பின் அதை 60 ஆயிரம் பவுன்களுக்கு விற்றார். கடைசியாக வாங்கி கண்ட்ராக்டை நிறைவேற்றியவர், இவ்வளவுக்கும் பிறகு தனக்கு நிறைய லாபம் கிடைத்ததாகக் குறிப்பிட்டார். பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஜாப்தாக்களில் ஒன்று கூறுவது என்னவெனில், 1757-க்கும் 1766-க்கும் இடையில் கம்பெனியும் அதன் சிப்பந்திகளும் இந்தியர்களிடம் இனாமாக 60 லட்சம் பவுன்கள் பெற்றார்கள். 1769—1770-ல் ஆங்கிலேயர்கள் அரிசி முழுவதையும் வாங்கிவிட்டு, கொள்ளைலாபத்துக்கு விலை கிடைத்தால்தான் விற்போமெனக் கூறிப் பஞ்சத்தை உண்டாக்கினார்கள்.

ஏற்றுமதி வர்த்தகத்துக்காகமட்டும், தோட்டங்கள் வைத்துள்ள காலனிகளிலும், உதாரணமாக மேற்கு இந்தியத்தீவுகள், கொள்ளையடிப்பதற்குக் கிடைத்துள்ள ஜனத்தொகை மிகுந்த நாடுகளிலும் உதாரணமாக மெக்ஸிகோவிலும் இந்தியாவிலும், பூர்வகுடிகள் மிகவும் பயங்கரமாக நடத்தப்பட்டனர். ஆனால் குடியேற்ற நாடுகளிலேயே, பூர்வாங்க சேமிப்பின் கிறிஸ்துவத்தன்மை பொய்யாகி விடவில்லை! பிராடஸ்டண்ட் கிறிஸ்துவர்களில் சிறந்தவர்கள் எனக் கூறிக்கொண்ட புது இங்கிலாந்தின் பரிசுத்தவாதிகள் 1703-ல் தமது சபையில் ஒரு உத்திரவை நிறைவேற்றினார்கள். அமெரிக்க இந்தியரின் ஒவ்வொரு உச்சந்தலைத் தோலுக்கும் உடல் தோலுக்கும் 40 பவுன்கள் விலைவைத்தது அந்த உத்திரவு. 1744-ல் மாஸ்ஸாசுசெஸ்பே ஒரு பூர்வகுடி சமூகத்தைக் கலகக்காரர் எனக் கூறியதுடன், கீழ்க்கண்ட விலைகள் நிர்ணயிக்கப்பட்டன: 12 வயதும், அதற்கும் மேற்பட்ட ஆண்மகனின் உச்சந்தலைத்தோலுக்கு 100 பவுன்; ஆண்கைதிக்கு 105 பவுன்; பெண்கள், குழந்தைகளைச் சிறைப்பிடித்தால், 50 பவுன் வீதம்; அவர்களுடைய உச்சந்தலை தோல்களுக்கும் 50 பவுன்கள் வீதம். சில பல வருஷங்களுக்குப்

பிறகு, இந்த யாத்ரிகத் தந்தைமார்கள்மீது காலனிமுறை பழிதீர்த்துக்கொண்டது. இந்தத் தெய்வபக்தி மிகுந்த யாத்ரீகர்கள் ராஜத்துவேஷிகளாகி விட்டார்கள். ஆகவே ஆங்கிலேயர் சிவப்பு இந்தியரைத் தூண்டிவிட்டுப் பணம் கொடுத்தார்கள். சிவப்பு இந்தியர்களின் கைக்கோடரிகளுக்கு அமெரிக்கக் கிறிஸ்துவர்கள் பலியானார்கள். உச்சந்தலைத் தோல் உரிப்பதற்கும் இரத்தவெறி பிடித்த வேட்டை நாய்களைப் பயன்படுத்துவதற்கும், கடவுளும் இயற்கையும் தமக்கு அனுமதி அளித்து ஆசி கூறியிருப்பதாக பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

காலனிமுறையால் வியாபாரமும் கப்பற் போக்குவரத்தும் வளர்ந்தன. லூதரின் ஏகபோகச் சங்கங்கள், மூலதன சேமிப்புத் தளங்களாக இருந்தன. புதிதாகப் பிறந்துள்ள முதலாளிகளுக்கு காலனிகளில் சந்தை இருந்தது. இந்தச் சந்தையின் ஏகபோக ஆதிக்கமானது, முதலாளிகளின் சேமிப்பை அதிகரித்தது. பகிரங்கமாகக் கொள்ளையடித்தும் கொலைசெய்தும் அடிமைப்படுத்தியும் ஐரோப்பாவுக்கு வெளியே சேகரிக்கப்பட்ட பொக்கிஷமெல்லாம் தாய்நாட்டில் மூலதனமாக மாறிற்று. காலனி முறையை முதலில் பூரணமாக வளர்த்த நாடு ஹாலந்து. 1648-ல் அது வர்த்தகமகத்துவத்தின் சிகரத்தை அடைந்தது. "கிழக்கிந்திய வர்த்தகமும் ஐரோப்பாக் கண்டத்தின் தென் கிழக்கு, வட மேற்கு வியாபாரமும் கிட்டத்தட்ட அதன் கைவசமிருந்தது. அதன் பின் வியாபாரமும் கப்பல் போக்குவரத்தும் தொழிலுற்பத்தியும் வேறு எந்த தேசத்தையும் மிஞ்சுவதாக இருந்தன. ஹாலந்தின் மொத்த மூலதனம், ஐரோப்பாவின் இதரபாகங்களுடைய மொத்த மூலதனத்தைவிட அதிகமாக இருந்திருக்கலாம்" என குலிச் கூறுகிறார். அதே சமயத்தில், ஐரோப்பாவின் இதர மக்கள் அனைவரையும் விட ஹாலந்து மக்கள் அதிகமாக வேலை வாங்கப்பட்டார்கள். அதிகமாக ஏழ்மைப்பட்டிருந்தார்கள், அதிகக் கொடூரத்துடன் ஒடுக்கபபட்டார்கள் என்பதை குலிச் குறிப்பிட மறந்துவிட்டார்.

இன்று தொழிலாதிக்கம் ஏற்பட்டுவிட்டால், வர்த்தக ஆதிக்கம் அதன் விளைவாக ஏற்பட்டு விடுகிறது. பட்டறை உற்பத்தி முறைப்படி பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்ட அந்த நாளில் வர்த்தக ஆதிக்கமே தொழிலாதிக்கத்துக்கு வழி செய்தது. ஆகவே இந்த முறை அப்பொழுது முக்கிய பாத்திரம் வகித்தது. ஐரோப்பாவின் பழைய தெய்வங்களுடன் கன்னத்தோடு கன்னம் ஒட்டினாற்போல, இந்த "விசித்திர தெய்வம்" பீடத்தில் அமர்ந்தது; ஒரு நாள் அது ஒரு உதை உதைத்து, ஒரு தள்ளுத் தள்ளி, அந்த தெய்வங்களையெல்லாம் ஒரே கூட்டமாக வெளியேற்றிவிட்டது. அது உபரி மதிப்பை உண்டாக்குவதே மனித சமூகத்தின் ஒரே நோக்கம், குறிக்கோள் என்று பிரகடனம் செய்துவிட்டது.

[மூலதனம், முதல் பாகம்.]

2

பருத்தி ஜின்னிங் யந்திரம், பருத்தி உற்பத்தியைப் பெருக்கியதைப்போல, யந்திரத் தொழிலின் உடனடி விளைவாக, மூலப்பொருள் 'சப்ளை' அதிகரிக்கிறது. மறுபுறத்தில், யந்திரங்கள் உற்பத்தி செய்யும் பண்டங்கள் மலிவாக இருப்பதாலும், போக்குவரத்து முறைகள் விருத்தியடைந்திருப்பதாலும், அன்னிய மார்க்கெட்டுகளைப் பிடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதர நாடுகளில் கைத்தொழிலை அழிப்பதன் மூலம் அந் நாடுகளை அதன் மூலப் பொருட்களை உற்பத்தி செய்து அளிக்கும் பண்ணைகளாக யந்திரத் தொழில் மாற்றிவிடுகிறது. இந்த வகையில் இந்தியா பிரிட்டனுக்காக பருத்தி, ரோமம், சணல், இண்டிகோ ஆகியவற்றை உற்பத்தி செய்தது. நவீனத் தொழில் வேர் விட்டுள்ள நாடுகள் அனைத்திலும், அது ஒரு பகுதியினரை தேவையில்லாதோராக்கிவிடுகிறது. இவ்வாறு, அயல்நாடுகள் சென்று குடியேறுவதற்கு அவர்களைத் தூண்டி விடுகிறது. அந்த அயல் நாடுகள் தாய்நாட்டின் மூலப்பொருள் பண்ணைகளாகின்றன; உதாரணமாக ஆஸ்திரேலியா ரோமத்தை அளிக்கிறது. ஒரு புதிய சர்வதேச வேலைப் பிரிவினை, நவீனத் தொழிலின் முக்கிய தளங்களுடைய தேவைகளுக்குத் தகுதியான வேலைப் பிரிவினை ஏற்படுகிறது. இது முக்கியமாக தொழில் துறையில் வளர்ந்துள்ள பாகத்துக்கு மூலப் பொருட்களை உற்பத்தி செய்து கொடுக்கும் விவசாயப் பண்ணையாக உலகத்தின் இன்னொரு பாகத்தை மாற்றிவிடுகிறது.

[மூலதனம், முதல் பாகம்.]

3

1500-க்கும் *1800*-க்குமிடையே போர்ச்சுகீசியரும் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயரும் இந்தியாவை வென்றார்கள். **இந்தியாவிலிருந்து** பொருட்களை **இறக்குமதி** செய்வதே அவற்றின் நோக்கமாயிருந்தது. இந்தியாவுக்குப் பொருட்களை ஏற்றுமதி செய்வதைப் பற்றி எவரும் கனவு காணவில்லை. எனினும், வர்த்தகத்தின் நலன்களால் உந்தப்பட்டு, உருவான இந்தக் கண்டுபிடிப்புகளாலும் வெற்றிகளாலும் தொழிலுக்கு எத்தகைய மகத்தான பலன் ஏற்பட்டது? அவை அந்த நாடுகளுக்கு **ஏற்றுமதி** செய்யும் தேவையை முதலில் உண்டாக்கின. அத்துடன் பெருந்தொழில்களை வளர்த்தன.

[கான்ராட் ஷ்மிட் என்பவருக்கு ஏங்கல்ஸ் எழுதியது.
27 அக்டோபர் 1890]

4

இந்தியாவில் பொதுவான எழுச்சி ஏற்படாவிட்டால் தீவிரமான சிக்கல்களாவது பிரிட்டிஷ் சர்க்காருக்கு ஏற்படுமென்பது திண்ணம். வாடகையாகவும், இந்தியர்களுக்கு பிரயோஜனமில்லாத ரயில்வேக்களின் பங்கு வட்டிகளாகவும் ஆங்கிலேயர்கள்

வருஷா வருஷம் எடுத்துக்கொள்வதையும், ராணுவ, சிவில் அதிகாரிகளுக்கு பென்ஷன்களாகவும், ஆப்கானிஸ்தானத்துக்காகவும் இதர யுத்தங்கள் முதலியவற்றுக்காகவும் அவர்கள் எடுத்துக் கொள்வதையும் கணக்கிட்டால் அது **ஆறு கோடி விவசாய, ஆலை உழைப்பாளிகளின் மொத்த உழைப்பாகிறது. பதிலுக்கு எதுவும் கொடுக்காமல்** எடுக்கப்படும் செல்வம் இது. இந்தியாவுக்குள்ளேயே ஆங்கிலேயர்கள் அபகரித்துக் கொண்டதைச் சேர்க்காத கணிப்பு இது. வருஷா வருஷம், இந்தியர்கள் இலவசமாக இங்கிலாந்துக்கு அனுப்பும் தொகை இந்த ஆறு கோடி உழைப்பாளிகளின் உழைப்பு! பழிவாங்கும் முறையில் ரத்தத்தைக் குடிக்கும் நிகழ்ச்சி இது. பஞ்ச வருஷங்கள் ஒன்றோடொன்று மோதுகின்றன; பஞ்சம் இந்த அளவுக்குப்படர்ந்திருப்பதாக ஐரோப்பியர்கள் சந்தேகப்படாத அளவு அவ்வளவு பெரிய பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ரகசிய ஆலோசனைகள் நடந்துகொண்டிருக்கின்றன; இவற்றில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒத்துழைக்கிறார்கள். ஏதோ "உருவாகி"க் கொண்டிருப்பதை பிரிட்டிஷ் சர்க்கார் அறிந்திருக்கிறது. ஆனால் இந்த விவேகமற்ற ஆசாமிகள் (சர்க்காரைச் சேர்ந்தவர்களையே நான் இவ்விதம் குறிப்பிடுகிறேன்) பார்லிமெண்டரி முறையில் பேசுவதாலும் சிந்திப்பதாலும் தம்மைத் தாமே முட்டாளாக்கிக்கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் தெளிவாகப் பார்ப்பதற்குக்கூட விரும்பவில்லை; வரவிருக்கும் ஆபத்தைப் பூர்த்தியாக உணரக்கூட விரும்பவில்லை! மற்றவர்களை மோசம் செய், அவர்களை மோசம் செய்வதன் மூலம், உனக்கு நீயே மோசம் செய்துகொள்—சுருக்கத்தில் சொல்லப்போனால் இதுதான் **பார்லிமெண்டரி விவேகம்** என்பது! அந்த அளவுக்கு நல்லதுதான்!

[டேனியல்ஸனுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதம் *1881* பிப்ரவரி *19*]

5

காலனிக் கொள்கையைப்பற்றி ஆங்கிலேயத் தொழிலாளர்கள் என்ன நினைக்கிறார்களென்று நீ என்னைக் கேட்கிறாய்; நன்று. பொதுவாக அரசியலைப்பற்றி அவர்கள் நினைப்பதைப்போலத் தான்! அதாவது முதலாளிகள் மாதிரியே அவர்கள் சிந்திக்கிறார்கள். இங்கு தொழிலாளர் கட்சி எதுவுமில்லை. கன்சர்வேடிவ்களும் மிதவாத-தீவிரவாதிகளுமே இருக்கிறார்கள். உலக மார்க்கெட்டிலும் காலனிகளிலும் இங்கிலாந்துக்குள்ள ஏகபோகத்தின் விருந்தில் தொழிலாளர்கள் மகிழ்ச்சியுடன் தமது பங்கை அனுபவித்து வருகிறார்கள்; என் அபிப்பிராயத்தில், ஐரோப்பியர்களே குடியேறியுள்ள குடியேற்ற நாடுகளான கானடா, ஆஸ்டிரேலியா, முதலியவை சுதந்திரமடைந்துவிடும். சுதேசி மக்கள் வாழும் நாடுகளான இந்தியா, அல்ஜியர்ஸ், டச்சு, போர்ச்சுகீசிய, ஸ்பானிஷ் காலனிகள் ஆகியவை அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. தற்காலிகமாக, தொழிலாளி வர்க்கம் அந்த நாடுகளைப் பொறுப்பேற்றுக் கொண்டு, சுதந்திரத்துக்குச் சாத்தியமான அளவுக்கு துரித

மாக அவற்றை இட்டுச் செல்லவேண்டும். இந்த நிகழ்ச்சி எப்படி உருவாகும் என்பதைச் சொல்வது கடினம். ஒரு வேளை, அநேகமாக என்று கூடச் சொல்லலாம், இந்தியா ஒரு புரட்சியைச் செய்யும். தனது விமோசனத்தைச் சாதித்துக்கொள்ளும் தொழிலாளி வர்க்கம், காலனி யுத்தம் ஒன்றையும் நடத்த முடியாததாகையால் அந்தப் புரட்சிக்குப் பரிபூரணமாக வழிவிட வேண்டும். அந்தப்புரட்சியால் பலவகைப்பட்ட நாசம் ஏற்படாமல் இருக்காது. எந்தப் புரட்சியிலும் அத்தகைய நாசத்தைத் தவிர்க்க முடியாது. இதே புரட்சி வேறு இடங்களிலும் நடைபெறலாம். உதாரணம், அல்ஜியர்ஸ், எகிப்து. அது நிச்சயமாக **நமக்கு** நல்லதாகும். நமக்கு நாட்டில் போதுமான வேலை இருக்கிறது. ஐரோப்பாவும் வட அமெரிக்காவும் புனரமைக்கப்பட்டால், அவற்றின் சக்தி, பிரமாதமானதாகவிருக்கும்; அவை உதாரணமாகவும் விளங்கும், ஓரளவே நாகரிக வளர்ச்சி அடைந்த நாடுகள் தாமாகவே அவற்றைப் பின்பற்றும். பொருளாதாரத் தேவைகள் மாத்திரமே இதற்குக் காரணமாக விளங்கும் ஆனால் இந்த நாடுகள் சோஷலிஸ்ட் ஏற்பாட்டை அடைவதற்கு முன்னால் என்ன என்ன சமூக அரசியல் கட்டங்களைக் கடக்க வேண்டுமென்று நாம் அனுமானங்களே செய்ய முடியும். ஒரு விஷயம் மட்டிலும் உண்மை. வெற்றியடைந்த தொழிலாளி வர்க்கம், தன்னுடைய வெற்றிக்கே குழிபறிக்காமல், எந்த அன்னிய தேசத்தின் மீதும் சன்மானங்களைத் திணிக்க முடியாது. ஆனால் இதற்கு அர்த்தம் பலவகைப்பட்ட தற்காப்பு யுத்தங்கள் கூடாது என்பதல்ல.*

[காட்ஸ்கிக்கு எங்கல்ஸ் கடிதம். *1882* செப்டம்பர் *12.*]

---

* பொருளாதார அம்சம் மட்டிலும் தானாகவே சகல கஷ்டங்களையும் அகற்றிவிடுமென்று எங்கல்ஸ் கருதவில்லை. பொருளாதாரப் புரட்சி சகல மக்களையும் சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதற்குத் தூண்டிவிடும். ஆனால் எதிர்ப்புரட்சிகளும் யுத்தங்களும் சாத்தியமில்லையென்று இதன் பொருளாகாது. வெற்றியடையும் தொழிலாளி வர்க்கம் எந்த தேசத்தின் மீதும் பலாத்காரமாகத் தன் நல்லாட்சியைத் திணிக்கக்கூடாது என்று எங்கல்ஸ் வலியுறுத்துகிறார்.

தேசியப் பகைமைகள் சுலபத்தில் மறையாது. ஆனால் சோஷலிஸம் வெற்றியடைந்த தேசங்களுக்கிடையே ஜனநாயக உறவுகள் அமையும் பொழுது அவை மறைந்து, நட்புணர்ச்சி பொங்குவதை சோவியத் யூனியனில் பார்க்கிறோம்.

சோஷலிஸத்துக்கு விசுவாசம் செலுத்துவோர்கள் சர்வதேசியத்தை மக்களுக்குப் போதிக்கவேண்டும். ஒடுக்கப்படும் நாடுகளின் பூரண விடுதலைக்காக, ஒடுக்குமுறை நடத்தும் நாட்டின் மக்களிடையே பிரசாரம் செய்து இயக்கம் நடத்துவது சர்வதேசிய போதனைக்கு முதல் நிபந்தனையாகும். ஒடுக்கப்பட்ட நாட்டில் தேச விடுதலைக்காகப் போராடும் பொழுதே, ஆட்சி புரியும் நாட்டின் தொழிலாளி வர்க்க இயக்கத்துடனும் ஜனநாயக இயக்கத்துடனும் நேச உறவு கொள்ளவேண்டும்.—(மொ-ர்)

முற்போக்கு இலக்கியத்தின் முன்னணி நூல்கள்

தாய் [மாக்ஸிம் கார்க்கி எழுதிய பாட்டாளி வர்க்கத்தின் இலக்கியப் பிரகடனம்]	7-8-0
சந்திப்பு [மாக்ஸிம் கார்க்கி எழுதிய கதைகள்]	1-4-0
மே தின வரலாறு [மேதினத்தைப்பற்றிய வரலாறும் அதன் குறிக்கோளும் அடங்கியது. எழுதியவர் அலெக்ஸாண்டர் ட்ராச்டென்பர்க்]	0-8-0
போதும் முதலாளித்துவம் [முதலாளித்துவம் ஒழிய வேண்டியதன் அவசியத்தைத் தர்க்க ரீதியாக விளக்கும் நூல்]	0-14-0
பளிங்குச் சிலை [புரட்சிக்கு முந்திய, பிந்திய ருஷ்ய நாட்டுக் கதைகள்]	1-0-0
முல்லைக் கொடியாள்	3-0-0
ஒரே உரிமை [வித்தன் எழுதிய முற்போக்கு இலக்கியக் கதைகள்]	2-8-0

STAR PUBLICATIONS

Triplicane :: Maras-5.